# இலக்கு

காலாண்டிதழ்

மே 1996

மலர் - 6

## தி.ஜா. நினைவு மலர்

இன்றைய
தமிழ் இலக்கியத்தில்
சிலர் எட்ட முடியாத
சில சிகரங்களைத் தொட்டு
மறைந்து போன
ஜானகிராமனின்
உயிர்வாழும் படைப்புக்களில்
நாம் பெற்றுக் கொள்வதற்கு
எவ்வளவோ உள்ளன.

- எம்.ஏ. நுஃமான்
பேராதனை பல்கலைக் கழகம் (இலங்கை)



## 1995ன்,

ஞானபீட பரிசு பெற்ற

**திரு. எம்.டி. வாசுதேவன் நாயர்**

சாஹித்ய அகாடமி பரிசு பெற்ற

**திரு. பிரபஞ்சன்**

நோர்வே நாட்டின்
வெளிநாட்டார்
இலக்கிய சேவைக்கான
பரிசு பெற்ற

**திரு. வ.ஐ.ச. ஜெயபாலன்**

இலக்கியச் சிந்தனை
நாவல் பரிசு பெற்ற

**திரு. பாவண்ணன்**

அதன் சிறந்த சிறுகதைப்
பரிசு பெற்ற

**திரு. இரா. நடராசன்**

கதா பரிசு பெற்ற
பேராசிரியை **'அம்பை'**

ஆகியோரை

**'இலக்கு'**

இலக்கிய குடும்பம்
மனதாரப் பாராட்டுகிறது.

**பரிசுகள் உங்கள் சாதனைக்கானவை. எனினும் சாதனைகளின் எல்லைகளை அவை தீர்மானித்து விட வில்லை. உங்கள் அடுத்த சாதனைக்கான முயற்சி இங்கிருந்தும் தொடங்க வேண்டும்.**

'இலக்கு' வின்
ஆறாவது மலர் இது.
தாமதமாகவே வருகிறது.
இதன் ஆசிரியன் அடைந்த
விபத்தின் காரணமாகவும்
அச்சகச் சூழ்நிலை காரணமாகவும்
தாமதத்தை தவிர்க்க இயலவில்லை.
'இலக்கு'வின் ஒழுங்கு
இந்த இதழுடன்
உறுதி செய்யப்படுகிறது.
உங்கள் ஆர்வத்துக்கு
மேலான ஆர்வத்தோடு
இதழ்
தொடரும்,
மலர் உட்பட ஆண்டுக்கு
ஐந்து இதழ்களாக.

○●○

உள்ளே...

அம்பை ★ ஞானி
எம். ஏ. நுஃமான் ★ (தி. ஜா) ★ தி. க. சி.
ஸ்ரீபதிபத்மநாபா ★ டி. ஸ்ரீநிவாசராஜகோபாலன்
சாந்தாதந் ★ எஸ். வைதீஸ்வரன் ★ சௌரி
மற்றும் பலர்....

# தி.க.சி. பக்கம்

அமரர் புதுமைப்பித்தன் தமது மனைவி திருமதி கமலா விருத்தாசலத்திற்கு எழுதிய 14 கடிதங்களும், அவர்பால் பேரன்பு கொண்ட திருவனந்தபுரம் எழுத்தாளர் (தமது 'கவிக்குயில்' மலரில் பு.பி.யின் எழுத்துக்களை வெளியிட்டவர்) எஸ். சிதம் பரத்திற்கு எழுதிய ஒரு கடிதமும் நவ. 1994 'சுபமங்களா' இதழில் வெளியாகின (தற்பொழுது 'எனது ஆருயிர்க் கண்ணா ளுக்கு' என்னும் தலைப்பில் வெளியாகியுள்ள நூலில் இவை இடம் பெற்றுள்ளன).

புதுமைப்பித்தனின் இந்த 15 கடிதங்களும் பல ஆண்டு களுக்கு முன்பே வெளியாகியிருக்க வேண்டியவை. உள்ளம் உருக் கும் இக் கடிதங்கள் பு. பி.யின் அகவாழ்வையும் புறவாழ்வை யும், 1940-46-47-48 காலகட்டங்களில் தெளிவுபடுத்துகின்றன; பன்முகம்கொண்ட பு.பி.யின் ஆளுமையை இக்கடிதங்களில் தரி சிக்கிறோம்; சுதந்திரம், சுயமரியாதை, சமத்துவம், மனிதநேயம் இவற்றில் நாட்டமும், பற்றுறுதியும் கொண்ட ஒரு பேனா வீரனின் இதயத்தில் கொத்தளிக்கும் உணர்ச்சிகளையும், இவற் றின் ஊடே வாழ்க்கையைப் பற்றிய அவனது தெளிவான சிந் தனைகளையும் காண்கிறோம். அவற்றில் சில கூறுகளை மட்டும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

★

மகாகவி பாரதியைப்போலவே முழுநேர எழுத்தாளராக வாழ்ந்தவர் புதுமைப்பித்தன்; பாரதியின் சீரிய லட்சியங்களை ஏற்றுக்கொண்ட அவரது வாழ்வில் பெரும்பகுதி வறுமை, கடன் சுமை, பிணிகள், துயரங்கள், இழப்புக்கள், ஏமாற்றங்கள், கொத் தளிப்புகள் என்பவற்றை எதிர்கொள்வதிலேயே கழிந்தது; பல் வேறு துன்பங்களால் அலைக்கழிக்கப் பெற்ற போதிலும் 'வாழ் வின் முட்களில் விழுந்து இரத்தம் கக்கிய' போதிலும் பு. பி. தற்கொலையை நாடவில்லை; பிரச்னைகளிலிருந்து மீள்வதற்காக இறுதிவரை போராடினார் என்பது இக் கடிதங்களில் என்னைக் கவர்ந்த ஒரு முக்கிய அம்சம்.

அது இரண்டாம் போர்க் காலம்; பாசிச வெறியர்களான முசோலினியும், டோஜோவும், சோவியத் யூனியன் உள்ளிட்ட உலகநாடுகளை விழுங்க முயன்ற இருண்ட காலம்; இந்திய சுதந்

(தொடர்ச்சி 89 ம் பக்கம்)

# பசு, பால், பெண்: தி. ஜானகிராமனின் மரப்பசு பற்றிய சில சிந்தனைகள்

- அம்பை

மரத்துப் போன பசு, மரத்தால் ஆன பசு என்று பால் வற்றிப் போன உபயோகமற்ற மிருகமாயும், உயிரே இல்லாத பொம்மை மிருகமாயும் இரு பொருள் படும்படி பெண்ணை உவமித்துக் கூறும் மரப் பசு என்ற தலைப்பு மேற்கொண்ட பாதை பெண்பாலைப் பற்றிய பாரபட்சம், பூடக அவமதிப்பு, பொய்மை நிறைந்த மதிப்பீடுகள் இவற்றால் கட்டபபட்ட பாதை. இந்தப் பாதை இந்த நாவலில் எப்படி எல்லாம் புகுந்து புறப்படுகிறது, இதன் அடித்தளம் என்ன என்று தெரிந்துகொண்டால்தான் இத்தலைப்பையும். அதன் விளக்கத்தையும், இந்த நாவலையும் நாம் புரிந்துகொண்டு விவாதிக்க முடியும்,

பெண்ணின் பால்தன்மை பற்றி ஆணித்தரமாகக் கூறக்கூடியவர்கள் ஆண்கள்தான் என்ற நிலைமை ஆரம்ப காலத்திலிருந்தே இருக்கிறது. அரசன் நகர்வலம் வரும்போது எந்தெந்த வயதுப் பெண்கள் எப்படி எப்படி மோகித்தார்கள், காமுற்றார்கள், பிச்சியானார்கள் என்று உலாக்கள் எழுதியிருப்பது ஆண்கள்தான். அது மட்டுமல்ல, பெண்ணாக மாறி ஆண்கடவுள்கள் மேல் மோகமும், காதலும், பக்தியும் கொள்ளும் அளவு பெண்ணின் பால்தன்மை சுலபமாக யூகித்து, எட்டக்கூடிய ஒன்றாக இருந்திருக்கிறது. பெண் ஆண் பக்தராக மாறி எந்தப் பெண் கடவுளையும் மோகிததததாகச் சரித்திரம் இல்லை. அதனால் பெண்ணின் பால்தன்மை, அவள் தேடல் இதுபற்றி தன்மை நிலையில் எழுத ஒரு ஆண் எழுத்தாளருக்குச் சரித்திரத்தின் பின்புலம் இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் பெண்ணின் பால் தன்மையை விளக்கி, விளக்கத்தினுள் அதைக் குறுக்கிய ஆண்-முயற்சிகளின் பின்னே பெண்ணின் பால்தன்மையின் வீச்சுபற்றியும், அது அடையக்கூடிய ''விபரீத'' எல்லைகள் பற்றியும் ஒரு பயம் இருந்தது என்கலாம். இது ஒரு நிரந்தர சரித்திர பயமாக இருந்துவருகிறது. ''புகையிலை விரிச்சா போச்சு, பொம்பளை சிரிச்சா போச்சு'' போன்ற சாதாரண பழமொழியிலிருந்து வரையறுக்கப்பட்ட எல்லைகளை மீறும் பெண்களுக்கான தண்டனைகள் பற்றிய மாதர் ஹிதோபதேசங்கள் வரை இந்தப் பயத்தின் பிரதிபலிப்பைக் காணலாம். இந்தப் பயத்தை உள்ளடக்கிய நாவல்தான் மரப்பசு. தன்மை நிலையில், ஒரு பெண் தன்னைப் பற்றி நினைத்துச் சொல்வது போல் அமைந்திருந்தாலும், இந்த நாவல் ஒரு பெண்ணின் குரலாக்கிச் சொல்வது ஆணின் பயங்களைக் குறித்து; பெண்ணின் பால்தன்மை பற்றிய அஞ்ஞானத்தையும், குறுகிய நோக்கையும், ஆண் என்ற நிலையி

லிருந்து எழும் அப்பட்டமான ஆயத்தங்களையும், கோணல்களையும் குறித்தது.

எதிர்மறை உணர்வுகளின் மேல் நிறுத்தப்பட்ட பெண்ணின் பால் தன்மை பற்றிய இந்த பாரபட்சமான விவரிப்புகள் மேனி நிறத்தில் தொடங்கி, மைதுனம் வரை எட்டி, பின்னர் அவள் வாழ்க்கையின் அர்த்தம், அவள் தேடல், அவள் வியாபிக்கும் இடம், அவள் பேணும் மொழி எல்லாவற்றின் மேலும் வலை போல் படர்ந்துகொள்கிறது. ஹிந்து பத்திரிகையில், படித்த பையனுக்கு சிவப்பான, அழகான பெண் கேட்டு வரும் திருமண விளம்பரங்களின் நிறம் பற்றிய பாரபட்ச நோக்கு மரப்பசுவின் ஆரம்பப் பக்கங்களிலேயே வந்துவிடுகிறது. அம்மணமாக நிறம் பெண் வைத்தியம். கறுப்பு. ''கறுப்பு அம்மணத்துக்கே இத்தனை ஈர்ப்பு என்றால்...'' (ப. 12) என்று கறுப்பு நிறத்துக்கு ஒரு சொட்டை சொல்லியாகி விடுகிறது. பிறகு கடைசிப் பக்கங்களில் மரகதம் வருகிறாள், கண்ணைப் பறிக்கும் கறுப்புடன். கோபாலி சொல்கிறார் பச்சையப்பனிடம்—அவள் மாத்திரம் இந்த நிறத்தில் இல்லாவிட்டால் அவளைப் பார்ப்பவர்கள் கொத்திக்கொண்டு போய்விடுவார்கள் என்று (ப 247.) மரகதம் அழகு தான். மலைக்க வைக்கும் அழகு. ஆனால் கறுப்பு. கறுப்பு-சிவப்பு பேதங்களிலும் ஆண்—பெண் பாகுபாடு உண்டு. ஆண் கறுப்பு என்றால் அவன் கறுப்பண்ணசாமி (மலர் மஞ்சம் ப. 205). இதை இகழ்ச்சியாக ஒரு சிவப்பான பிராமணப் பையன் சொன்னாலும், திடமான, வலிய உடல் படைத்த அந்தக் கதாபாத்திரத்தின் ஆண்மை அழகுக்கு மெருகூட்டும் விஷயமாகிப் போகிறது அந்தக் கறுப்பு. பிறகு நெஞ்சில் காம உணர்வைக் கிளறும் தேவி சொருபமாகப் பெண் பாத்திரங்களைப் படைப்பவர்கள்கூட, 'கறுப்பு, ஆனால் அழகு' என்ற வர்ணனைக்குப் புறம்பானவர்கள் அல்ல. இத்தகைய வர்ணனைகளை வழக்கமாகப் படித்துப் படித்து, அதை ஒரு அழகுக்கான அளவுகோலாகக் கொண்டுவிட்டதனால் இதை நாம் ஒதுக்குவதற்கில்லை. காரணம் இந்த மொழி ஒரு பெண்ணிடமிருந்து பிறப்பதாக இருக்கிறது அதுவும் அவளிடம் குழந்தையிலிருந்தே—இயற்கையான மொழி போல...இருப்பதுபோல் காட்டப்படும் மொழி சிவப்பு மேல் அதீத விருப்பம் உள்ள குழந்தை. கண்டு சாஸ்திரிகளின் மஞ்சள் ஓடிய வெள்ளை நிறத்தால் கவரப்படும் குழந்தை அவள் வெள்ளைவெளேர் உடம்புக்கு ஏற்பு இல்லாத உள்ளங்கால் அழுக்கைத் துடைக்க விரையும் பெண் குழந்தை.

அம்மணி மரகதத்தைப் பார்ப்பதும் ஒரு ஆணின் கண்ணோட்டத்துடன்தான். ஒரு பெண் இன்னொரு பெண்ணின் அழகைக் கண்டு வியப்பதும், அதை ரசிப்பதும் சகஜமான ஒன்றுதான். அது சாதாரணமாக நடைபெறுவதுதான். பார்க்கப் போனால் உடலிலிருந்தும், அதன்மேல் சுமத்தியுள்ள ஆணாதிக்க மதிப்பீடுகளிலிருந்தும் விடுபட உடலையே ஒரு பிரதிபோல் பாவித்து மறுவாசிப்புச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மறுவாசிப்பின் மைய முயற்சியாக இருப்பது வாழ்க்கை, தன் தடங்களைப் பதித்துள்ள பெண் உடலை அதன் மேல் ஏற்றியுள்ள அர்த்தங்களின் சுமைகளை அகற்றிப் பார்ப்பதுதான். அழகு—அழகின்மை, கறுப்பு—சிவப்பு, இளமை—

முதுமை போன்ற மதிப்பீடுகளிலிருந்தும் நீங்கி உலக வாழ்வில் ஆழத்தப்பட்டிருக்கும் உடலை நேரிடையாக, தைரியமாக கோணல்கள் இல்லாமல் பார்ப்பது. அம்மணி மரகதத்தைப் பார்ப்பது இப்படி இல்லை. ஒரு ஆணைக் கிறங்க வைக்கும் அழகு, அவனைக் காமுற வைக்கும் அழகு என்றுதான் மரகதத்தைப் பார்க்கிறாள். அது மட்டுமில்லை, அவள் கணவன் அவளை அனுபவிக்கத் தகுதியுடையவன்தானா, அவர்கள் எப்படிக் கூடி முயங்குவார்கள் என்றெல்லாம் அவள் சிந்தனை போகிறது. இந்த ஆண் நோக்கு மிகும்போது—கிட்டத்தட்ட அவள் மரகதத்தை உடலால் அடைய நினைக்கிறாளா என்று ஐயம் பிறக்கும்போது—அதற்கு சால்ஜாப்பு, சப்பைக்கட்டு எல்லாம் தேவைப்படுகிறது; தனக்கு ஓரினச் சேர்க்கையில் விருப்பம் இல்லை என்று அவள் தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது(ப. 245).

எது மீறல், எதற்காக மீறல் என்பதில் தி. ஜா.வுக்கு நிறையக் குழப்பங்கள் உள்ளன. இந்தக் குழப்பங்களை எல்லாம் பூசிக்கொண்டு வளைய வருகிறாள் அம்மணி. ஒன்று வீட்டில் உழலும் பத்தினி, அல்லது தாசி என்ற அப்பட்டமான இரு எதிர்நிலைகளில்தான் அவரால் பெண்ணைப் பார்க்க முடிகிறது. அதனால்தான் கோபாலி அம்மணியிடம் ''நீ பிராமண தாசியாகிவிடு'' என்கிறார், இதிலுள்ள முதல் சறுக்கல் தேவதாசிகளைப் பற்றியது. முதலாவது இது தேவதாசிகளை ஒரே முகம் கொண்டவர்களாகக் காண்கிறது. தேவதாசிகள் பலதரப்பட்டவர்கள். பல வகைகளில் இயங்கியவர்கள். தேவதாசிகள் எல்லோருமே கலைஞர்கள் அல்லர். கலைகளுக்குரிய ஞானமும், சிரத்தையும் உள்ளவர்கள் மட்டுமே கலைஞர்கள் ஆனார்கள். மற்றவர்கள் கோவில் பூசைகளில் மட்டும் பங்கு கொண்டனர். உறவுகளைப் பொறுத்தவரை சிலர் ஒரே ஆணின் வைப்பாட்டியாக இருந்தனர்; சிலர் கை மாறினார்கள்; சிலர் வெவ்வேறு பல ஆண்களுடன் ஓர் இரவுக்கு மட்டுமேயான உறவுகளை மேற்கொண்டனர். உறவுகளைத் தேர்ந்தெடுப்பதிலோ, முறிப்பதிலோ ஒரு வயதுவரை எந்தத் தேவதாசிக்கும் சுதந்திரம் இருக்கவில்லை. ஒரு பேராசைக்கார அம்மாவோ, உறவுக் கூட்டமோ அதிகப் பணத்தைக் காட்டும் நபரிடம் ஒரு தேவதாசியைப் பிணைக்கலாம். உயர்ந்த கலைஞர்களாக இருந்த தேவதாசிகள் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் இத்தகைய உறவுகளை முறித்துக் கொண்டு, கலையில் பூரணமாக ஈடுபட்டார்கள். ஆகவே, காமத்தையும், காமம் சார்ந்த உறவுகளையும் விலக்க ஒரு தேவதாசிக்கு ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் சுதந்திரம் இருந்தது. தேவதாசி என்பவள் உடலுறவில் ஈடுபடுபவள் என்ற நிலையில் இருந்து கொண்டே அதை விலக்கும் சுதந்திரத்தையும் அவள் பெறுகிறாள். ஒரு தேவதாசியும் பல வயதுகளைக் கடக்கிறாள். இப்படிப் பாராமல், எல்லாத் தேவதாசிகளையும் வேசிகளாகவே பார்த்ததால்தான், தேவதாசிகளை உறவுக்காரர்களின் கைப்பொம்மையாகாமல் தடுக்கும் உயரிய நோக்கத்துடன் பிறந்த தேவதாசித் தடைச் சட்டம், அவர்கள் கலை முகங்களையும் அழித்துவிட்டது, களையை அறுக்கும் அரிவாள் பயிரையும் வெட்டியது போல. இது சரித்திரம். நுண்ணுணர்வு உள்ளவர்கள் மறக்கக்கூடாத சரித்திரம். இந்தச் சரித்திரத்தில் எல்லாம் தி. ஜா.வுக்குச் சிரத்தை இல்லை. அவரைப் பொறுத்தவரை

ாசி என்பவள் வைப்பாட்டியாக இருக்கும் "சுதந்திரம்" உள்ளவள். அம்மணியின் மீறல் உணர்வுகளுக்கு ஒரு பெயர் கொடுத்தாக வேண்டியிருக்கிறது. அதாவது ஒருத்திக்கு ஒருவன் என்ற நியதியை மீற நினைத்தால் தாசியாவதைத் தவிர வேறு வழியில்லை. வைப்பாட்டியாகும் தாசி.

இரண்டாவது சறுக்கல் மீறல்/சுதந்திரம் என்ற கோட்பாடு பற்றியது. திருமணம் எனும் பந்தத்தில் இருக்க விரும்பவில்லை அம்மணி. தான் புணர வேண்டும் என்று அவள் நினைக்கிறாள். ஒரு ஆவேசப் புணர்ச்சி. இப்படி நினைக்கும முதல் பெண இல்லை அம்மணி. பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர், 'ஆயிரம் யோனிகள் உடையவள் தான்' என்று தன் உடலின் எல்லைகளை விஸ்தரித்துக் கொண்டு, உருவக ரீதியில் உலகைப் புணர்ந்து திகம்பரியாக வளைய வந்தவள் அக்கமகாதேவி எனும் சிவபக்தை. நவீன உலகில் இந்த உடலின் பந்தங்கள் வேறு வகையில் முறிக்கப்படுவது ஏற்க வேண்டியதே. இழுத்துக் கட்டப்பட்ட ஒன்று விடுபடும்போது நிலைகொள்ள அவகாசம எடுப்பதுபோல. உடலால் ஒடுக்கப்பட்டவர்கள், உடலுக்கு இடப்பட்ட எல்லைகளை உடைக்க உடலையே பயன்படுத்துவது பிறிடலின் ஆரம்ப கட்டம்தான். விடுபடும் குதிரை பாய்ந்து ஓடிப் பின்னர் சாவதானமாக நடப்பது போல் இதுவும் ஒரு கட்டம்தான். இலக்கு அது அல்ல. இந்தக் கட்டத்திலிருந்து உடல் வெகு எளிதாக வெளிப்பட்டுவிடுகிறது. ஒரு ஆண், பெண் உடலுக்கு அலைவது போன்றது இல்லை இது. இது தேடலின் ஒரு கட்டம். உடம்பையும், தன்னையும், உலகையும், விண்ணையும், வானையும் புரிந்துகொள்ளும ஒரு கட்டம். இப்படி எல்லாம் இதைப் பார்க்க தி ஜா.வுக்கு முடியவில்லை. காரணம் இவர் எல்லாவற்றையும், ஏற்கனவே உள்ள கச்சிதமான அடைப்புக்களுக்குள் போட விரும்புகிறார். மனைவி அல்லாத மற்றப் பெண்களுடன் தொடர்புகொள்ளும் ஆண் கோபாலி போன்ற கலைஞன். கணவனே வேண்டாம் எனும் பெண் பரத்தையாகத்தான் இருக்க முடியும் தி.ஜா வைப் பொறுத்த வரை. அவளை வைப்பாட்டியாக வைத்து 'கௌரவதை'யைத் தருவது ஆண் தான். இப்படிப்பட்ட "சுதந்திரத்"தைத்தான் அம்மணிக்கு அளிக்கிறார் தி ஜா. இதில் என்ன "சுதந்திரத்"தை அம்மணி காண்கிறாள் என்று தெரியவில்லை. இளம் விதவையான தன் மகளை மொட்டையடிக்கும் கண்டு சாஸ்திரிகளை வெறுக்கும் அவள் பதினைந்து வயதில் தன் பெண்ணைத் திருமணம் செய்து தந்துவிட்ட, ஒரு ஆணைப் பொறுத்தவரை சமூகம் அங்கீகரிக்கும் உறவுகளில் தப்பாமல் ஈடுபடும் கோபாலியை, எப்படி தன்னை ஆதரிப்பவராக ஏற்க முடியும்? கோபாலி ஏற்பாடு செய்த வீட்டில், அவர் ஆதரவில் வாழ்வது எந்த வகையில் அம்மணியைச் சுதந்திரப்படுத்தியது என்று புரியவில்லை. கோபாலி அவளை உடலளவில் திருப்தி செய்கிறாரா என்று கூடத் தெளிவாகப் புரியவில்லை. அம்மணியைச் சுருதி கூட்டி விட்டு மீட்டாத ஆசாமியாக இருக்கிறார் அவர். (ப. 105) எல்லோரிடமும் அவளைத் தன் பெண் போல என்று கூறிக்கொண்டு, இரவில் அவளுடன் உறவை விழையும் நபராகவும் இருக்கிறார். இந்த நிலை அம்மணியின் தேடலின் தரத்தை வெகுவாகக் குறைக்கிறது. எந்த

உள்நோக்கமும் இல்லாமல், உறவுகளை மேற்கொள்ளும் சுதந்தரி யாக இல்லாமல், ஒருவனைப் பயன்படுத்துபவளாக அவளைக் காட்டு கிறது. இது இத்தகைய தேடலையே இழிவு படுத்தி, இத்தகைய பெண்களைக் குழப்பம் நிறைந்தவர்களாகக் காட்டுகிறது. இதை விட வாகான பெண் ''சுதந்திரம்''—ஆண்களுக்கு வாகானது— கற்பனை செய்ய முடியுமா என்ன? ஆண்கள் அலைந்தால் அவர்கள் இன்னமும் இசை மும்மூர்த்திகளைப் பூசை செய்யும், ஆத்மாவைத் தொடும்படி பாடும் கோபாலி போன்ற பாடகர்களாக இருக்கலாம். ஜொலிக்கும் உடலும், முகமும் உள்ள அருணகிரிநாதர், பட்டினத் தடிகளாகலாம். ஆனால் பெண் பெறுவது தண்டனைதான். அந்த மோகத்தால் சிவந்து, மேடிட்ட கன்னங்களும், வெளுத்த கூந்தலும், ஒரு ஆணின் ஆதரவு தேவை என்று நினைக்கும் அம்மணியாகும் தண்டனை. அவளுக்கு முற்றிலும் எதிரான மரகதம் அவள் ஆதர்ச மாகிப் போகிறாள். இதில் முதுமை பற்றியும் சில சிக்கல்கள் உள்ளன. நாவலின் ஆரம்பத்தில் அம்மணிக்கு, கோபாலியுடன் உறவை மேற்கொள்ளும்போது இருபது வயது. கோபாலிக்கு நாற்பத்தேழு வயது. இருபத்தேழு வயது வித்தியாசம். நாவலின் முடிவில் கோபாலிக்கு அறுபத்தோரு வயது. அம்மணிக்கு முப்பத்து நாலு இருக்க வேண்டும். ஆனால் தி.ஜா. முப்பத்தெட்டாக்கி, கிழவி யும் ஆக்கிவிடுகிறார். தி.ஜா.வுக்குக் கணக்குத் தெரியாது என்றில்லை. முப்பதை ஒரு பெண் தாண்டிய பிறகு முப்பத்து நாலானால் என்ன, முப்பத்தெட்டானால் என்ன என்ற எண்ணம் தான். முப்பதைத் தாண்டிய பெண்கள் தமிழ்க் கதைகளில் ''முதுமை''யை எட்டுவது எந்தப் புதுமையும் இல்லை. பல நாடு களுக்குச் சென்று பயணக் கட்டுரைகள் எழுதும் ஒரு ஆண் எழுத் தாளர்,அவர்களை ''ஊசிப்போன பண்டம்'' என்றே கூறியிருக்கிறார். கடைசியில் அம்மணிக்கு ஞானம் பிறப்பது இந்த ''முதுமை'' வந்து தாக்கும்போதுதான். உடனே அவளுக்குப் பட்டாபியின் உடமை யாக வேண்டும், அவன் அவள் உடமையாக வேண்டும் என்று தோன்றிவிடுகிறது. இதுதான் தி.ஜா. அம்மணிக்கு அளிக்கும் ஞானம். அவள் வாழ்க்கையின் குழப்பங்களுடன் கூடிய தேடல், அவள் மீறல் எல்லாவற்றையுமே இல்லாமல் செய்துவிடும் இறுதித் தண்டனை. புணர்ச்சியில் பெண் மேலேயும், ஆண் கீழேயும் இருந்த நிலை மாறியதால்தான் பெண்ணின் நிலை இழிபட்டது என்றும், காளிதான் பெண்ணின் உண்மை சொரூபம் என்றும் வாதிடும் ஒரு பெண் மூப்பையும், நரைத்தலையும் கற்பனையே செய்யாதது போலக் கலங்குகிறாள். முடிவில் அவளிடம் எந்தக் கேள்விக்கும் பதிலில்லை. ''பட்டாபியைக் கேட்டுச் சொல்கிறேன்'' என்பதுதான் அவள் முடிவாகச் சொல்வது. ''ஏதோ குதித்தாயே? பறந்தாயே? வீழ்த்தினேன் பார்த்தாயா உன்னை?'' என்றஒரு ஆணின் கொக்கரிப்பு என் காதில் ஒலித்தது முடிவில்.

இவை எல்லாம் நாவலில் உள்ள பாதைகள். **மரப்பசு** என்ற தலைப்பு இந்தப் பாதைகள் இட்டுச் செல்லும் இலக்கு. சரி. பசுவைப் பற்றிப் பார்ப்போம். பசு பால் தரும் என்பதுதான் ஒரு குழந்தை முதலில் கற்பது. பால் தராத பசுவைப் பற்றி நினைக்க

முடிவதில்லை. பால் தரும் பசு நல்ல பசு, பால் தராத பசு கெட்ட பசு. தன் ரத்தத்தைப் பாலாக்கித் தருவது பசு. வேதங்களில் அகிலம் ஒரு பசு. அது நல்ல பாலையும் கெட்ட பாலையும் தருகிறது. பால் தராத பசு இயற்கையை மீறுவதாகவே கருதப்படுகிறது. **விஷ்ணு புராணத்தில்** அகிலப் பசு ஒருமுறை தன் பாலைத்தர மறுக்கிறது. தாக்கப் பட்ட பிறகுதான் அது பாலைத் தருகிறது. காமதேனுப் பசு பாலைப் பொழியும் தாயாகவே காணப்படுகிறது. பாலைத் தருபவள் நல்ல தாய். பாலைத் தன் உடலிலிருந்து வெளியேற்றாமல் இருப்பவள் கெட்ட தாய். பூதனை கிருஷ்ணனுக்கு முலையில் விஷத்துடன் பாலூட்ட வருகிறாள். கிருஷ்ணன் அவளை அழிக்கிறான். ஆனால் அவள் செல்வது சொர்க்கத்துக்கு. பாலூட்டும் கெட்ட பெண்களுக் குக்கூட மோட்சம் உண்டு. ஆனால் ஏற்கனவே முடியாதவர்கள் தாயல்லாதவர்கள். அம்மணி தாயாக மறுக்கிறாள். இதற்குத்தான் அவளுக்குத் தண்டனை. தாயாவது இயற்கை; பெண்ணுக்கு இயற்கையாகவே உள்ள விழைவு என்று கூறும் உலகில் அவள் தாய்மையை மறுக்கிறாள். தாயாவது இயற்கை மட்டுமல்ல, ஒரு பெண்ணின் பால்தன்மையே தாய்மையை மையமாக்கியதுதான் என்று பொதுவாகக் கருதப்படும்போது, இங்கு பசுவின் மடிப் பால், பெண்ணின் முலைப்பால் இரண்டுமே, வெறும் பாலாக மட்டுமல்லா மல் கருப்பை வளப்பத்துக்கும், காம உணர்வுக்கும் குறியீடாகிறது. பெண்ணின் பால் தன்மை அவள் உடலில் இரு அங்கங்களில் இருப்ப தாகக் கருதப்படுகிறது. அவள் யோனியிலும், முலைகளிலும். பசு வின் மடியும், அதிலிருந்து பொழியும் பாலும் இவ்வாறே இரு தன்மை யுடையதாய், ஆண்குறிக்கு ஈடான பெண்குறியாய் கருதப்படுவதை நாம் பல புராணக் கதைகளிலும் காணலாம். **ஸ்கந்த புராணத்தில்** ஒரு பசு லிங்கத்தின் மேல் தன் மடிப்பாலைப் பொழிகிறது. ஒரு அரசன் பசுவை அம்பால் கொல்ல வருகிறான். பசு அவனைத் தாக்கிக் கொல்கிறது. ஆனால் இந்தக் களேபரத்தில் லிங்கத்தைத் தன் காலால் உதைத்து உருக்குலைத்து விடுகிறது பசு. வெண்மை நிறத்தில், உருகின மெழுகுவர்த்திபோல ஆகிவிடுகிறது லிங்கம். லிங்கத்திற்குக் கோபமே வரவில்லை. பசு தன்னைத் தொட்டது குழந்தை முத்தம் போல் அதற்கு இனிக்கிறது. இதே கதையின் இன்னொரு வடிவில், சிவன் லிங்கத்தினின்றும் தோன்றி, பசுவின் கொம்பாலும், குளம்பாலும் ஏற்பட்ட வடுக்களை உமையின் முலை களும், வளையல்களும் ஏற்படுத்திய காயங்களை ஏற்றுக்கொண்ட அதே ஆனந்தத்துடன் நான் ஏற்கிறேன் என்கிறார். இதில் பால் பாலாக மட்டும் இல்லாமல் பால் தன்மையாகவே கொள்ளப்படுகிறது. பசுவையும் பெண்ணையும் இணைக்க இப்படிப் பல பக்திப் புராணக்

கதைக் குறியீடுகள் உண்டு. பெண் உடலின் ''இயற்கை'' என்று கருதப்படும் இத்தகைய பால்தன்மையை மீறும் பெண்கள் நம் பழங் கதைகளில் ஆண் முனிவர்களைப் போல் உடலைத் தாண்டாமல், உடலையே துறக்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பல அற்புதங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. அவ்வையார் இளமை உடலைத் துறந்து முதுமையை மேற்கொள்கிறார். காரைக்கால் அம்மையாரோ உடலின் சதை, தோல், திரவங்கள் எல்லாவற்றையும் துறந்து எலும்புக் கூடாகி விடுகிறார்.

அம்மணி பசுவைப் பற்றிக் கற்பனை செய்கிறாள். இவ்வளவு தெளிவான, பசுவின் பாலையும் அவள் பால்தன்மையையும் இணைக் கும்படியான நேரடி உவமையுடன் கூடிய, விவரமான கற்பனை வருவ தற்கான எந்தச் சாத்தியக்கூறுகளும் அவள் கதாபாத்திரத்தில் இல்லை. அதனால்தான் ப்ரூஸ் என்ற ஆணின் கண்ணோட்டில் அதைக் காண வேண்டியிருக்கிறது. தெளிவில்லாவிட்டாலும் தன் சுய உணர்வுடன் உறவுகளில் ஈடுபட்ட அவள் எவ்வாறு தன்னைப் பசுவுடன் உவமித்துக்கொள்ள முடியும்? பசுவின் பால் வற்றியதும் அது விலக்கப்படுவதைப் போல, அவள் பால்தன்மையின் ஒரு கட்டம் தாண்டியதும் அவளும் தெருவோரத்தில் கிடப்பாள் என்று அவள் எப்படி நினைக்க முடியும்? அப்படியானால் இந்த உறவுகளில் அவள் ஒன்றுமே அடையவில்லையா என்ன? மற்றவர் களுக்காகவே தன் பால்தன்மையை அவள் வெளிப்படுத்தினாள் என்றால், இந்த அதீத ''தியாகத்''துக்கு அவளைத் தூண்டியது எது? அதனால்தான் ப்ரூஸ் கற்பனையின் மூலாதாரமாகவருகிறான். தி.ஜா. அம்மணியின் பாத்திரத்தை அணுகும் விதத்தில், இப்படிப் பட்ட கற்பனை / கனவு வருவதைத் தவிர வேறு வழியில்லை. பெண்ணைப் பற்றியும் பசுவைப் பற்றியுமான இந்தப் பிம்பம் உள் மனதில் கலாசாரத் தாக்கமாய் புதைந்து கிடக்கிறது. பாலைப்போல வழங்கப்படும் ஒன்றுதான் பெண்ணின் பால்தன்மை· ஒரு பெண்ணின் தேடலை ஆணாதிக்கக் கண்ணோட்டத்தில் இப்படித்தான் பார்க்க முடியும். வாழ்க்கையில் முப்பது வயதைத் தாண்டியவுடன் அம்மணி தன் பால்தன்மையை பசுவின் பாலுக்கு ஈடாக்குகிறாள். பசு பால் தருவது போல் இவளும் பால்தன்மையை வெளிப்படுத்தியதாக—தந்ததாக—நினைக்கிறாள். திடீரென்று சுய தேடல், உலகை அறியும் விளைவு, பிணைப்புக்கள் இல்லாத உறவுகளை நாடுவது எல்லாமே, எந்தப் பலனையும் எதிர்பாராமல் பால் தரும் பசுவின் தியாகமாகி விடுகிறது. தான் உபயோகப்படுத்தப்பட்ட ஒன்றாக அவள் நினைக்கிறாள். அதுவும் தெருவில், யாரும் சீந்தாத ஒரு

மிருகமாய். அவள் பால்தன்மையின் ஒரு அங்கம்தான் காமம். முதுமை அதன் வேகத்தைக் குறைத்தால் அவள் நிலை குலைய வேண்டிய தில்லை. சாவு பயத்தால் பீடிக்கப்பட வேண்டியதில்லை. ஆனால் அவ்வளவுதான் அம்மணி. உடம்பை மட்டுமே ஒட்டியது அவள் தேடல். உடம்பு மாறியதும் அத்தனையும் சரிகிறது. அவள் இரு வகையில் சபிக்கப்பட்டவள். முதலாவது, பசு பால் தருவது போல் அவள் தன் பால் தன்மையைக் காட்டும் தாராளத்துக்கு ஒரு சாபம். இரண்டாவது, தன் உடலின் நிஜமான பாலை—முலைப்பாலை— அவள் எந்தக் குழந்தைக்கும் ஊட்டாததற்கான சாபம்.

வெறும் மரப்பசுவாக—மரத்தால் ஆன பசுவாக—இருந்திருந் தால் தான் இப்படிச் சீந்துவாரின்றி இருக்க வேண்டாமே என்று நினைக்கிறது தெருவில் செத்த பசு. செத்த பிறகு எது நினைவு? சரி. அது அப்படி நினைப்பதாக அம்மணி நினைக்கிறாள். அது மட்டுமில்லை. தானும் மரத்தால் ஆன பசுவாக இருந்தால் காலத் தின் எந்தத் தொடலும் இன்றி மேசை மேல் வைக்கும் அலங்காரப் பொருளாக இருந்திருக்கலாமே என்று நினைக்கிறாள். கடைசியில் ஒரு ஜடப் பொருளாகவா இத்தனை ஓட்டம்?

மகிஷனைக் கொல்ல முக்கடவுள்களும் தங்கள் மூவரின் சக்தியை யும் ஒன்று திரட்டி, அதன் வடிவாய்க் காளியை உருவாக்குகிறார்கள். மகிஷனிடம் காளி, தான் பெண் உருவில் இருந்தாலும் பெண் அல்ல என்கிறாள். எல்லா வகை அநீதியையும் குலைக்க வரும் காளி போலக் கிளம்பும் அம்மணியும் கோபாலி, பட்டாபி, ப்ரூஸ் என்ற மூவரால் உருவாக்கப்படுபவள்தான். ஆனால் அவள் எந்த சம்ஹாரத்தையும் செய்யாமல் விட்டுவிடுகிறாள். பெண்ணின் தேடல், அவள் உடல், உலகம், வாழ்க்கை இவற்றிலிருந்து எழும் கேள்வி களின் உருவமான மகிஷன் அவளால் சம்ஹாரம் செய்யப் படாமல் நிற்கிறான். தெருவில், செத்து நாறிக் கிடக்கும் பசுவாக தன்னைப் பார்த்துக்கொள்பவளாகத்தான் அம்மணியை உருவாக்க முடிகிறது தி.ஜா.வால். இதையெல்லாம் மீறி, ஒரு ஜீவனுள்ள பெண் பாத்திரத்தைக் கற்பனை செய்யவும், படைக்கவும் நமக்குத் தேவைப் படுவது பெண் என்ற விஷயத்தைப் புரிந்துகொள்ளும் முதலடியாய், காலம் காலமாக நம்முள் ஊறிக் கிடப்பவற்றைத் துறக்கும் செருக்கின்மை. அதை ஒட்டி வரும் அடக்கம்.

O O O

# இலக்கு

காலாண்டிதழ்

மலர்—6

ஆசிரியர் :

தேவகாந்தன்

**ELAKKU**

2/158, Moovarasam Pattu
Main Road,
Madras-600 091
(INDIA)


## 'இலக்கு'வுக்கு பரிசு

'தாஸ்னா' (Tasna-தமிழ் சிற்றிதழ்கள் சங்கம்)வின் 1995ம் ஆண்டுக்கான சிறந்த சிற்றிதழ்களென தேர்வாகிய இதழ்களுள் 'இலக்கு'வும் ஒன்றென அறிவிக்கப்பட்டுள்ளதை படைப்பாளிகள், வாசகர், விற்பனையளார் சந்தாதாரர் ஆகிய 'இலக்கு' இலக்கிய குடும்பத்தார்க்கு மிக்க மகிழ்ச்சியோடு அறியத் தருகிறோம்.

# எண்ணத்தை எழுதுகிறேன்...

தமிழிலக்கியத்தில் சாதனை புரிந்தவர்களை அவர்களது படைப்புகளினூடாகவே இனங்கண்டுவிடுகிற வகையில், முடிந்தவரை ஆழமாக, குறைந்தபட்சம் நினைவிலேற்றி சற்று யோசனை செய்கிற அளவுக்காவது, நினைவு மலர்களைக் கொண்டுவர வேண்டும் எள்பதே 'இலக்கு'வின் ஆசை.

அந்த வரிசையில் இந்த இதழ் தி. ஜா. நினைவு மலராக வெளிவருகிறது.

'இலக்கு' முதலாம் ஆண்டு நிறைவு மலருக்கு கிடைத்த வரவேற்பு, உழைப்பும் ஊக்கமும் எல்லைகளையும் தொடும் என்பதை

> > >

---

## 1995-ல் தோன்றிய சில

ஈழத்தின் சிறந்த இலக்கிய விமர்சகரும், கவிவாணரும் ஆகிய திரு. சில்லையூர் செல்வராசன் காலமாகிவிட்டார். இலக்கிய உலகின் இப்பேரிழப்புக்கு அன்னாரின் குடும்பத்தாரோடு சேர்ந்து நாமும் அஞ்சலி செலுத்துகிறோம்.

x x x

தமிழில் இலக்கியப் பத்திரிகையொன்றை ஜனரஞ்சக தளத்துக்கு விரிவாக்க முடியும் என்ற நம்பிக்கையை, செயற்பாட்டில் நிரூபித்து வரும் அதன் முதல் கட்டத்தில் திரு. கோமல் மறைந்தது தமிழ் இலக்கிய பத்திரிகை உலகத்துக்கு ஒரு மகத்தான இழப்பே! அன்னாரை இழந்து வருந்தும் அவர் உறவினர்க்கு 'இலக்கு'

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!

# இலக்கு

காலாண்டிதழ்

**மலர் 6**

மீண்டுமொருமுறை நம்மை உணர வைத்திருக்கின்றன. இந்தப் பெருமை ஆசிரியனென்கிற இந்த தனியொரு மனிதனுக்கு மட்டுமானதல்ல, படைப்பாளிகள், வாசகர், விற்பனையாளர், சந்தாதாரர் ஆகிய 'இலக்கு—இலக்கிய குடும்பத்தார்'க்கே என்பதையும் அடக்கத்தோடு இச் சந்தர்ப்பத்தில் எண்ணிக்கொள்கிறேன்.

கரிசனையோடு புதிய புதிய ஆலோசனைகள் சொல்லியிருக்கிறார்கள். யாவுமே சீர்தூக்கிப் பார்க்கப்படும்; பொருத்தமான ஆலோசனைகள் பொருத்தமான நேரத்தில் செயல்படுத்தப்படும். ஆலோசனைகள் வழங்கிய அன்பர்களுக்கு எம் மனமார்ந்த நன்றிகள். விரைவில் மீண்டும் சந்திப்போம்.

---

# புதிய தமிழ் நட்சத்திரங்கள்!

இலக்கியக் குடும்பம் தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

x x x

ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளரும் விமர்சகருமான திரு. எஸ். அகஸ்தியர் 8-12-95 அன்று பிரான்சில் காலமானார்.

அன்னாரின் இலக்கிய ஆளுமையை ஈழம் மட்டுமின்றி தமிழகமும் நன்கறியும். கவிதைத்துறை மூலம் இலக்கிய உலகுக்கு அறிமுகமான திரு. அகஸ்தியர், சிறுகதை, நாவல், நாடகம், விமர்சனம், கட்டுரை என்று பல்வேறு ஊடகங்கள் மூலமும் தமிழ் வளர்த்த சிறப்புக்குரியவராகிறார். சோவியத்தில் வெளிவந்த தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பில் 'வட்டி' என்னும் இவரது சிறுகதை இடம்பெற்றுள்ளது. OO

# மரணம் உனக்கு முடிவல்ல!

கவிஞர்
**வைரமுத்து**

இலங்கைத் தென்றலே!
இனிய சோதரா!

பல்கலை வேந்தனே!
பைந்தமிழ் வீணையே!

உனக்கா மரணம்!

காற்றுக்கா மூர்ச்சை!
வானுக்கா முடிவு?
கதிருக்கா இரவு?
தமிழுக்கா மரணம்?

மரணத்தின் ஏட்டில் ஏன்
இத்தனை எழுத்துப் பிழை?

நூறாண்டுத் தமிழை
காலம் ஏன்
பாதி ஆண்டிலே
பறித்துக் கொண்டது?

புறநானூற்றுக்கும்
புதுக்கவிதைக்கும்
பாலம் கட்டிய
பாட்டுத் தமிழே!

தான்தோன்றிக் கவிராயர்
என்றதொரு புனைபெயரில்
தேனூற்றும் தமிழைத்
தெளித்துவிட்ட பாவலனே!

ஒருவன் மறைந்தால்
ஒருதுறை புலம்பும்

உன் மறைவால்
ஒவ்வொரு துறையும்
தலைவனை இழந்ததே!

மரணத்தின்
முதல் நிமிடத்தில்
என் பெயரை
உச்சரித்தாயாம்

உயிர் உடம்பில்
உள்ளமட்டும்
உன் புகழை
நானுரைப்பேன்!

— O —

நன்றி: திரு. ஐப்பார்

# மார்க்சியமும் தலித் இலக்கியமும்

- ஞானி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## 4

மக்கள் விடுதலை நோக்கில்தான் இலக்கியக் கோட்பாடு அமைய முடியும் என்ற பொதுக் கருத்தின் அடிப்படையில், தலித் இலக்கியம் பற்றி, தலித் இலக்கியத்திற்கு தனி கோட்பாடு தேவையா என்பது பற்றி இப்பொழுது பார்க்கலாம். முதலில் தலித் சமூகத்தின் விடுதலை எவ்வாறு சாத்தியப்படும் என்பது பற்றிய பார்வை செலுத்துவது தேவை. அதன் வழியே இலக்கியக் கோட்பாட்டிற்குச் செல்லலாம்.

வரலாற்றின் விளிம்பில் அல்லது வெளியில் இருக்கும் தலித் மக்கள் வரலாற்றின் மையத்தை நோக்கி இயங்கியாக வேண்டும். ஆதிக்க சக்திகளிடமிருந்து வரலாற்றைக் கைப்பற்றி தமதாக்கிக் கொள்ள வேண்டும. இதன் மூலம்தான் மக்களுக்கு விடுதலை சாத்தியம். இத்தகைய நோக்கு, பாட்டாளிகள் உட்பட உழைக்கும் மக்கள் அனைவருக்கும் மார்க்சியம் முன் வைத்திருக்கிற நெறி. பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிககம் உட்பட புதிய காலனியம்/ஏகாதிபத்தியத்தின் தாக்குதல், அந்தந்த நாட்டு முதலாளியத்தோடும் அரசு அதிகாரத்தோடும் மக்கள் மீது உரத்த அளவில் சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் தொடர்ந்து திணிக்கிற இன்றைய சூழல பாட்டாளி வர்க்கமும் வரலாற்றின் ஓரத்திற்கு விரட்டப்படுகிறது. உழவர்கள் மேலும் அதிக தொலைவிற்கு விரட்டப்படுகிறார்கள். தலித் மக்களின் நிலைமை மேலும் கடுமையாகும். பெண்களின் நிலைமை பற்றிச் சொல்ல வேண்டியது இல்லை. இத்தகைய நிலவரங்கள் இங்கு தெளிவாக தெரிகின்றன. பாட்டாளிகள் உழவர்கள் ஆகியவர்களை வரலாற்று இயக்கத்தில் எவ்வாறு கொண்டு சேர்ப்பது என்பது உலக அளவில் மார்க்சியருக்கும் கடுமையான சிக்கல் ஆகிவிடுகிறது. இந்த பின்னணியில் தான் தலித் மக்களைப் பற்றி சிந்திக்கிறோம்.

வேறு எந்த சமூக பிரிவைக் காட்டிலும் தலித் மக்கள் தீண்டாமை எனப்படுகிற சாதிக் கொடுமைக்கு கடுமையாக உள்

ளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு சாதியும் தனக்கு மேலுள்ள சாதி / சாதிகளால் இழிவாக நடத்தப்படுகின்றன என்பது உண்மை என்றாலும், தீண்டாமைக் கொடுமையால் பாதிக்கப்படுவது தலித் சமூகம் தான். சாதியம் என்ற அமைப்பு தகர்க்கப்பட்டால் ஒழிய தீண்டாமையிலிருந்து தலித் மக்களுக்கு விடுதலை இல்லை என்பது புரிந்து கொள்ள முடியும். தீண்டாமையை பிற சூழலிலிருந்து தனிப்படுத்தித் தகர்க்க முடியுமா என்பதும் கேள்வி. எனினும தீண்டாமைக்கு எதிராகத் தாங்களும் மனிதர்கள் தான் என்ற முறையில் தன்மானத்தைப்பெற தலித் மக்கள் பிற சாதியினருக்கு எதிராக போராடித் தான் தீர வேண்டும். இந்த முறையில் இது தலித்மக்களின் உடனடி கடமை, மற்றும் தலித் அரசியல் இதற்காக நூற்றுக் கணக்கானவர்களை பல்லாண்டுகளுக்கு உயிர் கொடுத்தும் போராடவேண்டியிருக்கும். தவிர்க்க இயலாதது இந்த இழப்பு. கிராமப்புறங்களில், இத்தகைய போராட்டங்களின் விளைவாக ஆதிக்கச் சாதியரோடு மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதியினரும் இணைந்து தலித் மக்கள் மீது தாக்குதல் தொடுப்பதும் கண்கூடு. இந்த சூழலில் தலித் மக்களோடு ஒத்துழைக்கும் முறையில் தோழமை இயக்கங்களும் தேவைப்படுகின்றன.

நாம் ஏற்கனவே பார்த்தபடி சமுதாயம் முழுவதும் உள்ள உழைக்கும் மக்கள் மீது ஆதிக்கவாதிகளின் சுரண்டல் தொடர்ந்து அதிகரித்து வரும் சூழலில் சாதியக் கொடுமையோடு சுரண்டலின் அடிப்படையில் ஒடுக்குமுறையும் தலித் மக்கள் மீது கடுமையாக திணிக்கப்படும் என்பதையும் சேர்த்துப் பார்த்தால், தலித் மக்கள் இந்த இருவகைப் போராட்டங்களிலும ஒருசேர போராட வேண்டிய நெருக்கடிக்குள் தள்ளப்படுகிறார்கள். தலித் மக்கள் மத்தியில் கடந்த ஒரு தலைமுறைக் காலத்தில் தோன்றியுள்ள படிப்பாளிகளும் அறிவாளிகளும், முதலில் தீண்டாமைக் கொடுமைக்கு எதிராக போராட்டம், பிறகு தான் வேறுவகை போராட்டம என்று இந்த இரண்டு வகைப் போராட்டத்தையும் எதிர்நிலைப் படுத்துவது என்ற போக்கு ஏற்கக்கூடியதாக இல்லை. இந்த இரு வகைப் போராட்டத்தையும் எப்படி ஒருங்கிணைத்து செய்வது என்பதும் சிக்கலாக உள்ளது.

வரலாற்றின் மையத்தை நோக்கி தலித் மக்கள் நகர வேண்டும் இயங்க வேண்டும் என்று கூறினோம். எப்படி இதைச்செய்வது என்பது ஒரு கேள்வி. கிராம்கி கூறியபடி புரட்சிகரமான சமூக மாற்றத்திற்கான முன் நிபந்தனைகளில் ஒன்று புரட்சியில் ஈடுபடும் மக்கள் தன் கலாச்சார மேலாண்மையை நிறுவ வேண்டும். 'பாட்டாளி வர்க்கத்தினுள் சோசலிச உணர்வுகளை புகுத்துவது அறிவாளிகளின் கடமை' என்று லெனின் கூறியதையும் இங்கு நினைவு கூரலாம். மரபு வகையிலான அறிவாளிகளிலிருந்தும், மரபின் ஆதிக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட உயிர்ப்பாற்றல் மிக்க அறிவாளிகள் பற்றியும் கிராம்கி

கூறியதை இங்கு நினைவு கூரலாம். தலித் மக்கள் வரலாற்றின் மையம் நோக்கி எவ்வாறு இயங்குவது என்பது பற்றி சில இங்கு பார்ப்போம்.

மரபுமுறை வேளாண்மையில் தேர்ந்த அறிவுடையவர்கள் கிராமப்புறத்தில் உள்ள தலித்மக்கள். நவீனமுறையிலான சாகுபடி முறை நிலவளத்தையும், நீரையும், மக்கள் நலத்தையும் கடுமையாகப்பாதிக்கிறது என்பதால் இப்போது மரபுமுறைவேளாண்மைக்கு மெதுவாகவேனும் திரும்ப வேண்டியிருக்கிறது. தலித் மக்களுக்கு இது ஒரு வாய்ப்பாக அமைய முடியும். சிறு நிலவுடமையாளராகவாவது இருக்கும் தலித் மக்கள் இதைப் பற்றிச் சிந்திக்க முடியும். வேளாண்மையைப் போலவே கால்நடை வளர்ப்பிலும் தலித் மக்களின் தேர்ச்சியை குறிப்பிடலாம். நகரத்தில் தீண்டாமை குறைவு என்பதைக் காரணம் காட்டி நகரிய பெருக்கத்திற்கு தலித் மக்கள் காரணியாக இருக்கலாம் என்பது பற்றியும் சிந்திக்கலாம். காலணிகள் தயாரித்தல், தோல் பதனிடுதல் ஆகிய துறைகளில் தலித் மக்களின் தேர்ச்சியை நகர்ப் புறத்தில் தலித் மக்கள் அல்லாத பிற சாதியைச்சேர்ந்த சிறிய/பெரிய முதலாளிகள் பயனபடுத்திக் கொள்கிறார்கள். துணிகளை சலவை செய்தல், முடி திருத்தல் ஆகியனவும் நகரியம் சார்ந்த தொழில்கள் ஆகி வருகின்றன. தலித் மக்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள், இடஒதுக்கீடு காரணமாக கூடிவிடுகின்றன. இவற்றின் விளைவாக வாழ்க்கைத் தரத்தில் இவர்கள் மேமபடலாம். இது வரவேற்கத் தக்க போக்குதான் என்ற போதிலும் முதலாளியத்திற்கும் அரசு அதிகாரத்திற்கும இவர்கள் சிறைப்படுகிறார்கள் என்பதையும் சேர்த்துப்பார்க்க வேண்டும்.

இன்றைய சூழலில் நடுத்தர மக்கள் பெருமளவு நுகர்வியத்திற்கு பலியாகிவிடுகிறார்கள். தனியார்துறை அரசுத்துறை கல்வி மருத்துவம் போன்ற பல்வேறு நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் இவர்கள் மூலம் தான் ஏகாதிபத்தியம், முதலாளியம் அரசு அதிகாரம் செயல்படுகின்றன. ஆதிக்க சக்திகளை இவர்கள் உள்வாங்கிக் கொண்டவர்கள். ஆதிக்க சக்திகள் இவர்களுக்கு தரும் பதவி, பாதுகாப்பு, அலங்காரங்கள் வழியே ஆதிக்க சக்திகளுக்கு இரையாகி மலினப்பட்டு தன் ஆன்ம பலம், அறவுணர்வு ஆகியவற்றைஇழந்து வாழ்வின் அர்த்தங்களை இவர்கள்அழித்துக் கொள்கிறார்கள். இவர்கள் மூலம்தான் உழைக்கும் மக்கள் மீது சுரண்டலும் ஒடுக்குமுறையும் திணிக்கப்படுகின்றன. இவர்கள் தான் ஆதிக்கத்தை உள்வாங்கிக் கொண்ட மத பீடங்களோடும் ஒத்துழைக்கிறார்கள்.

கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் காரணமாக மிககுறிப்பிட்ட நடுத்தர மக்களோடு சேர்ந்து படித்த தலித் மக்களும் அரசுத்துறை நிறுவனங்களில் பணி புரிகிறார்கள். நடுத்தர மக்களின் அனைத்து வாய்ப்புகளும் இவர்களுக்கு கிடைக்கிறது. ஆதிக்கத்தை இவர்களும் உள்வாங்கிக் கொண்டு செயல்படு

கிறார்கள். அவ்வப்போது நச்சுத் தீண்டல் போல, மின் தாக்குதல்
போல இவர்களின் சாதிப்பெயர் சொல்லி, இவர்களை இழிவு
படுத்தி வலிமை அழிக்கும் போக்கும் பிற சாதியினரால் கடைப்
பிடிக்கப்படுகிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில் சீறிப்பாய்வது
இன்றியமையாதது ஆகிறது.

வரலாற்றின் மையத்தை கைப்பற்றுவது பற்றிப் பேசுகிறோம்.
ஆதிக்க சக்திகளுக்கு சேவை செய்வதன் மூலம் மக்களுக்கான
வரலாற்று இயக்கத்தை அழிக்கத் தான் செய்வோம். ஆகவே
ஆதிக்க சக்திகளுக்கு எதிர்நிலையில் தான் நாம் இயங்கியாக
வேண்டும். இன்றைய சமூக சூழலில் கல்வி நிறுவனங்கள் தரும்
கல்வி, ஆதிக்கத்தை உள்வாங்கிக்கொள்கிற கல்வி தான் மார்க்சிய
இயக்கங்கள் மட்டும் அல்லாமல் தலித்தியக்கங்களும் சீரிய முயற்சி
களில் ஈடுபட வேண்டும். பள்ளிக் கல்வியின் பகுதியாக இது
அமைய முடியாது. மாலை நேரத்திலோ விடுமுறைக் காலங்
களிலோ இத்தகைய மாற்றுக்கல்வியில் நம்மாணவர்களுக்கு பயிற்சி
தர வேண்டும். கல்வி மேலும் மேலும் உலகளாவியதாக விரிந்
தாக வேண்டும். பலதுறைக்கல்வியில் நம் மாணவர்களை தேர்ச்சி
பெறச்செய்ய வேண்டும். மூன்றாம் உலக நாட்டு மக்கள் நலன்
களையும், ஆப்பிரிக்க, அமெரிக்க கருப்பின மக்கள் நலன்களையும்
உள்வாங்கிக் கொண்டவர்களாக நம் மாணவர்கள் விரிவடைய
வேண்டும். உலக அளவில் நம் பார்வை பதிய வேண்டும். அரசுப்
பணிகளில் அமர்ந்திருப்பவர் கூடுதலான வேலைத் திறன்கள்
பெறத்தான் வேண்டும். மேல் சாதியினர் இவர்களை குறைத்துப்
பேச இடம் தரக்கூடாது. அன்றியும் மக்கள் நலன் கருதி உயர்
அதிகாரிகளையும் மறுத்து இவர்கள் தீவிரமாகச்செயல்பட்டு ஆக
வேண்டும். ஒரு தலைமுறைக் காலம் விடாப்பிடியாக இத்தகைய
செயல்பாடுகளில் தலித் மக்களை தலித் இயக்கங்களோடு சேர்ந்து
பிற இயக்கங்களும் தூண்ட வேண்டும். ஆதிக்க சக்திகளால்
தூண்டப்படும் நுகர்வியத்திற்கு தலித் மக்கள் பலியாக வேண்
டியது இல்லை. அதைப் போலவே அதிகார வெறி, மேட்டிமைத்
தனம் முதலியவற்றையும் இவர்கள் தம் குணங்கள் ஆக்கிக்
கொள்ள வேண்டியது இல்லை. எளிய முறையிலாவது வாழ்
வியலில் இவர்கள் பயின்றவர்கள். அதிகாரம் இவர்களுக்குள்
இல்லை. தலித் மக்கள் கடுமையான உழைப்பாளிகள். பெண்கள்
கூடுதலான சுதந்திரம் உடையவர்கள். பறை, முதலிய கலை
உணர்வியலும் தேர்ந்தவர்கள். மதம் இவர்களுக்குள் ஆதிக்கம்
பெறவில்லை. இவ்வகை போக்குகள் காரணமாக குறைந்த அள
வுக்கு இவர்களேனும் முதலாளியம், அரசு அதிகாரம் ஆகியவற்
றின் ஆதிக்க உணர்வை உள்வாங்கிக்கொள்ளாதவர்களாக இருக்க
முடியும். அன்றியும் மேட்டுக் குடிகளின் நாகரிகம் சார்ந்த அலங்
கோலங்களை இவர்கள் பரிகசிக்க முடியும். ஆதிக்க உணர்வில்
மையங் கொள்ளாத ஒரு வாழ்வியல் நெறிக்கு இவர்கள் ஆதார
மாக முடியும. இவர்களால் இயற்கை நாசப்படவில்லை. மண்
ணோடும், நீரோடும் இவர்கள் நெருக்கமானவர்கள். உயிரினங்
கள் இவர்களின் நேசத்துக்கு உரியவை. இவர்களின் தெய்வங்கள்
இவர்களைப் போலவே எளிய தெய்வங்கள்.

சமூகத்தை எவ்வாறு மீண்டும் திருத்தி அமைப்பது என்று தேடும் ஆய்வாளர்களுக்கு இவர்கள் சான்றாதாரமாக இன்றும் அமைய முடியும். உயர் சாதியினரின் அதிகாரம், திமிர்த்தனம் காரணமாக இவர்களுக்குள்ளும் காயங்கள் உண்டு. உயர்சாதியினர் பற்றி இவர்கள் கேலிச் சித்திரங்கள் புனைகிறார்கள். சமூக சூழலில் இவர்கள் மீது குவிக்கப்படும் நெருக்கடிகள் காரணமாக இவர்கள் தந்திரங்கள் கற்றிருக்கிறார்கள். பொய்யர்கள் என்றும், சோம்பேறிகள் என்றும், தந்திரகாரர்கள் என்றும் உயர் சாதியினர் சொல்லும் வசை மொழிக்கு அடியில் ஊடுருவிப் பார்த்தால் உயர் சாதியினரின் அவலட்சணங்கள் தெரியும். இவர்களுக்கும் கதைகள் உண்டு. கதைகளும் பாடல்களும் உண்டு. ஒரு சமூகமாய் தம்மைத் தக்கவைக்கும் திறன்களை இவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

இவ்வகைத் திறன்கள் பண்புகள் வழியே நவீனகால சமூகத்தினுள் இவர்கள் மெல்ல மெல்ல நவீன காலச் சமூக மையம் நோக்கி நகர முடியும். உலக அளவிலான பார்வையையும், அறிவையும், திறன்களையும் தமக்குள் உயர்த்திக்கொள்ள வேண்டும். ஆதிக்கத்தை உள்வாங்கிய மார்க்சியர் உட்பட சமூக மாற்றத்திற்கான அனைத்து இயக்கங்களையும் கேலி செய்வதன் மூலம் நேரிய நிலைப்பாட்டிற்குள் அவற்றைக் கொண்டுவர இவர்கள் உதவி செய்ய முடியும்.

## 5

தலித் இலக்கிய கோட்பாடும் தலித் மக்களின் விடுதலைக் கோட்பாட்டின் ஒரு பகுதியாகவே இருக்க முடியும். தலித் மக்களின் விடுதலை, உழைக்கும் மக்கள் விடுதலையின் ஒரு பகுதியாகவே இருக்கவும் முடியும். தலித் மக்கள் தம்மீது சுமத்தப்பட்டுள்ள சாதி அடிமைதனத்திலிருந்து விடுதலை பெறுவதை மட்டுமே தமக்கான திட்டமாகவும் கொள்ள முடியாது. ஒட்டுமொத்தமான மக்களின் விடுதலையிலிருந்து தம் சமூகத்தின் விடுதலையை தனித்து படைத்துக் கொள்ளவும் முடியாது. இந்நிலையில் தலித் மக்கள் தம்மளவில் மட்டுமே சாதி அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான இயக்க செயல்பாட்டையும் வகுக்க முடியாது. அனைவரும் கடுமையான முரண்பாட்டில் தான் அகப்பட்டுள்ளோம்.

தமிழகத்தில் சாதி ஒழிப்புக்கு அழுத்தம் தந்து, அதையே தம் திட்டமென தலித் அரசியல் பேசுபவர்களின் இலக்கிய கோட்பாடும், இலக்கிய ஆக்கமும் எவ்வாறு உள்ளன என்று பார்க்கலாம். ஆதிக்கத்தை உள்வாங்கிக் கொண்ட மார்க்சிய கட்சிகளின் இலக்கிய கோட்பாட்டை ஒத்ததாகவே இவர்களின் கோட்பாடும் இருப்பதை உடனடியாகப் புரிந்து கொள்ள முடியும்.

இவ்வகை மார்க்சியரின் இலக்கிய ஆக்கம் அரசியலையே முதன்மை நோக்கமாகக்கொண்டது. சரியாகச்சொன்னால் மார்க்சிய அரசியலின் ஒரு பகுதியாகவே இலக்கியம் இருக்க முடியும். தொழிலாளிகள் நல்லவர்கள். முதலாளிகளும், நிலவுடமையாளர்களும் தீயவர்கள் மற்றும் கொடியவர்கள். தொழிலாளர்களின் தன்மானத்தை முதலாளிகள் மதிப்பதில்லை. முதலாளிய சுரண்டல், தொழிலாளர் குடும்பப் பெண்களைத் தமக்கு உரிமையாக்கிக் கொள்வதையும் உள்ளடக்கிக்கொள்வதாக நடக்கிறது. தொழிலாளர், முதலாளிக்குள் அகமுரண்பாடு இல்லை. உளவியல் சிக்கல்கள் இல்லை. முதலாளிகள் நுகர்வியத்தில் ஊறியவர்கள். தொழிலாளிகள் இப்படி இல்லை. தலைவர்கள் புனிதமானவர்கள். கட்சி மிக முக்கியம். வர்க்கவுணர்வே படைப்பாளி கொண்டிருக்க வேண்டும். கலை உணர்வை மேம்படுத்தி சொல்வது முதலாளியப் போக்கு. கலை கலைக்காகவே என்பது வர்க்க எதிரியின் போக்கு. உருவத்திற்கு முக்கியம் இல்லை உள்ளடக்கம் தான் முக்கியம். வர்க்க உருவின் ஆதாரத்தில் மக்களைத் திரட்டுவதற்குத்தான் இலக்கியப் படைப்பு தேவைப்படுகிறது.

கட்சி சார்ந்த மார்க்சியரின் இலக்கியக் கோட்பாடு இப்படி அமைந்து இருந்தது. கட்சி தன் ஆதிக்கத்தை அரசியல் அரங்கில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். அரசியல் அரங்கில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதன் மூலம் அரசு அதிகாரத்தில் இடம் பெற முடியும். அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் சோசலிசத்தை படைக்க முடியும்.

சாதிய அரசியலை நோக்கமாகக் கொண்டு தலித் இலக்கிய கோட்பாடு வகுப்பவர்கள், தமிழக சூழலில் மேலே குறிப்பிட்ட மார்க்சியரைப் போலத்தான் செயல்படுகின்றனர். கட்சி சார்ந்த மார்க்சியரின் இலக்கிய கோட்பாட்டின் தொடர்ச்சியான சற்று வேறுபட்ட பதிவு தான் என்று இதைக் கருத முடியும். இவர்கள் சாதிய சமுதாயத்தினுள் தம்மைத்திணித்தவர்கள் என பார்ப்பனர் மற்றும் உயர்சாதியினர் மீது கடுமையான கோபத்தை வெளிப்படுத்துகின்றனர். தலித் மக்களிடம் காணப்படும் குணதிரிபுகள் உயர் சாதியினர் தமக்குள் பதித்தவை என்று கூறுகிறார்கள். தமக்கு மேற்பட்ட சாதியினரைப் பழித்துக்கூறுவதைத் தங்களுக்கு தேவையான குணம் என்று கூறுகிறார்கள். வசை மொழிகள் மூலம் தமக்குள் பதிந்துள்ள கோபதாபங்களை விடுவித்துக் கொள்ள முடியும் என நம்புகிறார்கள். ''பழையன கழிதலும'' நாவலில், கவுண்டர் சமூக திமிர்த்தனத்திற்கு எதிர்வினையாக காத்தமுத்து தன்முனைப்போடு நடந்து கொள்கிறார். தன் எல்லைக்குள் வரும் மூன்றாவது பெண்ணையும் தனக்கு உடமையாக்கிக் கொள்கிறார். படித்த இவருடைய மகள் சவுரி தன் தந்தையிடம் குற்றம் காண்கிறாள். காத்தமுத்துவிடம் உள்ள குணத்திரிபை சிவகாமி வெளிப்படுத்துகிறார். ஆனால் தலித்விமர்சகர் காத்தமுத்துவிடம் குணம் காண்கிறார். இவ்வாறு சிவகாமி

பார்ப்பது தலித் சாதிக்குள் தோன்றிய படித்த நடுத்தர வர்க்கத்தின் போக்கு என்கிறார் விமர்சகர். கன்னியர் மடத்தில் பெண்கள் காமத்திற்கு இரையாவதை அல்லது இரையாக்கப்படுவதை (''கலக்கல்''-விடிவெள்ளி) மறைத்திருக்க வேண்டும் என்று இந்த கோட்பாட்டாளர் கூறுகிறார். இவரும் இன்னும் சிலரும் தலித் மக்களிடம் காணப்படும் சில கலாச்சாரக்கூறுகளை எதிர்க்கலாச்சார கூறுகள் என சிறப்பித்துக் கூறுகின்றனர். இவர்கள் தமக்கு ஆதாரமாக அமைப்பியலில் சில வரையறைகளைக்கூறுகிறார்கள்.

தலித் சமுகத்தை அரசியல் அரங்கில் பார்ப்பனர் மற்றும் உயர் சாதியருக்கு எதிரான அரசியல் அரங்கில் முன் நிறுத்துவது இவர்கள் நோக்கம். படித்த தலித் இளைஞர்களை இயக்கத்தினுள் திரட்ட இவர்கள் இவ்வாறு செயல்படுகிறார்கள். தலித் இலக்கியத்தை தலித் தான் படைக்க முடியும் என்கிறார்கள். தலித் இலக்கியத்தில் அழகியல் பார்க்க வேண்டியது இல்லை என்கிறார்கள். அறம், நேர்மை, தியாகம் முதலிய பண்புகளை பார்ப்பனிய பண்புகள் என கூறுகிறார்கள். தலித் இலக்கியத்திடம் குறை காண்பவர்களை சாடுகிறார்கள். தலித் அல்லாதவர்கள் எழுதியவை/எழுதுகிறவை தலித் இலக்கியமாக இருக்க முடியாது என்கிறார்கள்.

கட்சி சார்ந்த மார்க்சியர் முன்பு எவ்வாறு ''தம் எதிரிகளிடம்'' மூர்க்கத்தனமாக நடந்து கொண்டார்களோ அதே போல் இவர்களும் எதிரிகளைக் கண்டுபிடித்து மூர்க்கத்தனமாக நடந்து கொள்கிறார்கள். சிவகாமி நம்மவர் என்பதால் அடக்கமாக விமர்சனம் செய்கிறார்கள், இமயத்தை வெளியில் வைத்து சாடுகிறார்கள். அறிவழகன் போன்றவர் தம் வட்டத்தில் இல்லை என்பதால் கண்டு கொள்ள மறுக்கிறார்கள். டேனியல் வர்க்கப் பார்வையின் எல்லைக்குள் வைத்து தலித் மக்களின் வாழ்வையும், போராட்டத்தையும் எழுதினார். ஆனால் அவரை தலித் அரசியல் எல்லைக்குள் சுருக்கிப்பார்க்கிறார்கள். பூமணியின் ''பிறகு'' இவர்களின் பார்வை எல்லைக்குள் சங்கடத்தோடுதான் வருகிறது. ஆனால் அவரின் ''நைவேத்தியம்'' இவர்களின் பார்வைக்கு வெளியே நிற்கிறது. ''புதிய தரிசனங்கள்'' (பொன்னீலன்) இவர்களின் பார்வைக்குள் வருவதில்லை.

தலித் அரசியலை முற்றான அரசியலாகக் கருதும் போது தான் தவிர்க்க இயலாமல் இத்தகைய அதிகாரப் போக்கு வருகிறது. அதிகாரத்தை உள்வாங்கிக் கொண்ட மார்க்சியமும் இதைத்தான் செய்தது. இதன் காரணமாகவே முதலாளிய ஆதிக்கப் போக்கிலிருந்து மார்க்சியம் தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. தலித் அரசியலையும் முற்றான அரசியலாகக் கருதும் போது தலித் மக்களுக்கு சில சாதகங்கள் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. ஆனால் முதலாளிய எல்லைக்குள் தொடர்ந்து உற்பத்தி ஆகும் அடிமைத்

தனத்திலிருந்து இவர்கள் தம்மை விடுவித்துக் கொள்ள இயலாது. தலித் அரசியல் என்ற கலக அரசியலைக் கடந்து செல்வது பற்றி இவர்கள் சிந்திக்க வேண்டும். முதலாளியத்தை தனக்குள்ளிருந்து வெளியேற்றிக் கொள்கிற மார்க்சியத்தின் இலக்கிய கோட்பாடு பற்றி முன்பு கூறினோம். இந்த கோட்பாட்டின் படைப்பாளிக்கு / கலைஞனுக்கு / மெய்யியலாளனுக்கு முக்கியத்துவம் உண்டு என்று கூறினோம். கிராம்சியின் சொற்களில் கூறுவதனால் இவர்கள் புத்துயிர்ப்புடைய அறிவாளிகள் என்ற எல்லைக்குள் வரக்கூடியவர்கள். சமுதாயத்தை முற்றான படைப்பியல் நோக்கில் புதுப்பிக்க விரும்புபவர்கள் இவர்கள். இவர்கள் வரலாற்றிலிருந்து ஆற்றல்களையும் பார்வைகளையும் செறித்துக் கொள்பவர்கள். அடிப்படையில் இவர்கள் மெய்யியலாளர்கள்.

இத்தகைய வாய்ப்பு தலித் கலைஞர்களுக்கு சாத்தியமில்லையா என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். தலித் மக்கள் வரலாற்றுக்கு வெளியே தள்ளப்பட்டவர்கள். அதனாலேயே இவர்களுக்கு 'வரலாறு இல்லை என்று சொல்ல முடியுமா? இவர்களை வைத்து அடிமைப்படுத்தி ஆதிக்க சக்திகள் தமக்காக வரலாற்றைப் படைத்துக் கொண்டார்கள் என்பது உண்மைதான். இவர்களின் வழியே வரலாற்றுத் தேர், இவர்களை மிதித்தும், காயப் டுத்தியும் கொன்றிருக்கிறது. வரலாற்றின் இந்த எதிர் மறைக்கூறுகளை இவர்கள் தமக்குள் நினைவுபடுத்திக் கொள்வது சாத்தியமில்லையா? ஆதிக்க சக்திகளின் வரலாற்றைப் படைக்கிற தளமாக இன்னும் இவர்கள் இருக்கிறார்கள். சில தொழில் வகைகள், கலைகள், கதைகள் ஆகியவை இன்னும் இவர்களிடத்தில் தங்கி உள்ளன. தலித் மக்களிடமிருந்து படிப்பாளிகளும் அறிவாளிகளும் இப்பொழுது தோன்றிய வண்ணமிருக்கிறார்கள். வரலாறு, பொருளியல், கலைகள் என பலவற்றை கற்கிறார்கள். இத்தகைய கல்வியின் மூலம் வரலாற்றின் தடத்தை தமக்குள்ளும் கண்டு கொள்கிறார்கள். ஒரு புதிய சமுதாயத்தை தலித் மக்களுக்காகவும் சேர்த்துப் படைக்க வேண்டும் என்ற பார்வை கொள்கிறார்கள்/கொள்ள முடியும். எளிமை, இயற்கையின் மீது நேசம், கடுமையான உழைப்பு முதலிய நற்பண்புகள் இவர்களிடமும் தங்கியுள்ளன. இவர்கள் மார்க்சியத்திற்கு நெருக்கமாக வரமுடியும். இந்த மக்கள் வரலாற்று காலத்தில் செத்துப்பிழைத்தவர்கள். ஒரு புதிய சமூக அமைப்புக்காக சாவதற்கு இவர்கள் தயக்கம் கொள்ளமாட்டார்கள். நிச்சயமாக ஆதிக்க உணர்வு அற்ற மார்க்சியம் இவர்களுக்குள் தளைக்க முடியும். இவர்கள் அரசியல் தலித் சாதிகளுக்கே ஆன குறுகிய அரசியலாக இருக்க முடியாது. விரிந்த தளங்களில் இவர்கள் சிந்திக்க முடியும். செயல்பட முடியும். இவர்களால் மன உறுதியோடு போரிட முடியும். தேவைப்படும் பொழுது எதிரிகளை மன்னிக்கவும் முடியும். வரலாற்றின் முரண்களும், நெருக்கடிகளும் எல்லோருக்குள்ளும் தான் செயல்படுகிறது. கோபத்தில் ஒருவர் நிலைத்திருக்க முடியாது. காயங்கள் ஒருவரை ஆழப்படுத்த முடியும். மீண்டும் இங்கு ஏசுவை நினைத்துக் கொள்ளலாம்.

வரலாற்றை உள்வாங்கிய நிலையில்தான் மனம் எல்லையற்ற விரிவுபெறுகிறது. செல்வப் பெருக்கும், அதிகாரப் பெருக்கும் வரலாற்றில் தோன்றி பிறகு அழிந்து போனதைப் பார்க்கிறோம். இவற்றின் வழியே மனிதன் ஆக்கம் பெற்றுள்ளான். பெற்ற ஆக்கம் எத்தகையது? உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை தேவைதான். இவை தனக்காக மட்டுமல்ல, எல்லோருக்கும் தான். ஆயுதங்கள்தான் மனிதனை நிர்ணயித்தனவா? இல்லை. ஆணவம் என்ன ஆயிற்று? வரலாற்றின் மேற்பரப்பில் எவ்வளவோ நடைபெற்றன. உள் ஆழங்களில என்ன சேர்ந்திருக்கிறது. அந்த நீரோட்டத்திற்கு என்ன பெயர்? எல்லோருககும் பொதுவான வாழ்வு. உழைப்பில் இன்பம் பகிர்தலில் இன்பம். அன்பில் தழைக்கும் இந்த வையம். இங்குதான் தென்றல் தவழ்கிறது. மலர்கள் விரிகின்றன. காற்றில் இசை கலந்திருக்கிறது. இப்படி எல்லோருக்குமான ஒரு உலகம் வேண்டும். இந்தக்கனவை தனக்குள் கொண்டிருப்பது தான் இலக்கியம். வரலாற்றை உள்வாங்கிய கலைஞனுக்கு மெய்யியலாளனுக்கு இந்தப்பார்வை சாத்தியம். இந்தப்பார்வையை இலக்காகவைத்து கொண்டு தான் வாழ்க்கை/இலக்கியம்/அரசியல் இயங்க வேண்டும். ஆதிக்கத்தை தனக்குள்ளிருந்து வெளியேற்றிக் கொள்கிற அரசியலுக்கு இது சாத்தியம். வர்க்கப் போராட்டத்தின் மூலம் வர்க்கங்களைக் கடந்து செல்ல வேண்டும். சாதிகளுக்கு எதிரான போராட்டத்தின் மூலம் சாதிகளைக் கடந்து செல்ல வேண்டும். அரசுகள் உதிர்ந்து போகக வேண்டும். மக்கள் தம்மைச் சுயமாக நிர்வாகம் செய்து கொள்ள வேண்டும். இது மார்க்சியத்தின் பார்வை.

இலக்கியம் இந்தப்பார்வையை தனக்குள் வரித்துக்கொள்ள வேண்டும். தனக்குள் அதிகாரத்தைக்கொண்டிருக்கிற இலக்கியத்திற்கு/அரசியலுக்கு இந்தப் பார்வை சாத்தியமில்லைதான். இந்த பார்வையை தனக்குள் கொள்ளாத இலக்கியம் மனிதனை மேம்படுத்தாது.

டேனியலுக்கு வர்க்கப் பார்வை தெரியும். ''அடிமைகள்'' நாவலில் நைனார் பெருகக்கட்டி வாழ்ந்து இப்பொழுது ஏலத்தில் விடப்படுகிற வீட்டை, ஏலத்தில் எடுத்து கண்ணம்மாளுக்கு தருகிறார் கந்தன். செல்லாச்சி நைனாத்தியின் குழந்தைக்கு பால் கொடுத்த நிலையில் தன் கணவனை இழக்கிறாள். ''தண்ணீர்'' நாவலில் புங்கொடுசிங்கி தலித் மக்களுக்கு தன் நிலத்தை தானமாகத் தருகிறாள். பாறைகளுக்கு இடையில் வெட்டிய கிணற்றில் தண்ணீர் ஊறவில்லை. சிங்கியை தொழுது மாதன் வெட்டுகிறார். தண்ணீர் பீச்சி அடிக்கிறது. ''கானல்''லில் பாதிரியார் தடுமாறுகிறார். வரலாற்றின் முரணில் தான் அகப்பட்டு கொண்டிருப்பதை அறிந்து கண்ணீர் விடுகிறார். வரலாற்றின் நெருக்கடி இன்னும் வழி திறக்கவில்லை. இப்படி கருணையில் விரிந்திருக்கிறது டேனியலின் பார்வை. வரலாற்றை உள்வாங்கிக்

கொண்ட ஒரு தலித்துக்கு இப்பார்வை சாத்தியந்தான். ''பழையன கழிதலில்'' காத்தமுத்துவின் மனநெருக்கடிகளை சொல்லியிருக்க முடியும். ஆதிக்க சமூகத்தின் நெருக்கடிகளுக்கு இடையில் சிக்கி, நேரிய வழிக்கு இடமின்றி ஆணவத்தில், காமத்தில் தன்னை சிதறடித்துக் கொண்டிருந்தவர் காத்தமுத்து இவ்வாறு சித்தரித்திருந்தால், நாவலின் ஆழமும், கலையழகும் மேம்பட்டிருக்கும். கௌரியின் பார்வை முற்போக்கு அரசியலுக்குஒத்தது தான். ''ஆனந்தாயி'' நாவலில் இடம்பெறும் பெரியண்ணன் தலித் என்றாலும் பொறுக்கித்தனமான முதலாளிய சூழலில் ஒத்து இயங்குவதன் மூலம் தன்னை அழித்துக்கொண்டிருக்கிறார். அதிகாரம் கொடுத்த சூழலுககு ஆனந்தாயி தரும் எதிர்வினை ஓர் அற்புதம். இலட்சுமி மட்டுமென்ன? வாழ்வியல் நெருக்கடிகளில் சிக்கி தவிக்கிற அபலை, இலட்சுமி. பெரியண்ணனுக்கு கீழும் அவருக்கு சேவகம் செய்ய ஒரு தலித் இருப்பதைக் காண்கிறோம்.

''கோவேறு கழுதைகள்'' நாவலில் ஆரோக்கியத்தின் அவலம் நம்மைப் பெரிதும் பாதிக்கிறது. முன்னைய சமூகம் தனக்குள் திணித்திருக்கிற அடிமைத் தனத்திலிருந்து ஆரோக்கியத்திற்கு விடுதலை இல்லை. முதலாளியம் கிராமத்திற்குள்ளும் நுழைந்து ஆரோக்கியத்தின் வாழ்வை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்குகிறது. ஆரோக்கியம் கதறுகிறாள். மனிதர்களை இப்படி கிழித்துப்போடுகிற சமூக நடைமுறை நமக்குத் தேவையில்லை. ஆரோக்கியத்தின் அவலம் நம் நெஞ்சை சுடுகிறது. சுகமாய் இனிக்கவில்லை. மனித நேயம் என்பது, மக்களின் வாழ்வை அழிக்கும் எதிரிகளுக்கு இரக்கப்படுவது அல்ல. மனிதர்களுக்குள் வரலாற்றின் வழியே வந்த நேயம் இது. மனிதனுக்குதான் இந்த நேயம் சாத்தியம். இயற்கையை, உயிர்களை வாழ்விப்பது மனித நேயம். அழிப்பது மனித நேயம் ஆகாது.

இறுதியாக இப்படி முடிக்கலாம். குறுகிய அரசியல் கடந்து வாழ்வியல் பார்வை செல்ல வேண்டும். மெய்யியலை நாம் எப்பொழுதும் இழந்து விட முடியாது. இந்த மெய்யியலை தனக்குள் காத்து வளர்ப்பது இலக்கியம். இலக்கியம் எத்தனையோ தளங்களில் இயங்கலாம். எனினும் இந்த இறுதித் தளத்தின் வீச்சு/ வெளிச்சம் இல்லாமல் இலக்கியம் நன்மை படைக்க முடியாது. இந்த விதி நம் அரசியலுக்கும் பொருந்தும். மார்க்சியத்திலிருந்து பெறும் இந்த ஒளிதான் தலித் அரசியலுக்கும் இலக்காக இருக்க முடியும். தலித் அரசியல் அதன் வளர்ச்சிப் போக்கில் அனைத்து மக்களின் விடுதலைக்கான அரசியலின் பகுதியாகி விட வேண்டும்.

★

சிறுகதை

# பல்லி ஜென்மம்

மலையாள மூலம்
**கிரேஸி**
தமிழில்
இந்தியா டுடே பெண்கள் மலர்' 95 **ஸ்ரீபதிபத்மநாபா**

அந்த நகரத்தின் புகழ்பெற்ற ஒரு ஆஸ்பத்திரியில் இரண்டு பல்லிகள் வசித்துவந்தன.

ஓர் ஆண் பல்லி, ஒரு பெண் பல்லி. கொடுந்துயரமான ஆஸ்பத்திரி வாழ்க்கையை ஒரு தொடர் நாடகம்போல் பார்த்து அலுத்துப்போன அவை, உடல் நலத்திற்கு தீங்கானது என்ற முன்னறிவிப்பை கிழித்தெறிந்து தாம்பத்யம் அனுபவிக்க ஆரம்பித்து கொஞ்ச நாட்கள்தான் ஆகியிருந்தது. அந்தக் சுவர்ச்சி முழுதும் தீர்ந்துவிட்டபிறகு தெளிந்த பார்வையுடன் அவை அறை முழுதையும் நோட்டமிட்டன.

சோர்ந்து போய்க் கிடக்கிற இளைஞனும் அவனுடைய காலடியில் அமர்ந்திருக்கும் இளம் பெண்ணும் அப்போது ஒரு நிச்சலனக் காட்சியாகவே இருந்தார்கள். அந்த இளம் பெண்ணின் கண்களில் எந்த இதயத்தையும் பிளந்து விடுகிற வெறுமையைக் கண்ட ஆண்பல்லி அமைதியிழந்து தவித்தது. இரண்டு பாதங்களின் குளம்படிச் சத்தம் கேட்டு அதன் கவனம் அறையின்கதவுநோக்கித் திரும்பியது. நெட்டுக் குத்தலாய் இருட்டைப் பதித்தது போல் அறையில் நுழைந்த அந்தப் பெண்மணியைப் பார்த்து ஆண் பல்லி பெண் பல்லியிடம் சொன்னது:

இங்கே பார், இந்தப் பெண்மணிக்கு சாகக்கிடக்கிற இந்த இளைஞனிடமோ அவனுடைய அழகான மனைவியிடமோ கொஞ்சமும் அனுதாபமோ கருணையோகிடையாது. நோயில்லாதவன் நோயாளியைப் பார்க்க வருவதே, தன்னுடைய ஆரோக்கியத்தை பறைசாற்றி அந்தப் பாவப்பட்டவனின் நிலையை இன்னும் மோசமாக்கத்தான். நிம்மதியாக சாகக்கூட விடமாட்டார்கள் இந்தவர்க்கங்கள் அந்த பெண் பேசுவதைக் கேட்டாயானால் உனக்கு அது புரியும்.

அந்தப் பெண்மணி, சித்திரம் வரைந்தது போல் அமர்ந்திருக்கிற இளம்பெண்ணின் தோளில் கைவைத்து பெருமூச்சு விட்டாள்.

இதேமாதிரித்தான் என்னோடகளின் ஒருத்தன் ஆக்ஸிடென்ட் ஆகி, அப்புறம் மஞ்சக்காமாலைல போயிட்டான்.

இளம் பெண்ணிடமிருந்து பதிலொன்றும் இல்லாமல் போகவே பொங்கி வருகின்ற நிராசையை அடக்கிக்கொண்டு அந்தப் பெண்மணி தொடர்ந்தாள்.

நீ தளர்ந்துடாதே ஆரதீ- உனக்கு சின்ன வயசுதானே? இதோடெயெல்லாம் வாழ்க்கை முடிஞ்சுடாது, நீ ப்ரெக்னென் டொண்ணும் இல்லியே. அப்படி இருந்தா அதை அபார்ட் பண்ணுடு. இந்தக் காலத்துல அப்பன் இல்லாத ஒரு குழந்தைய வளர்க்கறதுங்கறதெல்லாம் ரொம்பக் கஷ்டம்.

பெண் பல்லி சப்தமிட்டு தன் பலமான எதிர்ப்பைக்காட்டியது.

கஷ்டம் தான் இது! உண்மையை இத்தனை நிர்தாட்சண்யமாய் சொல்லலாமா, ஒரு தன்மையேயில்லாமல்?

ஆண்பல்லி பொறுமையிழந்து கேட்டது;

நீ ஏன் இப்போது சப்தமிட்டாய்? மனிதர்கள் எத்தனை தான் முன்னேறியிருந்தாலும், பல்லி சப்தமிட்டால் அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு என்று உனக்குத் தெரியாதா? முக்கியமாக புதன்கிழமை தென்மேற்கு திசையிலிருந்து பல்லி கத்தினால் பந்து மரணம் நிச்சயம் என்பது அவர்களின் சாஸ்திரம். கொஞ்ச நாட்களாய் அந்த இளம்பெண் சந்தேகித்துக் கொண்டிருந்த விஷயத்தில் இதோ இந்த நிமிடம் தீர்ப்பாகிவிட்டது.

பெண் பல்லி குற்ற உணர்வுடன் தலையைத் தாழ்த்திக் கொண்டது.

ச்சே! நான் இந்த அளவுக்கு யோசிக்கவில்லை!

ஆண் பல்லி தன் இருப்பை உறுதி செய்து கொண்ட பாவத்தில் தொடர்ந்தது.

இப்போதைய மனிதர்கள் தலைச்சோற்றுக்குத்தான் முக்

# பதிவேட்டு
## கலம்

வைத்தியர், பேராசிரியர் தெய்வநாயகம் அவர்களின் தலைமையில், தமிழ்க்கூட்டுறவு-இளம்பிறை பதிப்பகம் இணைந்து நடத்திய கவிஞர் எழிலன் (ஜேர்மனி) அவர்களின் புதியதல்ல புதுமையுமல்ல கவிதை நூல் வெளியீட்டு விழா 28-1-96 ல் தியாகராய நகர் மேல்நிலைப் பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது. திரு. இளம்பிறை ரகுமானின் வரவேற்புரையடன் கூட்டம் தொடங்கியது. பேராசிரியர் தெய்வநாயகம் வெளியிட ஈழத்து முதுபெரும் எழுத்தாளர் திரு. செ. கணேசலிங்கன் நூல் பிரதியைப்பெற்றுக்கொண்டார். திருவாளர்கள் செ.யோகநாதன், கே. வி. இராமன், ஸ்ரீரெங்கன், பத்மராசா (லண்டன்), கவிஞர் முல்லைவாணன், கவிஞர் எஸ். வைதீஸ்வரன், தேவகாந்தன் ஆகியோர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். திரு. தங்கேசனின் நன்றியுரையுடன் விழா இனிது முடிவுற்றது. காலை பத்து மணிக்கு ஆரம்பிக்குமென அறிவிக்கப்பட்ட கூட்டம் சரியாக பத்து மணிக்கு ஆரம்பித்தமை கூட்டத்தின் சிறப்பம்சமாக எல்லோராலும் பேசப்பட்டது.

இயத்துவம் கொடுக்கிறார்கள். இதயத்துக்கு அல்ல. நீயே யோசித்துப்பார். தந்தையைத் தின்னி என்ற பட்டத்துடன் பாவம் அந்தக் குழந்தை இந்த உலகத்திற்கு வந்தால் என்ன நிலையாகும்? அதன் பின் வாழ்க்கையே சூன்யமயமாகி விடாதா?

அறையில் மௌனத்தின் நிழல் அடர்வது கண்டு அந்தப் பெண் மணி கடுத்த வெறுப்புடன் எழுந்தாள்.

நான் இனி மேல் இங்க இருந்தா சரிப்பட்டுவராது. டாக்டர் ரவுண்ட்ஸ் வர்ற நேரமாயிடுச்சு. ம்... மறுபடியும் பார்க்கலாம்.

பட்டுப்புடவையின் மினுப்பு கதவுக்கு வெளியே மறைந்த போது இளைஞனின் கறுத்துப் போன உதடுகள் அசைந்தன.

ஆரதீ, நீ அப்படிச் செய்வியா?

இளம்பெண் திடுக்கிட்டாள்.

என்ன?

என் குழந்தையை நீ கொன்னுடுவியா?

இளம் பெண்ணின் கண்களிலிருந்து இரண்டு நீர்த்துளிகள் பயணம் தொடங்கின.

முகத்தின் ஓரத்தில் ஒருநிமிடம் யோசித்து நின்று சூட்டில் விம்முகின்ற நெஞ்சில் வீழ்ந்தன.

அப்போது டாக்டரும் அவர் குழுவும் வேகமாய் அறைக்குள் வந்தனர். ஆண் பல்லி பெண் பல்லியிடம் சொல்லியது.

உண்மையில் இந்த இளைஞனை மரணத்திற்குத் தள்ளியது இந்த பயங்கரமானவன்தான். இந்த ஆள் சாகப் போவது விபத்தினாலுண்டான காயத்தினால் அல்ல. ஜெனரல் ஃபிஸிஷியனுக்கு ரெஃபர் செய்திருந்தால் அவர் மஞ்சட்காமாலைக்கு சிகிச்சையளித்திருப்பார். இவனுடைய ஈகோ அதற்கு இடம் கொடுக்கவில்லை. இனி சாவது அல்லாமல் வேறு என்ன கதி?

பெண் பல்லி தன் கணவன் முகத்தை ஆச்சர்யமாய் பார்த்தது. அதைப் பார்க்காதது போல் ஆண்பல்லி தனக்குள்ளே சொல்லிக்கொண்டது.

கஷ்டம்தான்! கிஷோர்லாலின் வர்க்கத்தினருக்கு இன்னும் அகந்தை இருக்கிறது. அவருக்கு இறுதியாய் உண்டான ஞானம் இவர்களுக்கு கிடைக்கவும் செய்யாது.

பெண் பல்லிக்கு ஆர்வத்தை அடக்க முடியவில்லை.

யார் இந்த கிஷோர்லால்?

ஆண் பல்லியின் கண்களில் போனஜென்மத்தின் நினைவு, அறுபட்டு விழுந்த வால் போல் துடித்தது.

அது பொன்குன்னம் வர்க்கியின் ஒரு கதாபாத்திரம். பிரபலமான ஒரு டாக்டர்.

பெண்பல்லியின் வட்டமான கண்களில் அறியாமை நிறைந்து நின்றது.

பொன்குன்னம் வர்க்கியா?

ஆம், அவர் மலையாளத்தில் ஒரு கதாசிரியராக இருந்தார். தன்னுடைய கணவனின் பொது அறிவைக்குறித்து பெண் பல்லிக்கு பெருமதிப்பு தோன்றியது. அதை வெளிப்படுத்தவும் செய்தது.

நீங்கள் வெறும் ஒரு பல்லி தானே? பிறகு இதெல்லாம் எப்

படித் தெரிந்தது?

ஒரு பெருமூச்சோடு ஆண் பல்லி சொன்னது.

நான் முன்ஜென்மத்தில் ஒரு கதாசிரியனாக இருந்தேன். என் கதைகள் தான் மலையாளத்தின் மிகச் சிறந்த கதைகள் என்று அபிமானம் கொண்டேன். அதனால்தான் இந்தச் ஜென்மத்தில் மேற்கூரை தாங்குகிற ஒரு பல்லி யாக ஆனேன்.

பெண்பல்லி சுயவெறுப்புடன் தலையில் அடித்துக் கொண்டது.

கஷ்டம்! எனக்கு முன்ஜென்மத்தைப்பற்றிய ஒரு நினைவும் வரமாட்டேனென்கிறது. நான் யாராக இருந்தேன் என்றறிய எனக்கு மிகவும் விருப்பமாயிருக்கிறது.

ஆணின் அகந்தை பல்லி ஜென்மத்திலும் கொஞ்சம்கூடதேய்ந்து போயிருக்கவில்லை.

அதற்கு ஞானோதயம் வேண்டும். எல்லாருக்கும் உள்ளே ஒரு போதி மரம் இருக்கிறது. அதைக் கண்டறிந்து போதி மரச் சுவட்டில் தியானத்தில் அமர வேண்டும், புத்தன் செய்தது போல்.

பெண் பல்லி ஆர்வமாய்க் கேட்டது.

சரி உங்களுக்கு என்ன ஞானம் உதித்ததாம்?

ஆண் பல்லி ஒரு கணம் திடுக்கிட்டது. அதனாலேயோ அது அவசரத்தில் அனாவசியமானஒரு பிரசங்கத்துக்குள் வீழ்ந்தது.

பெண்கள் உங்களுக்கு ஒருபோதும் சாத்தியமில்லாத ஒரு காரியத்தை செய்தான் புத்தன் பிரபஞ்ச துக்கத்தின் காரணத்தை கண்டறிய அரண்மனையையும் கிரீடத்தையும் கைவிட்டான்.

# பதிவேட்டு கலம்

மலேசியத் தமிழ்ப் பண்பாட்டியக்கத் தலைவர் பேராசிரியர் இர. ந. வீரப்பனார் அவர்களை பாராட்டும் விழாவொன்று, சென்னை —மாணவர் மன்றத்தினரால் 4-1-96 அன்று சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது.

★ ★ ★

'ஆண் பெண் உறவு நிலை—நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கம் சென்ற மாதம் (டிசம்பர்-95) 11 ம் 12 ம் தேதிகளில் சென்னை கிறித்தவக் கல்லூரியில் மிகச் சிறப்பாக நடத்தப்பெற்றது. இக்கருத்தரங்கை முன்னெடுத்த 'பாரதி மன்றம்' ஏற்கனவே இரண்டு கருத்தரங்குகளை நடத்தியுள்ளது. 1989 ல் 'தொல் தமிழகம்' என்ற பொருளிலும், 1993 ல் 'தமிழர் எதிர்காலவியல்' என்ற பொருளிலும் நடந்த இக்கருத்தரங்கு ஆய்வுரைகள் நூல்வடிவமும் பெற்றுள்ளன. 1995 ம் ஆண்டின் கருத்தரங்கு நிறைவுரையை நிகழ்த்தியவர் கவிஞர் இன்குலாப் அவர்கள்.

★ ★ ★

கட்டிய மனைவியையும் அவள் தந்த செல்லக் குழந்தையையும் நிராகரித்தான். போதிமரச் சுவட்டில் அமர்ந்து தியானததின் கதவைத் திறந்தான். அப்போது எல்லாமே தெளிந்து வந்தது.

ஆண் பல்லியின் இணை, பெண் களுக்கே முதலான பிடிவாதத்தை விடுவதற்கு தயாராக இல்லை.

என் கேள்விக்கு பதில் கிடைக்க வில்லை!

ஆண் பல்லிமீண்டும் திடுக்கிட் டது. வட்டமான கண்களை ஒன்றிரண்டு முறை சிமிட்டி ஒரு வழியாய் சொல்லி முடித்தது.

அகந்தைதான் எல்லா துக்கங் களுக்கும் காரணம என்ற ஞானம் உதித்தது.

பெண்பல்லி உரக்கச் சிரித்து சப்தமிட்டது.

இதைக் கண்டறியத்தானா பாவம் அந்த ராஜகுமாரன் இத் தனை தியாகங்களையும் சகித் தான்! கஷ்டம்! சமையலறைச் சுவர்களுக்குள் புகையும் கரியும் பிடித்துக் கிடக்கிற பெண்களுக்கு கூட தெரியுமே இது!

ஆண்பல்லியின் அபிமானம் உடைந்துபோனது.

அறையிலிருந்து திடீரென எழுந்த அழுகை அவற்றின் கவ னத்தை கீழ்நோக்கி திருப்பியது. விஷயம் விளங்கியபோது பெண் பல்லியின் கண்கள் நிறைந்தது.

அதோ, பாவம் அந்த இளை ஞன் இறந்து கொண்டிருக் கிறான். அவன் உதடுகளில் இப் போதும் என் குழந்தை! என் குழந்தை! என்கிற சங்கடம் துடித்துக் கொண்டிருக்கிறது. அந்த பாவப்பட்டவனின் ஆத்மா வுக்கு பித்ருயோகத்தில் அனுமதி கிடைக்காமல் அலைந்து திரிய வேண்டிய நிலை வருமென்று தோன்றுகிறது.

ஆண்பல்லி கனத்த குரலில் கூறியது.

அந்த இளம்பெண் அவளின் ரத்தத்திலிருக்கிற குழந்தைக்கு வெளிச்சத்தைக் காண்பிக்கவே மாட்டாள், இது நிச்சயம். இன் னொரு வாழ்க்கை அவளுக்காய்க் காத்துக்கொண்டிருக்கிறது.

பெண்பல்லி சிந்தனை வசப் பட்டது. பிறகு அவசரமாய்ச் சொன்னது.

கொஞ்ச நிமிடங்களுக்குள் இந்த அறையில் உறவினர்கள் கூடிவிடுவார்கள். அதற்கு முன் நான் அந்த இளம்பெண்ணின் பையில் அடுக்கிவைத்திருக்கிற உடைகளுக்கிடையில் சென்று ஒளிந்து கொள்ளப்போகிறேன். இனி வருகிற அவளின் வாழ்க் கையைக் குறித்து அறிய எனக்கு மிகவும் ஆவலாயிருக்கிறது.

ஆண்பல்லி திடுக்கிட்டு விட் டது.

பெண்ணே, அபத்தம் எதாவது செய்துவிடாதே! அவளுடைய வாழ்க்கையை அவள் வாழ்ந்து காத்துக்கொள்வாள். நீ உன் னுடைய வேலையைப்பார். என் குழந்தைகளுக்கு அம்மாவாக வேண்டியவள் நீ என்பதை மறந்துவிடாதே.

வாலை ஆட்டிக் கொண்டு பெண்பல்லி திரும்பிப்பார்த்தது.

உங்கள் குழந்தைகளுக்கு அம் மாவாக எந்தப் பெண்பல்லியினா லும் முடியும், ஆனால் இது தானே கண்டறிய வேண்டிய விஷயம். அதுமட்டுமல்ல, பெண் களால் என்னவெல்லாம் சாதிக்க முடியும் என்றும் எனக்கு அறிய வேண்டும்.

இத்தனையும் சொல்லிவிட்டு, பெண்பல்லி கீழேகுதித்து, ஆண் பல்லியின் வாழ்க்கையில் இருந்து மறைந்தது. ●

# தி. ஜானகிராமன் நினைவு மலர்

சீனப் பெருமதில் அந்தநாட்டின்
பெருமைக்கு உரியதுதான்.
பைசாவிலுள்ள சாய்ந்த கோபுரமும்
அந்தநாட்டின் பெருமைக்குரியது
என்பதில் சந்தேகமில்லை.
அதுபோலத்தான் மாமல்லபுரமும்,
தஞ்சைப் பெருங்கோவிலும், கல்லணையும்
பழந்தமிழ் நாட்டிற்கு.
ஆயின், இவையெல்லாம்
வரலாற்று அடையாளங்களே!
ஆனால், பாரதமும் இராமாயணமும்
இந்தியத் துணைக் கண்ட நாடுகளின்
பல்வேறு மொழிகளில் ஆக்கப்பட்டுள்ளபோதிலும்
அந்தந்த மொழிகளின், மண்களின்
இலக்கிய அடையாளங்களாகும்.

இவ்வாறு இலக்கிய அடையாளங்களாகும்
இலக்கியங்கள்
வளர்மொழி ஒவ்வொன்றிலும் தொடர்ந்து
இருந்துகொண்டே வந்திருக்கின்றன.
இலக்கிய வரலாற்றில் தம் அடையாளமிடும்
இம் மகாபுருஷர்கள், ஒரு சமுதாயத்தின்
தன்னிச்சையான விளைச்சலே என்றாலும்,
தம் திசை வழியில் நடந்து
சமுதாயத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்
வன்மையுடையவர்களாக இருந்துவிடுகிறார்கள்.

இந்த இதழை
தி. ஜா. நினைவு மலராகக் கொண்டுவருவதில்
நமக்கெல்லாம் மிக்க பெருமை.
இது, தி. ஜா.வுக்கு ஒரு நினைவு மலர்
கொண்டுவருவதினாலான பெருமையாக மட்டும்
அடங்கிவிடுமெனில்,
இலக்கு குறித்தான 'இலக்கு'வின் வரையறையில்
பெருமைப்படக் கூடிய அம்சம்
குறைவாகவே இருக்க முடியும்.

தன் காலத்து நாவல் இலக்கியத் துறையில்
தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித்
திகழ்ந்தவர் அமரர் தி. ஜா.
திரு. எம். ஏ. நுஃமான் கூறுவதுபோல,
யதார்த்தவாதத்துடன் கற்பனாவாதத்தைக் கலந்து,
தனக்கென ஒரு கலைப்பாணியை

வகுத்துக்கொண்டவர் இவர்.
'மோகமுள்' போன்ற சில நாவல்களாவது
அமர இலக்கியங்களாக
இலச்கிய அடையாளங்களாக
தமிழுள்ளளவும் நின்று நிலைக்கும்.
இதனால் தி. ஜா. வை நாம் நினைவுகொள்வது
நன்றிக்கடன்பாற்பட்டும்
சாலப் பொருத்தமே ஆகிறது.

ஆனாலும் இதுபோதாது.

சித்தாந்த, கலைத்துவ கலப்புப் பற்றி
நம்முள் இரண்டுவகையான நிலைப்பாடுகள்
இருக்கின்றன.
இந்த இரு வகையாருக்கும் அண்மைக் காலம்வரை
பெரும் கருத்துப் போரே நடந்துகொண்டிருந்தது.
இதில் சுவையான அம்சம் என்னவெனில்
இந்த இரண்டு சாராருமே
தி. ஜா.வைக் கொண்டாடியதுதான்.

கலைத்துவ, சித்தாந்தக் கலப்பில்—நிலைப்பாட்டில்—
இவ்விரண்டு திசைக்கோடி வாதிகளும்
ஒரு சமரசத்துக்கு வந்துவிட்டதாக
சமீபகால நிகழ்வுகள் தோற்றம் காட்டியுள்ளன.
இது உண்மையில் அவ்வாறானால் நல்லதுதான்.
அதனால்தான், இச் சந்தர்ப்பத்தில்
இந்த இரண்டு வகையாருமே ஏற்ற இறக்கமின்றிக்
கொண்டாடும தி. ஜா.வை
நினைவு கொள்வது அவசியமென
'இலக்கு' கருதியது.
அதன் விளைவே இந்த நினைவு மலர்.

இந்த நினைவு மலரில்
'இலக்கு' ஆணித்தரமாக ஒரு கருத்தை
முன்வைக்கிறது.
கலைத்துவம் இலக்கியத்தின் உடல்;
சித்தாந்தம் அதன் உயிர்.
உயிர்ப்புள்ள இலக்கியத்துக்கு
ஒன்றின்றி ஒன்றில்லை.
இவற்றின் கலப்பு விகிதம்
கலைஞனைப் பொறுத்த சங்கதி.
ஆத்மாவின் ஞானம் பற்றிய,
பரிச்சயத்தின் ஆழம்பற்றிய விவகாரம்.
இந்தக் கலப்பை தி. ஜா.
மிக்க இயல்பாகவும் சுயமாகவும்

செய்து காட்டியிருக்கிறார்.
சித்தாந்தம் பேசவேண்டிய அவசியம்
எந்த எதார்த்த நாவலுக்கும் இல்லைத்தான்.
ஆனாலும், அகஉலகைவிட்டு
புறஉலகையே அது களமாகக் கொண்டிருக்கிறது.
தி. ஜா.வின் பாத்திரங்கள் எதார்த்தமானவை.
ஒரு ஜாதீய சமூகத்தின்
வகைமாதிரிக்குரிய பாத்திரங்களாக
இவை அமைத்துவிட்டதெனில்,
இது யார் குற்றம்?

தி. ஜா.வைப் பற்றி நாம் நிறையப் பேசலாம்;
எழுதலாம்; ஆய்வு பண்ணலாம்.
இந்த மலரிலுள்ள தி. ஜா. பற்றிய
கட்டுரைகள்
மிக்க சிரமத்தின் பேரில் தேர்ந்தெடுத்து
தொகுக்கப்பெற்றவை.
அம்பையினது மட்டுமே 'இலக்கு'வுக்காக
எழுதப்பட்டது. எனினும்,
ஏதேனும் ஒரு வகையில் வாசகர்க்கு
இவை பயனுள்ளதாகவே அமையும் என்பதில்
எமக்கு நம்பிக்கையுண்டு.

— தேவகாந்தன்

---

நாம் உணர்வதைச் சொல்லவே முடியவில்லை.
எப்படி சொல்லிப் பார்த்தாலும் அதிருப்தியும்
இயலாமையும்தான் மிஞ்சுகிறது.
நீண்ட சதுக்கற்கள் பாவிய
மதுரைச் சந்துகளில் செல்லும்போது
அடையும் மனக்கிளர்ச்சியை
இன்னும் எந்தக் கவிதையும் விவரித்துவிடவில்லை.

—வண்ணநிலவன்

(கல்யாணிக்கு எழுதிய கடிதத்தில்)
நன்றி : இலக்கிய மலர்
(திருப்பரங்குன்றம்)

# தி. ஜா. மறைவுக்கு ஓர் அஞ்சலி



**எம். ஏ. நுஃமான்**

ஜானகிராமன் காலமானார் என்பது ஒருவெறும்செய்திதான். அவரது படைப்புக்கள் இன்னும் உயிருடன் உள்ளன. இனியும் நெடுங்காலம் அவை உயிர் வாழும் இயல்பின. நவீன தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு உள்ள எல்லாருமே ஜானகிராமனை விரும்பிப்படிக்கின்றனர். இதிலே முற்போக்கு பிற்போக்கு என்ற பேதமே இல்லை. அரசியலுக்கும் இலக்கியத்துக்கும் விவாகபந்தமே இல்லை என்று வாதிக்கும் சுத்த இலக்கியவாதிகள் முதல், அரசியலுக்கும் அப்பால் இலக்கியமே இல்லை என்று பிரகடனம் செய்யும் அதிதீவிர புரட்சிகர எழுத்தாளர்கள் வரை ஜானகிராமனின் எழுத்தில் மோகங்கொண்டுதான் உள்ளனர். இந்த இலக்கியச் சித்தாந்தங்கள் பற்றிய எவ்வித பிரக்ஞையுமற்று வியாபார இலக்கியத்துக்கு அடிமைப்பட்டுப்போன ஜனரஞ்சக வாசகனுக்குக்கூட ஜானகிராமன் ஒரு அன்னியமான எழுத்தாளன் அல்ல. இவ்வாறு பல்வேறு இலக்கிய நிலைப்பாடு உள்ளவர்களையும், பல்வேறு ரசனை மட்டத்தில் உள்ளவர்களையும் தன்வசமாக்கும் எழுத்தாற்றல் புதுமைப்பித்தனுக்குப் பிறகு ஜானகிராமனுக்கே சாத்தியமாயிற்று என்று சொன்னால் அது தவறாகாது.

மாறும் சமூகத்திலே ஆண் பெண் உறவிலே ஏற்படும் நெறிசலே ஜானகிராமனின் எல்லாப் படைப்புக்களிலும் (குறிப்பாக நாவல்களில்) கையாளப்படும் பிரதான விசயப் பொருளாகும். ஆண் பெண் உறவு பற்றிய பாரம்பரிய சமூக நெறிமுறைகள் உடைந்து வருவதை அவர் தன் படைப்புக்களில் சிறப்பாக வெளிப்படுத்தினார். புதிய சமூக நிலைமைகளுக்கும் பாரம்பரிய அல்லது நிலப்பிரபுத்துவ ஒழுக்க நியமங்களுக்குமிடையே அல்லலுறும் மனித உணர்வை, அதன் சோகத்தை மிகுந்த பொறுப்புணர்வுடனும் மனிதாபிமானத்துடனும் தன் படைப்புக்களில் அவர் சித்தரித்தார்.

'சிறுவயது முதலே என்னுடைய மனதில் 'கன்வென்ஷன்' என்று சொல்லப்படும்படியான கட்டுப்பாடுகளை எதிர்க்கும் ஒருமனோபாவம் உருவாயிற்று. நம்முடைய மக்கள் மரபையும் (டிரெடிஷன்), கட்டுப்பாட்டையும் ஒன்று சேர்த்துக் குழப்பிக்கொள்கிறார்கள் என்று நினைக்கிறேன். கட்டுப்பாடுகள் காலத்துக்கு ஏற்றபடி மாறும் தன்மையுடையன. ஆனால், அவைகளுக்கு நம்முடைய அன்றாட வாழ்வில் நிரந்தரமான ஒரு இடத்தை அளிக்க முற்படும் போதுதான் தனிமனித சுதந்திரம் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. ஒரு சமுதாய நாகரீ

கத்தின் உயிர்ப்புச் சக்தியுடன் கூடிய ஜீவனானது, இம்மாதிரி யான கட்டுப்பாடுகளிலே நசித்துப் போக ஏது இருக்கிறது. மனித உணர்ச்சிகளைப் பற்றி, மன விகாரங்களைப் பற்றி எழுத முற்படும்போது கட்டுப்பாடு களை அறுத்தெறிய வேண்டி யிருக்கிறது. என்று ஜானகிரா மன் ஒரு பேட்டியிலே கூறியுள் ளார். அவரது படைப்புக்களில் இச் சிந்தனை வெளிப்பாட்டை நாம் காணலாம்.

ஆயினும், நிலப்பிரபுத்துவ விழுமியங்களின் அடிப்படையில், ஒழுக்கவியல் கண்ணோட்டத்தில் சிலர் ஜானகிராமனைத் தாக்கி யுள்ளனர். பெண்களைச் சோரம் போபவர்களாகவும், சலனசித்தம் உள்ளவர்களாகவும் அவர் சித் தரித்துள்ளார் என்று அவர்கள் கூறுகின்றனர். இது மனித யதார்த்தத்தைக் காண மறுப் போரின் கூற்றெனலாம். ஒழுக்க வியல் கண்ணோட்டத்தில் மட்டும் நின்று ஜானகிராமனை விமர்சிப்பது நியாயமாகாது.

ஜானகிராமன் அடிப்படையில் ஒரு யதார்த்த நெறிக் கலை ஞரே. அதேவேளை கற்பனா வாதத்தின் அம்சங்களையும் நாம் அவரிடம் காண்கிறோம். அவ் வகையிலே யதார்த்தமும், மிகை உணர்ச்சியும் கலந்த கலவையே அவரது கலைப்பாணி எனலாம். தனது படைப்புக்களில் அன்பு, நேசம், நேர்மை, ஆழ்ந்த தூய கலையுணர்வுபோன்ற உன்னத உணர்வுகளுக்கு அவர் அழுத்தம் கொடுக்க முனையும்போது ஓரளவு கற்பனாவாதமும், மிகையுணர்ச்சியும் அவருக்குத் தவிர்க்க முடியாததாய் விடு கிறது.

அவரது இந்தப் படைப்புநெறி யிலிருந்து அவர் எழுப்பி வரும் உன்னத உணர்வுகளிலிருந்து, அவரது மொழிநடையைப் பிரித் துப்பார்க்க முடியாது. பலர் அவரது மொழி நடைக்காகவே அவரில் மோகமுற்றுள்ளதாகக் கூறுவர். அவரது மொழிநடை அவரது கலையின் இன்றியமை யாய் பண்பாகும். தற்கால உரை நடைக்கு-உரைநடை இலக்கியத் துக்கு, ஒரு புதிய வளமும் வனப் பும் கொடுத்தவர்ஜானகிராமன். நாவல், சிறுகதைகள் மூலம் மட்டு மன்றி, நாடகம், மொழி பெயர்ப்பு, பிரயாண நூல்கள் போன்றவை மூலமும் அவரது எழுத்து ஆளுமை நன்கு வெளிப் பட்டிருக்கின்றது. இத்துறை களில் இதுவரை அவரது சுமார் இருபத்தைந்து நூல்கள் வெளி வந்துள்ளன.

இவற்றை அவரது இலக்கியப் பணி என்று சொன்னால் அவர் ஒத்துக்கொள்வதில்லை. இலக்கிய பணி என்று எதைச் சொல்வது? என் ஆத்ம எதிரொலிப்பாக, நான் வாழும் வாழ்க்கையின் ரசனையை எனக்கு எளிதாகக் கைவரும் எழுத்தின் மூலம் வெளிக்காட்டுகிறேன். இதிலே சேவை என்பதோ, பணி என் பதோ இடமே பெறவில்லை. எனனுடைய இன்பங்களை, நான் துயக்கும் சோக உணர்வு களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவே நான் விரும்பு கிறேன். சுற்றிலும் உலகம் சிறிய தும் பெரியதுமாக சாதாரண அசைவுகளில்கூட வியப்புகள்

நிறைந்து இயங்குகிறது. அதைப் பார்த்துக் கொண்டிருப்பதே ஆனந்தம்தான். அதைத்தான் நானும் பகிர்ந்து கொள்கிறேன்- எழுத்து மூலம்' என்று அவர் கூறியுள்ளார்.

தன்னுடைய இலக்கியச் சாதனைகள் பற்றி ஒருபோதும் அலட்டிக் கொள்ளாது அடக்கமாக இருந்து, இன்றைய தமிழ் இலக்கியத்தில் சிலர் எட்ட முடியாத சில சிகரங்களைத் தொட்டு மறைந்துபோன ஜானகிராமனின் உயிர்வாழும் படைப்புக்களில் நாம் பெற்றுக்கொள்வதற்கு எவ்வளவோ உள்ளன.

—புதிசு, மே 1983

★ ★ ★ ★

# செ. க.

## இலக்கியச் சந்திப்பு

செ. க. என்று அன்புடன்
அழைக்கப்படும்
திரு. செ. கணேசலிங்கன்
ஈழத்தின் முதுபெரும்
எழுத்தாளர்.

நாவல், சிறுகதை,
கட்டுரைகள் என்று
பல்வேறு துறைகளிலும் தம்
ஆளுமையை
வெளிப்படுத்தியுள்ள இவர்
**மரணத்தின் நிழலில்** என்ற
நாவலுக்காக
1995ன் தமிழ்நாடு அரசு
பரிசினைப் பெற்றுள்ளார்.

கருத்தை இலக்கியத்தோடு
மட்டும்
வைத்துக்கொண்டு,
முற்போக்கு, பிற்போக்கு
பேதமற்ற நட்புறவை
சகல எழுத்தாளரோடும்
கொண்டுள்ள ஒரு—
சிலவேளை ஒரே—
ஈழத்து எழுத்தாளர் இவர்.

ஈழத்தில் மாணவ பருவத்தில்
எழுதத் தொடங்கியவர்.
சரஸ்வதி காலமுதல்
தமிழக எழுத்தாளர்களுடன்
நேசமிக்க
தொடர்பு கொண்டவர்.
'இலக்கு'வுக்காகவே அளித்த
இப்பேட்டி, செ. க. வின்
இன்னும் துல்லியமாகாத—
புரியப்படாத பன்முகங்களை
தெளிவாக
வெளிப்படுத்துகிறது.

—ஆசிரியர்

இலக்கு : முதன் முதலில் தாங்கள் எழுத ஆரம்பித்த தற்கான உந்து சக்தி எது?

செ.க : என் சிந்தனையில் தோன்றிய கருத்துகளை மற்றவர் களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமே எழுத்துத் துறையில் என்னை ஈர்த்தது. அவ்வேளை இலங்கையிலிருந்து வெளிவந்த ஈழகேசரி, சுதந்திரன், தினகரன் போன்ற பத்தி ரிகைகளே பயன்பட்டன. என் சிறுகதைகள், கட்டுரைகளை வெளியிடுவதில் எவ்வித சிரமும் என்றும் எனக்கு இருக்கவில்லை. இவ்வாய்ப்பு எல்லோருக்கும் கிடைத்து விடுவதில்லை என்றே கருதுகிறேன்.

இல : தங்கள் எழுத்துச் செல்நெறி யதார்த்தப் போக்காக இருந்ததா அப்பொழுதே? இது இயல்பாக ஏற்பட்டதா, அன்றி, அந்நேர சமூக அரசியல் சூழ் நிலையின் விளைவாக ஏற்பட்டதா?

செ.க : இலக்கியக் கோட்பாடுகளை இன்று முன்வைத்துப்பார்க் கும்போது என் ஆரம்பகால சிறுகதைகள் இயற்பண்பு வாதம் (Naturalism) சார்ந்தவையாகவே இருந்தன. ஆயினும் பெரும் பாலானவற்றில் சமுதாய உணர்வு தொக்கி நின்றதையும் கூற வேண்டும். அதற்கு அக்கால கட்டத்திலேயே அரசியல், சமூக சீர்திருத்தப் போராட்டங்களில் நானும் ஈடுபட்டதே காரணம்.

இல : தாங்கள் எழுத்து வளர்ச்சி அடைந்திருந்த காலத்தில் ஈழத்தில் சிற்றிதழ்கள் எப்படி இருந்தன? அவற்றின் போக்கு, இலக்கிய வளர்ச்சியை முன் னெடுத்ததாக அமைந்திருந்ததா? அல்லது, வளர்ச்சிப் போக்கின் பின்விளைவுகளை நெறிப்படுத்துவதாக இருந்ததா?

செ. க: சிற்றிதழ்கள் எல்லாக்காலத்திலும் வெவ்வேறு கொள் கைகள், கோட்பாடுகளுடன் வெளிவந்து மறைந்து கொண்டே இருந்தன. புதியவை தோன்றவே செய்தன. இலட்சிய நோக்கு டன் இவை ஆரம்பிக்கப்படுவதால் இவையே இலக்கிய வளர்ச் சிக்கு உந்துசக்தியாக இருந்தன என்றே கூறவேண்டும். இவற்றி னூடாகவே பெரும்பாலான சிறந்த எழுத்தாளர் அறிமுகமா யினர். தமிழ்நாட்டிலும் இந்நிலையைக் காணலாம்.

இல : தங்கள் 'அயலவர்கள்' நாவல்வரை இலங்கைத் தேசியத்தை தாங்கள் இறுக்கமாகப் பேசியதாகத் தெரி கிறது. அதற்குப் பின்னான நாவல்களில் 'தமிழ்த் தேசியம்' அதே அளவு இறுக்கத்துடன் பேசப்பட்டிருக் கிறது. அகதிகளின் சோகம் (உ+ம்: ஆண்மையிழந்த வன் சிறுகதை) மனிதாபிமான உணர்வை மேலும் மேலும் அதிகரிக்க வைத்தபோது, தமிழ்த் தேசிய உணர்வையும் இயல்பில் அதிகரிக்கச் செய்தது என்றால் சரியாக இருக்குமா?

செ. க: தேசியம் பற்றிய என் கோட்பாடுகளை அயலவர்கள் நூலிலேயே சிறப்பாக முன்னுரையிலும் விளக்கியுள்ளேன். அதே வேளை நடைமுறையிலுள்ள தமிழ் தேசியப் போராட்டங்களை மறந்துவிடவோ, மறுத்துவிடவோ என்றும் நான் முயலவில்லை. தேசியம் ஒரு முதலாளித்துவக் கோட்பாடே. முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கில் தேசிய எழுச்சி எழுவதும் தவிர்க்க முடியாதது என்றே கூறவேண்டும். சோஷலிசம் பாட்டாளிகளின் கோட்பாடாகும், அங்கு தேசிய இனங்கள் ஒன்றுபடமுடியும். (லெனின் சோஷலிசப்புரட்சி மூலம் பல தேசங்களை ஒன்றிணைத்து சோவியத் யூனியனைக் கட்டி எழுப்பினார். கோர்பச்சேவ் - யெலஸ்டின் முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தை கொண்டுவர மீண்டும் தேசியம் தலையெடுத்து சோவியத் யூனியன் பிளவுண்டது. யுகோசிலவாகியாவில் தேசிய இனங்கள் பிரிவதற்கு குரூர யுத்தம் நடைபெறுகிறது.)

இல: தங்கள் காலத்தில் (ஈழத்தில்) ஜாதிப் பிரிவினைகளால் விளைந்த சமூகக் கொடுமைகளுக்கெதிரான படைப்புகளாக வெளிவந்த இலக்கியங்கள் யதார்த்த நெறியை பின்பற்றின. இன்று இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில், இவ்வகையான கொடுமைகளை எதிர்த்துப்பேச அணிதிரள முன்வைக்கிற இலக்கியக் கொள்கையை 'தலித் இலக்கியம்' என்கிறார்கள் யதார்த்த நெறிப்பட்ட முற்போக்கு இலக்கியக் கொள்கைக்குள் தலித் இலக்கியம் அடங்கி நிற்க முடியாதா? முடியுமாயின் இதன் அரசியல் பின்னணி என்ன?

செ. க: இலங்கையில் முற்போக்கு அணியினர் சாதிப் பிரச்சனையை அரசியல் கட்சிக்கூடாகவே கையாண்டு போராட்டங்கள் நடத்தினர். இலக்கியத்திலும் 50 ம் 60 ம் ஆண்டுகளில் அப்போராட்டங்கள் பிரதிபலித்தன. சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்டு கட்சியே மக்களை அணிதிரட்டி இப்போராட்டத்தை முன் எடுத்தது. இலங்கையில் சாதிப்பிரிவினை அரசியல் ரீதியாக அங்கீகரிக்கப்படவில்லை. இதற்கு மாறாக இந்தியாவில் சாதிப்பிரிவினை அரசியலமைப்பிலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டு தேர்தலிலும், அரச நிர்வாகம், கல்வி அனைத்திலுமே ஊடுருவி நிற்கிறது. தலித் எனக் கூறப்படும் அடக்கி ஒடுக்கப்படும் வர்க்கத்தவரை புரட்சிகர (கம்யூனிஸ்டு) கட்சிகளால் ஒன்றிணைத்து வர்க்கப்போராட்டமாக முன்னெடுத்துச் செல்ல முடியா நிலை அவை தனி தலித் இயக்கமாக வளர்ந்து வருவதைக்காணலாம். ஆயினும் தலித் இயக்கம் ஒரு வளர்ச்சிக் காலகட்டத்தில் புரட்சிகர அரசியலுடன் இணைந்தே விடிவு காண முடியும். 50, 60 களில் இலங்கையில் எழுந்த தலித் கலை, இலக்கியப் போக்குகள் இந்தியாவில் அண்மையிலேயே பிரக்ஞையுடன் கையாளப்படுகின்றன.

இல: பெண்ணியம் பரவலாகப்பேசப்பட ஆரம்பித்த பின்னால் பெண்களின் நிலை எப்படி இருக்கிறது? பெண்ணிய இலக்கியங்கள் எப்படி வளர்ந்துள்ளன?

செ. க: சர்வதேச அரங்கில் ஐ. நா. சபையின் ஆதரவில் உலக மகளிர் மகாநாடுகளை ஒட்டி எழுப்பப்படும் குரலின் தாக்கமே இந்தியாவில், தமிழ்நாட்டிலும் சிறிதளவு, பெண்ணியம் பற்றிய குரலாக விழிப்பு நிலை ஏற்படுத்தி வருகிறது. இது தவிர அரசியல், கலை இலக்கியத்தில் பெண்ணியம் இந்தியாவில் இதுவரை பெரிய தாக்கத்தை ஏற்படுத்திவிடவில்லை. உயர்தர மத்தியதர பெண்களின் பல அமைப்புகள் ஆங்காங்கே எழுந்தபோதும் பெண்ணியக் கோட்பாடுகள் எழுச்சிகள் இந்தியாவில் இன்னும் முதன்மை பெறவில்லை. டி.வி., ரேடியோ, சினிமா பிற கலை இலக்கியங்களிலேயே இன்னும் ஆணாதிக்கக் கருத்துக்கள் முதன்மை பெற்றிருப்பதைக் காணலாம். காரணம் இன்னும் நாடு சித்தாந்த ரீதியில் நிலப் பிரபுத்துவ கோட்பாடுகள், மதிப்புகளில் இருந்து விடுபடவில்லை என்றே கூறுவேன். பஞ்சாயத்து போர்டில் 30% பெண்களுக்கு என்பதும் ஏமாற்றே. பெண்களுக்கு உரிமை வழங்குவதாயின் சட்டசபை, நாடாளுமன்றத்தில் 50க்கு இல்லாவிடினும் 30க்கு வழங்கலாமே.

இல: 60-80 க்கள் வரை ஈழத்தில் ஏற்பட்டிருந்த நாவல் இலக்கிய வளர்ச்சிபோல் பின் எப்போதும் ஏற்படவில்லை என்பது பற்றி?

செ. க: 60-80 க்கள் வரை ஏற்பட்ட நாவல் வளர்ச்சி தேக்கமடைந்து விட்டதாகக் கூறிவிடமுடியாது. 80-95 வரையான காலகட்டத்திலும் ஏராளமான நாவல்கள் வெளிவந்துள்ளன. இலங்கையை மட்டும் கருத்தில் கொள்ளாது அகதிகளாகக் குடியேறிய உலக அரங்கையும் நோக்க வேண்டும். இலங்கையில், யாழ். நகரில் ஏற்பட்ட அச்சுப் பிரச்சனை ஓரளவு பாதித்துள்ளது என்று கூறலாம். அடுத்தது தேசிய விடுதலைப் போராட்டம் யுத்த வடிவம் எடுத்து முதன்மை நிலை பெற்றிருப்பதால் கலை, இலக்கிய வெளியீடுகள் ஓரளவு பாதிப்பு அடைந்துள்ளன எனக் கூறலாம்.

இல: ப. சிங்களரத்தின் 'புயலில் ஒரு தோணி', அண்ணாவின் 'ரங்கோன்ராதா' போன்ற நாவல்களை போல குறிப்பிடத் தகுந்த நாவலிலக்கிய முயற்சி புலம் பெயர்ந்தோரிடையே ஏற்பட்டிருக்கிறதா?

செ. க: இவ் அதீதக் கற்பனையான நாவல்களை வைத்து புலம் பெயர்ந்தோரிடையே எழுந்த நாவல்களை ஒப்பிடுவது சிறப்பல்ல. இயற் பண்பு வாத யதார்த்த நாவல்கள் பல வெளிவந்துள்ளன. இவற்றின் தனிச் சிறப்பு நடைமுறை அவசியமாகவும் பிரதிபலிப்பதாகும். இப்போக்கு தமிழ்நாட்டில் கூட காணப்படவில்லை.

இல: ஈழத்தில் 'குமரன்' என்ற பத்திரிகையை நடத்தியுள்ளீர்கள். இதன் அனுபவங்களைத் தொகுத்துச்சொல்ல முடியுமா?

செ. க: 'குமரன்' சஞ்சிகையை 20 ஆண்டுகள் நடத்தி 77 இதழ்களை வெளியிட்டேன். அரசியல் நிலைமைகள் தணிக்கைகள் ஒழுங்காக வெளியிட முடியாது தடுத்தன இச்சஞ்சிகையை மார்க்சிய இதழாக ஒரு சில தோழர்களின் எழுத்துப் பணியுடன் நடத்தினேன். அரசியல் கலை இலக்கியக்கோட்பாட்டில் இலங்கையில் இச்சஞ்சிகை ஒரு பகுதி இளைஞரிடை தாக்கம் ஏற்படுத்தவே செய்தது. தமிழ்நாட்டிலும சிறுபான்மையினர்—இயக்கம் சேர்ந்தவர், தேடிப்படித்தனர்.

இல: 'சரஸ்வதி' போன்ற பத்திரிகைகளுடன் தங்களுக்கு நெருங்கிய தொடர்பு இருந்திருக்கிறது. அன்றைய சிறு பத்திரிகைச் சூழல் எவ்வெவ் வகையில் இன்றைய சிறு பத்திரிகைகளுடன் வேறுபடுகிறது அல்லது ஒற்றுமை கொள்கிறது?

செ. க: சரஸ்வதி, சாந்தி போன்ற சிறுபத்திரிகைகள் இலக்கிய நோக்குடன் முற்போக்கு இலக்கியத்தைப் படைப்பதில் தனிப் பங்கு ஆற்றியுள்ளன. இலக்கிய வரலாற்றில் இவை தனியிடம் வகிக்கின்றன. இன்றைய குறிப்பிடத் தக்க எழுத்தாளர் பலர் இவற்றின் மூலம் அறிமுகமாகி வளர்ந்தவர்களே. முன்னர் கூறியயதுபோ சிறு பத்திரிகைகளே கலை, இலக்கிய வளர்ச்சியில் தக்க பங்காற்றுகின்றன. மற்றைய வணிக இதழ்கள் சினிமா போல 'நட்சத்திர' எழுத்தாளர்களையே உருவாக்குகின்றன.

இல: மணிக்கொடி, சரஸ்வதிபோல சகாப்தங்களை நடத்திய சிறு பத்திரிகைகளாக ஈழத்தில் எதையாவது சொலல முடியுமா? 'சுதந்திரன்' வார இதழ் ஒரு சகாப்தமான பத்திரிகையென சொல்ல முடியுமா?

செ. க: இவற்றோடு இலங்கைப் பத்திரிகைகளை ஒப்பிட்டுப் பார்ப்பது சிறப்பில்லை. மறுமலர்ச்சி, குமரன், மல்லிகை, மரகதம், சுதந்திரன் வார இதழ் மட்டுமல்ல கைலாசபதி ஆசிரியராக இருந்த காலகட்டத்தில் தினகரன் ஞாயிறு வார இதழும் கலை இலக்கிய வளர்ச்சிப் போக்கில் தக்க பங்காற்றியது எனக் கூறலாம்.

இல: தாங்கள் இலங்கைத் தேசியத்தை முன்னெடுத்திருந்த அந்தக் காலத்தில் அதேபோல் சிங்களத்தில் இலங்கைத் தேசியத்தை (இனம் அதுபோல மொழி மதம் கடந்து) முன்னெடுத்த சிங்கள எழுத்தாளர் யார்?

செ. க: இடதுசாரிக் கட்சிகளைச் சார்ந்த எழுத்தாளர்கள் தேசியத்தைக் கடந்து சோஷலிச கலை இலக்கியத்தில் ஆக்கம் காட்டியதை அறிவேன். இரு மொழிகளிடையேயும் மாற்று

மொழி பெயர்ப்புகள் வெளிவராதது ஒரு பெருங்குறையே. அதனாலேயே நாம் ஒப்பிட்டு மதிப்பீடு செய்ய முடியா நிலை ஏற்பட்டுள்ளது.

இல : அவர்களுடைய நிலைப்பாடு இன்று எப்படி இருக்கிறது?

செ. க : சிங்கள எழுத்தாளரின் இன்றைய நிலையையும் ஒன்றாக மதிப்பிட முடியா நிலையே ஏற்பட்டுள்ளது. அங்கு தேசிய பாஸிசம் தலையெடுத்துள்ளது. இக்காலகட்டங்களில் ஜனநாயக ரீதியான கலை, இலக்கியப் படைப்புகளை அங்கு காண்பது அரிது.

இல : இந்தியாவில் சாகித்ய அகாடமி பரிசுகள் பெற்றதுபோல் இலங்கை சாகித்ய மண்டல பரிசுகள் அதிக வாதப் பிரதிவாதத்தை தோற்றுவிப்பதில்லை ஒன்று சொல்லலாம். இருந்தும் இதுவரை தாங்கள் தங்கள் நூல்களை பரிசுத் தேர்வுக் குழுவுக்கு அனுப்புவதில்லை என்று சொல்லப்படுகிறது குறித்து....?

செ. க : மேலே உள்ள பதிலைக் காண்க, தேசிய பாஸிஸத்தை எப்போதும் நான் ஏற்பதற்கில்லை.

இல : நவீனத்துவம்-பின் நவீனத்துவம் பற்றி தமிழியலாளர் மத்தியில் பரவலான வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன. யதார்த்தவகை இலக்கியமே தமிழில் இன்னும் முழு வளர்ச்சி பெறவில்லை, இதற்குள் நவீனத்துவம், பின் நவீனத்துவம் என்பதெல்லாம் குறைப் பிரசவங்களாக நெளிகின்றன என்கிறார் ஒரு நண்பர். தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்!

செ. க : இவ்வார்த்தைகள் மேல் நாடுகளில் தோன்றியவை இவற்றின் பின் புறமாக அரசியல், பொருளாதார, சமூக, கருத்தியல் பின்னணிகள் உண்டு. இவற்றை நன்கு அறியாது இன்னும் ஆங்கில காலனித்துவ சிந்தனையிலிருந்து விடுபட முடியாத ஒரு சிறுபான்மையினர் தக்க விளக்கம் கூடத்தராது இவ்வார்த்தைகளை விமர்சனத்துறையில் புகுத்தி எழுத்தாளரையும் வாசகர்களையும் ஏமாற்றி வருகின்றனர்.

1959 ல் ரையிட் மில்ஸ் (WRIGHT MILLS) என்ற அமெரிக்க சமூகவியலாளர் தன் 'சமூகவியல் கற்பனை' (Sociological Imagination) என்ற நூலில் ''நாம் 'நவீன காலம்' என்று கூறப்படும் காலத்தை முடித்து 'பின் நவீன காலம்' என்ற கால கட்டத்தில் நுழைந்துள்ளோம்'' எனக் குறிப்பிட்டார். இரண்டாவது உலக யுத்தம் முடிவுற்ற பின்னர் ஏற்பட்ட முதலாளித்துவ வளர்ச்சி, தொழில் நுட்ப விஞ்ஞான ஏற்றம் ஆகியவற்றைக் கொண்ட அறிவொளி தந்த நம்பிக்கையை

முன்வைத்தே மில்ஸ் கூறினார். அவ்வேளையே 'பின் நவீனத்துவம்' பற்றிய கூற்று விமர்சிக்கப்பட்டது. 1990 ல் ஏற்பட்ட சோவியத் யூனியனின் பின்னடைவு, பனிப்போரின் முடிவு ஆகிய வற்றைக் கருத்தில் வைத்து 'பின் நவீனத்துவம்' என்பது மேல் நாடுகளில் பரவலாக பலதுறைகளிலும் முன்வைக்கப்படுகிறது. மறைமுகமாக உலகம் பிளவின்றி ஒரே தலைமையில் முதலாளித்துவ சந்தை பொருளாதாரத்தை ஏற்று ஒரே உலகமாக வளர்ந்து வருகிறது என்ற கோட்பாடு அனைத்துத் துறையிலும் முன் வைத்து விளக்கம் தரப்படுகிறது.

மார்க்சிய கோட்பாட்டாளர் இப்போக்கை முற்றாக எதிர்க்கின்றனர். இது உலக மக்களை ஏமாற்றும் ஒரு சபரசப் போக்காகும். ஏனெனில் மார்க்சிய விஞ்ஞானத்தின் முதற்கோட் பாடான வரலாற்றும் பொருள் முதல்வாதத்தை, அதன் அடித் தளமான வர்க்கப் போராட்டத்தை இக்கூற்று முற்றாக மறுக்க முயல்கிறது. முதலாளித்துவமே அனைத்து சமூக வேறுபாடுகள், ஏற்றத் தாழ்வுகள், வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம் யாவுக்கும் தீர்வு காணும் எனக் கூறமுனைவதோடு முதலாளித்துவத்தின் அடுத்த வளர்ச்சிக் கட்டமான சோஷலிசப் புரட்சியையும் மறுக்க, மறைக்க முயல்கிறது. மார்க்சியத்தின் சித்தாந்தமான வளர்ச்சிப் போக்கில் சமூக முரண்பாடுகள் மாற்ற மடைவதாகக் கூறப்படும் இயங்கியல் பொருள் முதல் வாதத்தை யும் மறைக்க மறுக்க முயல்கிறது.

இவற்றையெல்லாம் நன்கு அறியாது 'பின் நவீனத்தும்' என பேசுவது முதலாளித்துவ அலையில் அடித்துச் செல்வது மட்டு மல்ல, இங்கு கூறுவது சிறுபிள்ளைத்தனமுமாகும்.

> இல : கைலாசபதி, காண்டேகர், மு. வரதராசன், அகிலன் போன்ற எழுத்தாளர்களோடு நெருங்கிய தொடர்பு உள்ளவராக இருந்திருக்கிறீர்கள். அந்த அனுபவம் பற்றிக் கொஞ்சம் கூறுங்கள்.

செ. க : நெருங்கிப் பழகி என்னிலும் பாதிப்பு ஏற்படுத்திய இவ் எழுத்தாள நண்பர்களை இழந்தது பெருங்கவலை தருகிறது. அவர்களது எழுத்துகள் வாழ்க்கையில் நான் பெற்ற அனுபவம் பற்றித் தனி நூல் ஒன்று எழுத வேண்டும் என்ற ஆர்வமுண்டு. அதற்கான கால நேரத்தை எதிர்பார்த்துள்ளேன். சுருக்கமாக அவற்றைக் கூறுவது மிகச்சிரமமானது.

> இல : உலகம் புகழும் கவிஞர் பாப்லா நெருடா இலங்கை வந்தபோது, இலங்கைப் படைப்பாளிகள் ஒரு கூட்டம் நடத்தினார்கள். அதற்கு இளைஞரா யிருந்த நீங்கள் தலைமை தாங்கினீர்கள். அதைப்பற்றி அவரைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்.

செ. க: ஆமாம், இந்நிகழ்ச்சி என் வாழ்க்கையில் மறக்க முடியா தது மட்டுமல்ல பெருமைப் படக்கூடிய நிகழ்ச்சியுமாகும். 1956 ல்

என நினைக்கிறேன். கொழும்பில் நடந்த உலக சமாதான மகா நாட்டிற்கு பாப்லாநெருடாவும் வந்திருந்தார். அவ்வேளை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அவரை அழைத்து கொழும்பு பிரதான வீதியிலுள்ள கட்டிடத்தில் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தது. திடீரென ஏற்பாடு செய்த கூட்டத்தில் என்னை தலைமை தாங்கி நடத்தும்படி வேண்டினர். கவிஞர் ஸ்பானிஷ் மொழியில் பேசுவதை நேரடியாகத் தமிழில் மொழி பெயர்க்க பாண்டிச்சேரியிலிருந்து மகாநாட்டிற்கு வந்த நண்பர் ஒருவர் உதவினார். இதில் வேடிக்கை என்னவெனில் அவ்வேளை கவிஞர் பெயரை அறிந்திருந்தேனே தவிர, நான் எதையும் படித்திருக்கவில்லை. அந்நிகழ்ச்சியின் பின்னரே ஆங்கிலத்தில் தேடிப் படித்தேன். அவரின் மறைவின் போது 'குமரன்' இதழில் சில மொழி பெயர்ப்பு கவிதைகளை வெளியிட்டேன். ரஷ்யப் புரட்சியை. 'பூமிப்பந்தில் சிவந்த ரோசா மலர் ஒன்று வைக்கப்பட்டது' என்ற அவரின் கூற்று என்றும் மறக்க முடியாதது, பாரதி கூறிய 'ஆகா என்று எழுந்தது பார் யுகப் புரட்சி' என்பதுபோல.

இல : அண்மையில் காலமான இசையமைப்பாளர் சலீல் சௌத்ரி பற்றிய உங்கள் அனுபவம்...

செ. க : பாலுமகேந்திராவுடன் இணைந்து தயாரித்த கோகிலா என்ற கன்னடப்படத்தின் தயாரிப்பு நிர்வாகத்தை கவனித்த வேளையில் அத்திரைப்படத்தின் இசையமைப்பாளராக சலீல் சௌத்திரி பணியாற்றினார். அவ்வேளை நெருங்கிப் பழகி சென்னையில் அன்னாரைக் கவனிக்க வேண்டிய பொறுப்பையும் ஏற்கநேர்ந்தது. பின்னணி இசை அமைக்கும்வேளை இதயப் பரிசோதனைக்காக சென்னை விஜயா மருத்துவ மனையில் சேர்க்க நேரிட்டது. அதனாலும் மேலும் பழகுவது மட்டுமல்ல இசை பற்றிய அன்னாரது கோட்பாடுகள் பற்றியும் கலந்துரையாட முடிந்தது. திரை இசைத்துறையில் அன்னார் கொடி கட்டிப் பறந்த காலம் ஒன்றும் இருந்தது. 1977 ல் எங்கள் கோகிலாவுக்கு இசை அமைக்கும் காலகட்டத்தில் இந்திப்பட உலகில் அவர் ஒதுக்கப்பட்டு வந்தார். மேல்நாட்டிசை தொடக்கம் கிராமிய இசை மட்டுமல்ல இசைக்கோட்பாடுகளிலும் அவர் பாண்டித்தியம் பெற்றிருந்தார். மேற்குவங்க இடது அரசியல் சார்பும் அவர் சிறப்பை உயர்த்தியது. இத்தனை சிறப்பும், இசை பற்றிய கோட்பாடுகளும் மற்றைய எந்த இசையமைப்பாளருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. எனது வினா ஒன்றிற்கு அன்னார் கூறிய தக்க பதில் இன்றும் நினைவில் வருகிறது. 'வெற்று இசை கலையா, கலைவடிவமா?'

பதில்: (சில கணநேர சிந்தனை) 'கலையே; கலைக்கு வடிவமும் உள்ளடக்கமும் உண்டு. இசையைக் கேட்டே இராணுவத்தினர் அணிவகுத்துச் செல்வதை எம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. அதுவே உள்ளடக்கம்.

இல : இன்றைய படைப்பாளிகளில் திரைப்படம் பற்றிய பயிற்சியும் அனுபவமும் உள்ள மிகச்சிலரில் நீங்கள் ஒருவர். இன்றைய திரைப்படத்துறை பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

செ. க : திரைப்படம் இன்று முற்று முழுதாக வணிகநோக்குடன் தயாரிக்கப்படுகிறது. அவ்வக் காலத்தில் இலாபம் சேர்ப்பதில் வெற்றி பெறும் படங்களின் வாய்பாடுகளை முன்வைத்தே அவ்வக்காலங்களில் திரைப்படங்கள் உற்பத்தியாகின்றன.

செக்ஸும் வன்முறைக் காட்சிகளுமே முதன்மை பெறுகின்றன. மக்களின் சமூகாய உணர்வை வளர்க்கும் நோக்கத்தைக் காண்பது அரிது. நிலப்பிரபுத்துவ கோட்பாடுகள், மதிப்புகளையே இன்னும் முதன்மைப்படுத்துகின்றனர். இதுதவிர திரைப்படங்களும் நட்சத்திர நடிக-நடிகையரின் கவர்ச்சியும்அபினியாக பெரும்பான்மையினரை மயக்கி வைப்பதே கவலைக்குரியதாகும். இம்மக்கள் தமது யதார்த்த வாழ்வை மறந்தும், அதற்கு அந்நியப்பட்டவராயும் கற்பனை உலகில் மயங்கி வாழும் நிலையே பரிதாபத்திற்குரியதாகும்.

இல : இன்றைய பெரும்பாலான தமிழ் நாவல்கள் பத்திரிகைத் தொடர் கதைகளே என்று ஒரு அபிப்பிராயம் நிலவுகிறது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

செ. க : அது உண்மையே. பத்திரிகை சஞ்சிகைகளில் இத்தனை வாரங்களுக்கு என்ற ஒப்பந்தத்தில் எழுதப்படும் நாவல்களைமேல் நாட்டு விமர்சகர்கள் நிராகரித்து விடுகிறார்கள். வாரம் தோறும் ஆர்வமாகத் தொடர்ந்து படிக்கச் செய்வதற்காக செயற்கைத்தனமாக கதை அமைக்கப்படுவதே காரணமாகும். அதே போல 'சோப் ஒப்பரா' எனக் கூறப்படும் விளம்பரம் சார்ந்த டி. வி. தொடர் நாடகங்கள், டெலி சினிமாக்களையும் சிரத்தையோடு விமர்சகர்கள் கொள்வதில்லை.

இல : தங்களுக்குப் பிடித்த தமிழ் நாவல்......? நூலாசிரியர்...?

செ. க: எனக்குப் பிடித்த நாவல், நாவலாசிரியர்கள் என தனிமைப்படுத்திக் கூறுவதற்கில்லை. அவ்வக்காலத்தில் வெளிவந்த ஆங்கில, தமிழ் நாவல்களையெல்லாம் படித்துள்ளேன். ஒவ்வொருவர் எழுத்தில் வெவ்வேறு சிறப்புக்களைக் காண முடிந்தது. பிற மொழிகளில் தான் சிறந்த நாவல்கள் வெளிவந்தன எனக்கூற மாட்டேன். இங்கு வெளிவரும் நாவல்களையும் விமர்சனக்கண்ணோட்டத்தில் கண்டு சுவைக்க என்னால் முடியும். தமிழ் நாட்டிலுள்ள விமர்சகர்களிடையே ஆங்கில மொழியின் காலனித்துவம் இன்னும் நிலைப்பதைக் காணலாம். விமர்சனத்துறையில் இவர்கள் செல்லாக்குப் பெற்றிருப்பதும் பிற்போக்கானது; வருந்தத்தக்கது. சில மேல்நாட்டு விமர்சன வார்த்தைகளை வைத்து ஒரு சிலர் ஆங்கிலம் நன்கு தெரியாதவரை ஏமாற்றுகின்றனர்.

OOO

# கதை சொல்லியின் கதை

## ஞானபீட விருது பெற்ற M. T. வாசுதேவன் நாயர் சொல்ல வேண்டிய கதைகள் இன்னும் எத்தனை எத்தனையோ!

இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற வில்லியம் ஃபாக்னர் (William Faulkner)க்கு எவ்வாறு மிஸ்ஸிஸிப்பிநதி நிலைக்களமாக அமைந்ததோ, அதே போன்று M. T. வாசுதேவன் நாயருக்கு நிலைக்களம் வடகேரளாவில் ஓடுகின்ற பாரதப்புழ என்ற பெயரில் நன்கறியப்படும் நிளா நதியாகும். படைப்பிலக்கியத் துறையில் அவருடைய ஆர்வத்தைப் பேணிக் காத்து ஆற்றலை வளம் பெறச் செய்தது இந்த ஆறுதான். படைப்பாளியின் உலகம் இந்நதியுடனும் அதன் சுற்றுச்சூழலுடனும் பின்னிப் பிணைந்திருந்தது. கூடல்லூர் என்ற கிராமத்தில் பிறந்தவர் M. T. பிரபுத்வ சமூக அமைப்பு வேகமாக நசித்து வருவதை நன்கு உணரலாயினர் அவரது குடும்பத்தினர். குறிப்பிட்டுச் சொல்லும்படியாக வருமானமேதும் கிடையாது அப்பகுதி மக்களுக்கு. வேலையில்லாத் திண்டாட்டம் வேறு. பள்ளிக்கு குழந்தைககளை அனுப்புவது என்பது நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒன்று. அடுத்த வேளை சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்று வீட்டுப் பெண்கள் அடுக்களையில் தவித்துக்கொண்டிருக்க, ஆண் பிள்ளைகளோ வேலைவெட்டியில்லாமல் வீண் பொழுதுபோக்கிக் கொண்டிருக்கும் அவலநிலை.

தான் வாழ்ந்து வளர்ந்து வரும் உலகம் படிப்படியாக சீர்கெட்டு வரும் நிலை, அதன் சோகம் கவிந்த, வெறுமை படர்ந்த இருண்ட சூழல் ஆகியவைபற்றி வாசுதேவன் நாயர் அடிக்கடி தன் படைப்புகளில் குறிப்பிட்டுள்ளார். எதிர்காலம் பற்றிய நம்பிக்கையே வறண்டு போயிருந்தது. யாரைப் பற்றியும் எவருக்கும் அக்கறை இல்லை. வாழ்க்கை மக்களுக்கு ஒரு போராட்டமாயிருந்து வந்த இந்தச் சூழ்நிலையில் இலக்கியத்தில் யாருக்கு என்ன ஈடுபாடிருக்கும்?

ஆயினும், மேற்பரப்பில் அமைதி கொண்டிருக்கும் நிளா நதியின் அடியாழத்தில் ஒரு உணர்ச்சி வேகம் கொத்தளித்துக் கொண்டிருந்தது. வறுத்தெடுக்கும் வறுமையையும், வாழ்க்கையின் வெறுமையையும் மீறி அந்தக் கிராமங்களில் ஒரு உயிர்த்துடிப்பு பீறிட்டு பொங்கிக் கொண்டிருந்தது. நிளாநதியின் கரையோரங்களில் படர்ந்திருந்த அந்தக் கிராமங்களில் கிளைத்தெழுந்து மலையாள இலக்கியத்தில் முத்திரை பதித்தவர்கள்தான் நாவலாசிரியர் உரூப், கவிஞர்கள் இடஸ்ஸேரி கோவிந்தன் நாயர், அக்கித்தம் போன்ற படைப்பாளிகள் இன்றைய படைப்பாளிகளுக்கு முன்னோடிகள். வித்தியாசமான ஒரு இலக்கிய மரபை உருவாக்கி வளர்த்து வந்தனர் இவர்கள். புதிய பல இளம் எழுத்தாளர்கள் தோன்றி இந்த மரபைப் பின்பற்றலாயினர். ஐம்பதுகளில் தனது இலக்கிய வாழ்க்கையைத் தொடங்கி

அடுத்த பத்தாண்டு காலத்தில் நிலையான இடம் பெற்றுவிட்ட M. T.யிடமும் இந்த முன்னோடிகளின் தாக்கம் பெரிதும் வெளிப் பட்டது.

"என்னுடைய வீட்டுக்கு சிறிது தூரத்திலேயே அக்கித்தம் வசித்து வந்தார். அவருக்கு தான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்." ஞானபீட விருது அறிவிக்கப்பட்ட அன்றே இவ்வாறு நினைவுகூர்ந் தார் M. T. தனது படிப்புக்கும் ஆர்வத்திற்கும் ஊக்கமளித்த தனது மூத்த சகோதரர்கள் மூவரையும், தன்னுடைய ஆரம்ப கால படைப்பு களைப் படித்து உற்சாகப்படுத்திய மூத்த சகோதரியையும் பற்றியும் குறிப்பிட்டார்.

இவரது இளமைக் கால நினைவுகள் யாவும் இவருடைய நாவல் களிலும், கலையம்சம் பொருந்திய சிறுகதைகளிலும் பதிவு செய்யப் பட்டுள்ளன. கூடல்லூர், தண்ணிக்குன்னு என்ற குன்று, செழித் தோடும் நிளா நதி இவைதான் இவரது படைப்புகளின் பின்னணி. இந்தச் சிறிய வட்டத்துக்குள் வாழும் மாந்தரே வாசுதேவன் நாயரின் இலக்கிய உலகம். குறுகிய உலகமோ? இருக்கலாம். M. T. ஆத்திரப் படவில்லை; நிதானமிழக்கவில்லை. மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் கூடல்லூரிலிருந்தாலென்ன, சான்பிரான்சிஸ்கோவில் இருந்தாலென்ன, அவர்கள் யாவரும் ஒரே இனம்தானே, அவர் களுடைய உணர்வுகளும், உணர்ச்சிகளும் ஒன்றுதானே? M. T. யின் கேள்வி இது.

1950களிலேயே சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்ற பெயர் பெற்றுவிட்டார் M. T 1953ல் நியூயார்க் ஹெரால்ட், ஹிந்துஸ்தான் டைம்ஸ், மாத்ருபூமி இவை மூன்றும் இணைந்து நடத்திய போட்டி யில், இவரது "வளர்த்து மிருகங்கள்" என்ற சிறுகதை முதல் பரிசு பெற்றது. "நாலுக் கெட்டு" என்ற நாவல் 1959ல் கேரள ஸாஹித்ய அகாதமி விருது பெற்றது. 1970ல் "காலம்" என்ற நாவலுக்காக மத்திய ஸாஹித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது. மகாபாரத காலகட்டத்தை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்ட "ரண்டா முழம்" என்ற நாவலுக்கு 1985-ல் வயலார் விருதும், 1993-ல் ஓடக்குழல் விருதும் கிட்டின.

இவை தவிர, சரிந்துவரும் தரவாடு மரபைப் பற்றி கூறும் "அசுரவித்து", "மஞ்ஞு" [ஆங்கிலத்தில் இது Mist (மூடுபனி) என்று மொழி பெயர்க்கப்பட்டது] ஆகியவை அவருடைய குறிப்பிடத்தக்க நாவல்களாகும். M.T.யின் கதை சொல்லும் பாங்குக்கு இவை எடுத்துக்காட்டு. நெருக்கம், நெழ்ச்சி, நேர்மை ஆகியவை இவரது படைப்புகளின் சிறப்பு. வாசகரையும் தனது குடும்பத்தைச் சேர்ந்தவர் களாகவே எண்ண வைத்து, தனது கற்பனை உலகிற்கு அவர்களை இட்டுச் செல்கிறார் M. T. ஆசாபாசங்கள் மண்டிய உங்கள் சுய ரூபத்தையே அவருடைய படைப்பிலக்கியத்தில் அப்பட்டமாகக் காண்பீர்கள். பெரும்பாலான அவரது பாத்திரப் படைப்புகள் தங்களைத் தாங்களே குடைந்து வருத்திக்கொள்பவர்களாகவும், சந்தோஷமற்றவர்களாகவும், தாங்களே உருவாக்கிக் கொண்ட தனி உலகிலே சஞ்சரித்து வருபவர்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளார்கள். பரபரப்பாக ஓடிக்கொண்டிருக்கும் இவ்வுகில் தங்களைத் தனிமைப்

படுத்திக்கொண்டார்கள் அவர்கள். எவரைப் பற்றியும் கவலைப் படாமல் வாழ்க்கை தன் போக்கில் நடைபோட்டுக்கொண்டிருப்பதை அவர்களும் கவனித்துக் கொண்டுதான் வருகின்றனர்.

துயரம் நிரம்பிய உலகம் அது. பாலைவனத்தில் அபூர்வமாக ஒரு ஊற்று தென்பட்டு தண்ணீரை பீறிட்டடிப்பதைப்போல், பாசமும் அன்பும்கூட சுரக்கின்றன அவரது படைப்புகளில். விரைவிலேயே அந்த உணர்ச்சிப் பெருக்கு வற்றிப்போய், கசப்பான நினைவலை களே உள்ளத்தில் மேலோங்கி நிற்கின்றன. அவரது சிறந்த நாவல் களில் "காலம்" ஒன்றாகும். அதில் சேதுவின் காதலி கூறுகிறாள்: "வாழ்நாள் முழுவதும் சேது நேசித்தது ஒன்றே ஒன்றைத்தான். அது தன்னை மட்டுமே". M.T.யின் சில கதாபாத்திரங்கள் நேசம் பறிக்கப்பட்டு வெறுமையைப் பிரதிபலிப்பவர்களாகவே நம் முன்பு உலவவிடப்பட்டிருக்கிறார்கள்.

நைனிடாலை நிலைக்களமாகக் கொண்டு புனையப்பட்ட நாவல் "மஞ்சு". அதில் வரும் கதாபாத்திரம் ஆசிரியத் தொழிலில் ஈடு பட்டுள்ள விமல். விமல் மூலம் வாழ்க்கையின் வெறுமையைப் படம் பிடித்துக் காட்டுகிறார் M.T. வாழ்க்கையின் அர்த்தமற்ற தன்மையை அவர் படைத்துள்ள பல கதாபாத்திரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

நைனிடால் தூங்கி வழியும் மாதங்களில் அவர்கள் எதிர்நோக்கு வதுதான் என்ன? மரணம்தான். அதைத் தவிர வேறொன்றுமில்லை.

அதே சமயம், நம்பிக்கை வறட்சி. பிரகாசமின்மையை மட்டுமே M.T.யின் படைப்பு பிரதிபலிக்கின்றது என்று கூறிவிடவும் முடியாது. தாங்கள் வாழும் உலகம் தங்களுக்கே அன்னியப்பட்டுப் போய்விட் டதே என்ற ஆதங்கம் அவரது கதாபாத்திரங்கள் மூலம் வெளிப்படு கிறது. கசப்பான உண்மைதான் அது. கூடவே, உலகம் நல்ல தொரு மாற்றம் பெற வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியை மக்க ளிடையே விதைக்கிறார்கள். பொங்கியெழும் உள்ளக் குமுறல்களை கொட்டித் தீர்த்து, உலகில் அகண்ட ஜோதியை ஏற்றி வைக்க முற்படுகிறார் இந்தப் படைப்பாளி.

கதை சொல்லும் பாங்கில் புதியதொரு உத்தியை கையாண்டதே M.T.யின் சிறப்பு. மிகச் சிறந்த கதாசிரியர் என்றே அவரைப் பலரும் கருதுகிறார்கள். "யானையைப் பிடித்தல்" (Catching an Elephant) என்ற அவரது கதைத் தொகுதி ஆங்கில வாசகர்களிடையேயும் பிரபலமாகியுள்ளது.

நாவல், சிறுகதை, நாடகம், திரைப்படம் என்று பன்முகம் கொண்டது M.T.யின் படைப்பாற்றல். "கோபுர நடையில்" என்ற அவருடைய முதல் நாடகம் 1982லும், "ஸ்வர்கம் துறக்குன்ன சமயம்" என்ற சிறு கதைத் தொகுப்பு 1986லும் கேரள ஸாஹித்ய அகாதமியின் பிரிவுகளில் சிறப்புகள் பெற்றன.

திரைப்படத் துறையிலும் இவரது பங்களிப்பு கணிசமானது. "முறப்பெண்ணு" என்ற படத்திற்கு 1963-ல் முதன் முதலாக திரைக்கதை வசனம் எழுதினார். இந்த வகையில் பலமுறை

பாராட்டு பெற்றார். இவர் இயக்கிய பல திரைப்படங்கள் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் புகழ் பெற்றன. இவருடைய ''நிர்மால்யம்'' என்ற திரைப்படம் 1974-ல் தாதாஸாஹெப் பால்கே விருது பெற்றது. ''கதவு'' என்ற படத்திற்கு உலகளவிலும் பாராட்டு கிடைத்தது.

62 வயதாகும் M. T. மாத்ருபூமி இதழின் ஆசிரியர். பத்திரிகாலயத்திற்கு தவறாமல் சென்று வருகிறார். பல விருதுகள் கிடைத்ததில் இவருக்கு பெரும் மகிழ்ச்சி. கூறுகிறார்: ''போராட்டம் நிறைந்த எழுத்தாளரின் வாழ்க்கையில் பாராட்டு மிகுந்த தெம்பை அளிக்கிறது.'' கோழிக்கோடு ''ஸிதார'' என்ற தன் வீட்டில் மனைவி சரஸ்வதி, மகள் ஐஸ்வர்யாவுடன் வசித்து வருகிறார். அவரிடமிருந்து ஏராளமான எதிர்பார்ப்புகள் உள்ளன. தங்கள் உடல் காசியில் தகனம் செய்யப்பட வேண்டும் என்று விரும்புபவர்கள் பலர் உள்ளனர். அந்த புனித அக்னி பற்றி நாவல் எழுதுவது இவருடைய அடுத்த திட்டம்.

OOOOO

நன்றி : INDIAN EXPRESS

ஆங்கில மூலம்: **என். பி. செக்குட்டி**

தமிழில் : **டி. ஸ்ரீனிவாச ராஜகோபாலன்**

OOOOO

---




## வேட்டை

இந்தி மூலம் : **கங்காபிரசாத் விமல்**
தமிழில் : **சௌரி**

வேட்டை விவகாரம்
அவனுக்குப் புரியாத விசயம்
செல்வச்செழிப்பை நாடி
கடல் மலை பாலை படு இடங்களில்

தேடித் திரிகிறான்,
சோர்ந்து சலித்துப் போகையில்
ஜாதகக் கணிப்பில் சஞ்சரிக்கும்
ராசி—கிரகங்களைத் திட்டுகிறான்.

அவனுக்கு அதிர்ச்சி—
தான் நம்பிப் பாதுகாக்கும்
வாழ் நெறி இலட்சியங்களை
பட்டணக்கரைச் சந்தைகளில்
சல்லிசாக விற்றுவிடுகிறார்கள்
பாபம்—சாபம்—பச்சாத்தாபம் எதுவும்
அவர்களைத் தீண்டுவதில்லை.

செல்வச் செழிப்பு மண்டிய
சொர்க்கத்தைத் தேடிவந்தவனுக்கு
புரியாத விசயம்—
நரகத்துக்கு மேலே
பிரகாரச் சுவர்களுக்குள்
வசதியாய் படுத்திருக்கிறது
நாகரிக சொர்க்கம்.

கிராமத்து வீட்டில்
கவிந்த இருள் மறக்கவில்லை
ஒட்டுறவு நீங்கா நினைப்பு
பட்டினத்து பவர்ஃபுல் வெளிச்சத்தில்
அதெல்லாம் மறைஞ்சே போச்சு
அதில் அவன் தினமும்
வேட்டையாடப்படுவது
அவனுக்கே தெரியவில்லை!

## மிச்சம்

தெலுங்கு மூலம் : M. K. **சுகம்பாபு**
தமிழாக்கம் : **சாந்தா தத்**

மலையளவு சுமை தோள்மீது
பேசுவதற்கு என்ன உண்டு
சிரிப்பதற்கு முகம் ஏது
இருந்தமுகம் என்றோ
தொலைத்தவன் அல்லவா...
இன்று ஹோலிப்பண்டிகையாம்
இருக்கலாம்
வண்ணத்தூவலும் கேளிக்கையுமாய்
ஊர் கலகலக்கலாம்
ஆனால்
இதயத்தைக் கவ்விய இருளிலும்
(43-ம் பக்கம் பார்க்க)

# ஏன் எழுதுகிறேன்

தி. ஜானகிராமன்

ஏன் எழுதுகிறாய் என்று கேட்பது, ஏன் சாப்பிடுகிறாய் என்று கேட்பது போல. பசிக்கிறது சாப்பிடுகிறோம். உயிரோடிருக்க, சாப்பிடுகிறோம். பலம் வேண்டிச் சாப்பிடுகிறோம். ருசியாயிருக்கிறது என்று ஜிஹ்வா சாபல்யத்தினால் சாப்பிடுகிறோம். சாப்பிடாமல் இருந்தால் ஏதாவது நினைத்துக் கொள்ளப்போகிறார்களே என்று சாப்பிடுகிறோம். சில பேர் சாப்பிடுவதற்காகவே சாப்பிடுகிறார்கள். ருசி, மணத்தைக் கூடப் பாராட்டாமல் சாப்பிடுகிறார்கள். நம் நாட்டு அரசியல் பிரமுகர் ஒருவர் அமெரிக்க தூதராலய விருந்து, உடனே கவர்னர் விருந்து, உடனே ராமநவமி உத்சவச் சாப்பாடு மூன்றையும் ஏழிலிருந்து எட்டு மணிக்குள் சாப்பிடுவார்.

இத்தனை காரணங்கள் எழுத்துக்கும் உண்டு-அதாவது நான் எழுதுகிறதற்கு பணத்துக்காக, பேருக்காக, பேரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, நானும் இருக்கிறேன் என்று காண்பித்துக் கொள்வதற்காக, தாக்ஷிண்யத்திற்காக, எனக்கே எனக்காக, கொஞ்சம் எனக்கும் கொஞ்சம் உங்களுக்குமாக, சில சமயம் எதற்கு, யாருக்கு என்று தெரியாமல்—இப்படி பல மாதிரியாக எழுதுகிறேன். சில சமயம் நாடகத் தயாரிப்பாளர் சொல்லுகிறார்—ஒரு பிரமிப்பு, ஒரு தினுசான தாக்குதல் ஏற்படுத்த வேண்டும் பார்க்கிறவர்கள் மனதில் என்று—சரி என்று சொல்லுகிறேன். கடைசியில் பார்க்கும் பொழுது, இத்தனை காரணங்களும் அல்லாடி அலைந்து மூன்று குழிகளில் பிரிந்து விழுந்து விடுகின்றன. எனக்கே எனக்கு, உனக்கே உனக்கு, எனக்கும் உனக்கும்—இந்த மூன்று தினுசுதான் கடைசியாக உண்டு என்று தோன்றுகிறது. இந்த மூன்றும் சேர்ந்து ஒரே இடத்தில் ஒரே எழுத்தில் இருக்கிறாற்போல சில சமயம் ஒரு பிரமை ஏற்படலாம். அது பிரமைதான். உண்மையில்லை. இரவு எட்டு மணிக்கு காய்கறி வாங்கும் பொழுது, நேற்று மாலையில் வந்தது, இன்று காலையில் வந்து இன்று முழுவதும் வெயிலில் காய்ந்தது, இன்று மாலை வந்தது மூன்றும் ஒரே குவியலாகக் கிடக்கும். சற்று உற்றுப் பார்த்து, தொடாமல்கூட, கலந்து கட்டி என்று கண்டு பிடித்துவிடலாம்.

எனக்கே எனக்கு என்று சொல்லுகிற எழுத்தைப் பற்றித் தான் இங்கு சொல்ல வேண்டும். அதுதான் மரியாதை. அதுதான் உயர்வு. அதுதான் கௌரவம்.

எனக்கே எனக்காக எழுதுவதைப்பற்றி என்ன சொல்லமுடியும்? விஸ்தாரமாகச் சொல்ல என்ன இருக்கிறது? எனக்கே எனக்காக எழுத வேண்டும் போலிருக்கிறது. எழுதுகிறேன். அது என்னமோ பெரிய ஆனந்தமாக இருக்கிறது. காதல் செய்கிற இன்பம் அதில் இருக்கிறது. காதல் செய்கிற இன்பம், ஏக்கம்,

எதிர்பார்ப்பு, ஒன்றிப்போதல், வேதனை—எல்லாம் அதில் இருக்கின்றன. இன்னும் உள்ளபடி சொல்லவேண்டும் என்றால் பிறர் மனைவியைக் காதலிக்கிற இன்பம், ஏக்கம், நிறைவு-எல்லாம் அதில் இருக்கின்றன. கண்யநஷ்டம், பாபம் பாபம் என்று மூலையில் முடங்கியவாறே கையாலாகாமல் முணு முணுக்கிற மனச்சாட்சி, சந்தி சிரிப்பு, சந்தேகக்கண்கள் — இத்தனையையும் பொருட்படுத்தாமல் முன்னேறுகிற பிடிவாதம், வெறி, அதாவது ஆனந்தம்—எல்லாம் அதில் இருக்கின்றன. உங்களுக்காக எழுதும் பொழுதோ, உங்களுக்கும், எனக்கும் எழுதும்போதோ மனைவியைக் காதலிக்கிற நல்ல பிள்ளைத்தனமும் நிர்ப்பந்தமும்தான் கண்ணுக்குத் தெரிகின்றன. பல சமயங்களில் நல்ல பிள்ளையாகத் தான் காலம் தள்ளவேண்டியிருக்கிறது. மனித வாழ்க்கையின் நெருக்கடிகளும் பிடுங்கல்களும் அப்படிச் செய்து விடுகின்றன. இந்த நிர்ப்பந்தங்கள் இல்லாதவர்களைக் கண்டும் பொறாமைப் படுகிறேன்.

சரி, எனக்கே எனக்காக எழுதும்பொழுது என்ன எழுதுகிறேன்? எப்படி எழுதுகிறேன்? என்ன எழுத வேண்டும் என்று எனக்கு நானே உபதேசம் செய்து கொள்கிறேனோ? பசியே தொழிலாகக் கொண்டிருக்கிற ஏழைகளைப் பற்றி, பிச்சைக்காரர்களைப் பற்றி, பாட்டாளிகளைப் பற்றி, விருப்பமில்லாமல் வழுக்கி விழுந்த பெண்களைப் பற்றி, பள்ளிக்கூடம் போகமுடியாமல் பிண ஊர்வலத்தில் நடனம் ஆடிக்கொண்டு போகிற குழந்தைகளைப் பற்றி, விருப்பமில்லாமல் திருட நேர்ந்தவர்களைப் பற்றித்தான் எழுதவேண்டும் என்று வகுத்துக் கொள்கிறேனோ? இதையெல்லாம் எழுதி உன்னைச் சுற்றி சாக்கடை தேங்கிக் கிடக்கிறது, ஏன் பார்க்கவில்லை என்று சமுதாயத்தைப் பார்த்துக் கோபித்துக் கொள்ள சங்கற்பிக்கிறேனோ? அல்லது குடும்ப உறவுகள், உணர்ச்சிகள், கலைஞர்கள், பெரிய உத்யோகஸ்தர்கள், நடு வகுப்பு, உயர் வகுப்புகள், அவர்களுடைய ஆசாரங்கள், சீலங்கள், புருவந்தூக்கும் பாங்கு, கண்ய வரம்புகள், மேல் பூச்சுகள், உள் நச்சுகள் இவற்றைப் பற்றி எழுத வேண்டும் என்று திட்டம் போட்டுக்கொள்கிறேனோ? அல்லது சிம்மவிஷ்ணு, கரிகாலன், ராணாபிரதாப், வல்லப சேனன், அலெக்சாண்டர்—இவர்களைப் பற்றி எழுதி பழைய காலத்தை மீண்டும் படைக்க வேண்டும், இன்றைய மனிதனின் மூதாதையரின் நற்குண, துர்குணங்கள், இவற்றை எல்லாம் எழுதி சரித்திரக் கொள்கைகளையோ சித்தாந்தங்களையோ வகுத்து நிலை நாட்ட வேண்டும் என்று எழுதும்பொழுது திட்டம் போட்டுக்கொள்கிறேனோ? எனக்கே எனக்காக எழுதும்போது இந்தப் பிடுங்கல்கள் ஏதும் என்னைத் தொந்தரவு செய்வதில்லை. நான் இத்தனை பேரைப் பற்றியும் எழுதினாலும் எழுதுவேன் எழுதாமலும் இருப்பேன் யாரைத் தெரியுமோ அவர்களைப் பற்றி எழுதுவேன்... அதாவது அவர்கள், அல்லது அதுகள் என் மனதில் புகுந்து, தங்கி, அமர்ந்து என்னைத் தொந்தரவு பண்ணினால் எழுதுவேன். தொந்தரவு தாங்கமுடியாமல் போனால் தான் எழுதுவேன். நானாகத் தேடிக்கொண்டுபோய் ''உன்னைப் பற்றி எழுதுவதாக

உத்தேசம்'' என்று பேட்டிக்காணமாட்டேன்—அப்ஸர்வ் பண்ண மாட்டேன். அவர்களாக அதுகளாக வந்து என்னைத் தாக்கினால் தான் உண்டு. அதனால்தான் எனக்கு எழுதுவதற்காக யாத்திரை, பயணங்கள் செய்வதில் உற்சாகம் கிடையாது. அதைவிட காதல் செய்து பொழுதைப் போக்கலாம் (என்ன காதல் என்று நிர்ணயித்துக்கொள்வது என்னுடைய இஷ்டம், வசதியைப் பொறுத்தது.)

அப்படியென்றால் நீர் எழுதுவதற்காகப் பயணம் செய்வதில்லையா என்று யாராவது கேட்டால்? ம்... செய்கிறதுண்டு. அது உங்களுக்காக, உங்களுக்கும் எனக்குமாக எழுதும் பொழுது தான். அதனால் கொஞ்சம் பணம் சம்பாதிக்கலாம், ஏமாளிகளைப் பிரமிக்க அடிக்கலாம் என்று தோன்றினால் செய்வதுண்டு. நடுநடுவே அல்ப சந்தோஷங்கள் படுவதில் தப்பொன்றுமில்லை.

ஆக, எனக்குத் தெரிந்தவர்களையும் தெரிந்ததுகளையும் பற்றி எழுதுகிறேன். நான் பார்த்தவர்களையும் பார்த்ததுகளையும் பற்றி எழுதுகிறேன்... அல்லது என் கண்ணிலும் மனதிலும் பட்டவர்களையும் பட்டவைகளைப் பற்றியும் எழுதுகிறேன். சில சமயம் என்ன அம்மாமி பாஷையாக இருக்கிறதே என்று சிலர் சொல்கிறார்கள். நான் என்ன செய்ய? அம்மாமிகளைத்தான் எனக்கு அதிகமாகத் தெரியும் ஆத்தாள்களைப் பற்றி ஏதோ சிறிதளவுதான் தெரியும். தெரிந்த விகிதத்துக்குத்தான் எழுத்தும் வரும்.

எதற்கு எழுதுகிறாய் என்று கேட்டதற்கு, என்ன எழுதுகிறேன் என்று சொல்வதா பதில் என்று யாராவது கேட்கலாம். எனக்காக என்று சொல்லும் பொழுது என்ன, எப்படி இரண்டும் சொல்லத்தான் வேண்டும் என்று முன்னாலேயே சொல்லிவிட்டேன். மறுபடியும் சந்தேகம் வரப் போகிறதே என்பதற்காக ஞாபக மூட்டினேன்.

எப்படி என்ற கேள்விக்குப் பதில் சொல்வது கூட அவ்வளவு கடினமில்லை. ஏனெனில் எனக்காக எழுதுவது சொல்பம்தான். எழுதுகிறது என்னமோ அதிகம்தான். கூலிக்கு மாரடிப்பதும், கோவில் மேளம் வாசிப்பதும் நிறைய உண்டு. ஆனால் அது என்றும் சொந்தத்திற்கு என்று எழுதுகிற எழுத்தைப் பாதிப்பதில்லை என்று நிச்சயமான உணர்வு இருக்கிறது. கூலிக்கு மாரடித்ததால், மார்வலியோ, சோர்வோ இருந்தால், வலியடங்கி சோர்வகன்ற பிறகு அதுவும் அவசியமானால், முடிந்தால் எழுதுகிறதே தவிர, வலியோடும் சோர்வோடும் எழுதுகிறது கிடையாது. எவனாவது எழுதுவானோ அந்தமாதிரி? எழுதத்தான் முடியுமா? திராணி எங்கே இருக்கும்?

எப்படி எழுதுகிறேன் என்று சொல்வதைவிட எப்படி எழுதும் நிலைக்கு வருகிறேன் என்று சொல்வதுதான் இன்னும் பொருந்தும். புகையிலையை மென்று கொண்டு சும்மா உட்கார்ந்து என்னைச் சுற்றிச் சுற்றி வலை முற்றுகையிடுகிற, வழி காணாமல் விக்கிற, வழி காணப் பறக்கிற ஆட்டங்களைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருக்கிறேன். சாப்பிடும்பொழுது, வேறு வேலை செய்யும் பொழுது, வேறு ஏதோ எழுதும்

பொழுது, யாருடனோ பேசும் பொழுது இந்த அமர்க்களமும், தவிப்பும் நடந்து கொண்டு தானிருக்கின்றன. நடப்பது தெரிகிறது. வழி தெரிந்ததும் எழுத முடிகிறது. அவ்வளவுக்குமேல் அவைப்பற்றிச் சொல்ல ஒன்றுமில்லை.

கலைவடிவத்துக்கும் எனக்காக எழுதுவதற்கும் என்ன சம்பந்தம்? எனக்காக எழுதுவது எல்லாம் கடைசல் பிடித்த கலை வடிவம் கொண்டிருக்க வேண்டுமா? அவசியம் இல்லை. கலை வடிவம் என்பது தவத்தையும், அதன் தீவிரத்தையும் பொறுத்தது. அந்த முனைப்பு சிறு நொடியிலோ, பல வருடங்களிலோ சாத்தியமாகலாம். காலம் முக்கியம் என்றாலும் அவ்வளவு முக்கியமில்லை உணர்வின் அனுபூதியின், அமுங்கி முழுகுவதின் தீவிரத்தன்மைதான் முக்கியமானது. இது எனக்காக எழுதும் எழுத்திலும் சாத்தியம். உங்களுக்காக எழுதும் எழுத்திலும் சாத்தியம். எனக்காக எழுதும் எழத்தில் கலைவடிவம் சிலசமயம் மூளியாகவோ, முழுமை பெறாமலோ, நகாசு பெறாமலோ இருக்கலாம். ஆனால் அதுதான் அதன் வடிவம். அதாவது மூளியும் முழுமையில்லாததும் அதனுடைய ஒரு அம்சம்.

கூலிக்காக நான் எழுதும் எழுத்திலும் அல்லது உங்கள் சந்தோஷத்துக்காக நான் எழுதும் எழுத்திலும் கலை வடிவம் என்ற ஒன்றைக் கொண்டு வந்துவிட முடியும். இங்கு கலைவடிவம் என்பது பயிற்சியின், சாதகத்தின் ஒரு விளைவாகப் பரிணமித்து விடுகிறது. இந்த இடத்தில்தான் ஒரு முக்கியமான வேற்றுமை தோன்றுகிறது. கலைக்கும் நுண் தொழிலுக்கும் உள்ள வேற்றுமை அது. சில சமயம் நான் செய்கிற நுண் தொழிலைக் கண்டு கலைவடிவம் என்று தப்பாகப் புரிந்து கொண்டு விடுபவர்கள் உண்டு. அப்படிச் சொல்லி என்னையே ஏமாற்றப் பார்ப்பார்கள்.

ஆனால் எனக்குத் தெரியும் எது கொம்பில் பழுத்தது, எதை நான் தடியால் அடித்து குடாப்பில் ஊதிப் பழுக்க வைத்திருக்கிறேன் என்று. எனக்காக நான் எழுதும் போது, கொம்பில் பழுத்த பழம். நான் பண்ணிய தவத்தின் முனைப்பில் பழுத்த பழம் அது. என் தவம் எத்தனைக் கெத்தனை தீவிரமான ஒன்றிப்பிலும் தன் மறப்பிலும் கனிந்து எரிகிறதோ, அப்போது வடிவம் தானாக அமைந்துவிடும். அது சில சமயம் மூளியாகவோ குறையுள்ளதாகவோ இருக்கலாம். ஆனால் பூப்புநிலையில் பூவில் இட்ட முட்டை வண்டாக வளர்கிறமாதிரி, அதை நான் தடுத்திருக்க முடியாது. அந்த ஒரு கறுப்பு, கசப்பு எல்லாம் அதன் அம்சம். தவிர்க்க முடியாத நிலையில் எழுதப்பட்ட விதி இந்தக் கனிவில்தான், இந்த தவத்தில்தான் என் சுயரூபம் எனக்குத் தெரிகிறது என்னுடைய உள் பிரபஞ்சத்தில் உள்ளதெல்லாம் மேலே மேலே இருள் நீங்கி என் சிந்தைக்கும் உணர்விற்கும் புலனாகிறது. என் தவம் மிகமிக, மேலும் மேலும் என் சுயரூபம் எனக்குத் தெரியும். அதற்கு வளர்ச்சி என்றோ, மாறுதல் என்றோ பெயர்களிட நான் விரும்பவில்லை. தொடர்ச்சி : ப—90)

(38-ம் பக்கத் தொடர்ச்சி)

அடர்த்தியான வண்ணம் உண்டா
கறுப்புநிறக்கொடி தவிர
ஏற்றுவதற்கு என்ன உண்டு?

## புறாக்கள்

தெலுங்கு மூலம் : B. ஐங்கையா
தமிழாக்கம் : சாந்தா தத்

பூசாரியின் மணியொலிகேட்டு
கோவில்கோபுரம் விட்டு
பறந்தன புறாக்கள்
ஏசுபிரபு பிரார்த்தனைக்காக
ஃபாதர் சர்ச் கதவு திறந்தபோது
எகிறின புறாக்கள்
"அல்லா...ஹோ...அக்பர்"
மௌல்வி அழைப்பிற்கு
ஓடின புறாக்கள்
அத்தனை புறாக்களும் வான்வெளியில்
இணைந்து திரிகின்றன
ஆனால் .....
பூசாரி...?
பாதிரி...??
மௌல்வி...???

## உங்களுள்

தெலுங்கு மூலம் : சிவாரெட்டி
தமிழாக்கம் : சாந்தா தத்

உங்களுள் உயிர்க்கும் சங்கீதம்
உணர்ந்ததுண்டா நீங்கள்
அகிலப்பொருட்கள் அனைத்துமிசைக்கும்
அருமையான வாத்திய இசை என்றேனும்
அனுபவித்ததுண்டா
சமுத்திர இரைச்சலில்
சப்தஸ்வரம் கேட்டதுண்டா
மழைமேகம் வாசிக்கும்
ஜலதரங்கம் ரசித்ததுண்டா
உள்ளுக்குள் உறைந்துபோய் என்றோ ஒருநாள்
உயிர்த்துப் பொங்கும்
ஆழ்மன சங்கீதம் அறிந்ததுண்டா
பாதிபழுத்த பலாவின் பரிமளசங்கீதம்
ஆரஞ்சுக்களை தெறிக்கும் அழகு சங்கீதம்
இரவின் இருள் இறந்தவர் இல்லம்

பசுக்களின் மேய்ச்சல் அத்தனையும் சங்கீதம்
பயிர்கள் புல்வெளிகள் பரப்பும்
பரமானந்த சங்கீதம் ரசித்ததுண்டா
தன்னந்தனியாய் வாய்க்கால் பலகைமீது
நடக்கின்ற வேளையில்
கவனமாய் வைக்கும்
காலடிகீதம் உள்வாங்கியதுண்டா
இருபது முப்பது பேராய்
இழை இழையாய் பயிர் களைகையில்
இதமான கோடரிஇதழ் சங்கீதம்
இனித்ததுண்டா??
விந்தை...விந்தை...!!
கண்ணிருந்தும் குருடாய் காதிருந்தும் செவிடாய்
வாழ்க்கைக் குழப்பம்
மனவிசாரங்கள்
வக்கிரங்கள் வாழ்க்கைக்கசடுகள் உதிர்க்கும்
நச்சு சமூகத்தின் நாராச சங்கீதம்
பொத்திக் காக்கும் நமக்கு
இயற்கையின் இயல்பிசை
அறிமுகம் அற்றவை
அந்நியமாகிப் போனவை...!

---

# காமஞ் செப்பாது.....

ஆயுதமேந்திப் போராடும் தமிழர் வாழ்க்கை நிலையினைச் சிறுகதைகளாக்கியுள்ள படைப்பு.

**கதை முடியுமா?**
(சிறுகதைகள்)
**க. தணிகாசலம்**

சவுத் ஏசியன் புக்ஸ்
6/1, தாயார் சாகிப் 2வது சந்து,
சென்னை-2
பக்கம்: 138; விலை ரூ. 25-00

இனக்குழுக்களிடையே நடைபெற்ற சண்டை சச்சரவுகளை வெட்சி, வாகை...போர் முறைகளாக வகுத்துப் புறத்திணை இயல் கண்ட சங்க இலக்கியத்தில் புனைவுகளே மிகுதி. சக மனிதன் மீது நிகழ்த்தப்படும் வன்முறையை வீரமெனப் போற்றி வரவேற்கும் மகிழ்ச்சிக் குரலில், வாழ்க்கைச் சீரழிவுகள் பெரிதும் பதிவாகவில்லை. கிளர்ந்த மனதுடன் வீரப்போதையுடன் சொக்கிக் கிடக்கும் தமிழனே கட்டியமைக்கப்பட்டுள்ளான். வீரம் தொடர்பான சொல்லாடல்கள், இனக் குழுவின் பெருமையச் சித்தரித்தாலும், இன்னொரு நிலையில்

பொய்மையாகத் தமிழ் வீரத்தை தூக்கிப் பிடிப்பனவாக உள்ளன. இன்று தனிமனித வீரம் என்பது ஏ.கே. 47 மழையெனக் குண்டுகள் பொழிந்து, தலைக்குமீது ஏவுகணைகள் மிதக்க, நவீனத் தொழில்நுட்பம் சார்ந்த நிலையில் மனிதன் தனது அடிப்படை அடையாளத்திற்காக, அதிகாரத்தினை எதிர்த்துப் போராட வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளாகிவிட்டான். மனித இருத்தலுக்கெதிராக நடைபெறும் போர்களில் படைப்பாளியின் நிலை மிக முக்கியமானது. போராட்ட வாழ்க்கையின் பல்வேறுபட்ட நுணுக்கமான தளங்களில் விரியும் மனித அனுபவங்கள் மற்றும் எதிர்கொள்ளல்களைப் பதிவு செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஈழத்தில் சிங்களப் பேரினவாதத்திற்கெதிராக ஆயுதமேந்திப் போராடும் தமிழர் வாழ்க்கை நிலையினைச் சிறுகதைகளாக்கியுள்ள க. தணிகாசலத்தின் படைப்பு முயற்சி, தொகுப்பாக வெளிவந்துள்ளது.

தொகுப்பிலுள்ள சிறுகதைகள் போரின் மேன்மையையோ, போராட்டத்திற்காகத் தனது உயிரினைத் தியாகம் செய்யும் போராளியைச் சிலாகிக்கவோ, போராடும் போராளிகளுக்கு உடனடி ஊக்கந் தரும் வகையிலோ இல்லை. போராட்டச் சூழலில் வாழ நேரிடும் சாதாரண மனிதர்கள் மற்றும் போராளிகள் எதிர்கொள்ளும் அனுபவங்கள் மற்றும் மன உணர்வுகள் தான் கதைகளாக விரிந்துள்ளன. க. தனிகாசலத்தின் பார்வை, வறட்டு பழம் பெருமை அல்லது புதிய சாதனை குறித்த கர்வமோ அற்று நடைமுறைக் காட்சிகளின் தொகுப்பாக உள்ளது.

ஒரு படைப்பாளியின் படைப்பு முயற்சி, அகக் காரணங்களினால் தடைபடுவதனைவிட, புறவுலக நெருக்கடியினால் திடீரென நிறுத்தப்படும் இக்கட்டான சூழலைச் சொல்லும் 'கதை முடியுமா' கதை, இன்னொரு தளத்தில் படைப்பாளியின் சுதந்திரம் குறித்த அடிப்படையான கேள்வியை எழுப்புகின்றது. அதிகாரத்தின் வலுவான கரம், எந்தவொரு வினாடியிலும் மூளைக்குள் நுழைந்துவிடும் அபாயத்தினை, மெலிதான கேலித்தொனியில் விளக்குகின்றது.

மிகக் கடுமையான ராணுவ நெருக்கடிக்கிடையிலும் சராசரி மனிதர்கள் தினசரி வாழ்க்கையினை வாழ்வதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டியுள்ளது. எனினும் 'தெருவோரங்களில் சிந்தப்படும் ரத்தமும், விழுகின்ற பிணங்களும், வீசப்படும் குண்டுகளும் தினசரி நடவடிக்கையாகிப்போன வாழ்க்கையமைப்பில் செருப்பில் ஒட்டிக் கொண்ட மனித ரத்தம், கச்சேரி கிளார்க்கைத் துன்புறுத்துவதனைப் படைப்பாக்கியதன் மூலம் மனித மனத்தின் ஆழமான உணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இரவில் வீட்டிற்கு வெளியே சிறுநீர் கழிக்கச் செல்ல முடியாமல் தவிக்கும் சிறுவன், தூக்கம் வருவதற்காகச் சுருட்டு புகைக்கும் பழக்கமுள்ள பார்வதி ஆச்சி போன்ற தனிமனிதச் செயல்கள்/பழக்கங்கள் கூட கட்டுப்படுத்தப்படும் சூழலில், மனித இருத்தலின் அடிப்படை குறித்து கேள்வி தோன்றுகின்றது. 'சுதந்திரம்' என்ற சொல்லின் பரந்துபட்ட அர்த்தம், ஒற்றை நிலைக்குக்கூடத் தாக்குப் பிடிக்க முடியவில்லை. பிரக்ஞையில் சகல அடக்குமுறைகளையும் நெருக்கடி

களையும் வாழ்வின் பகுதியாக ஏற்றுக்கொள்ளும் மனநிலை சராசரி மனிதனுக்கு வந்துவிடுவதுதான் அதிகாரத்தின் பிரதான வெற்றி. அது போரின் கொடூரத்தை விடவும் மிகவும் பயங்கரமானது.

'சுதந்திரம்' கதையில் போராட்டத்தில் பங்கேற்காமல் ஒதுங்கி நிற்கும் நடுத்தர வயதுடையவன், இயக்கம்தொடர்புடையஇளைஞன், தனது வீட்டின் முன்னே புல்தரையில் போட்டுச் செல்லும் எறி குண்டைப் பத்திரப்படுத்தி மீண்டும் அதே இடத்தில் வைக்கிறான். 'யதார்த்தம்' கதையில் தேங்காய்ச் சாக்குடன் பேருந்தில் பயணம் செய்யும் இளைஞனுக்கு, ராணுவத்தினர் முன்பாகவே சாக்கை அடுத்த பேருந்துக்கு மாற்றும் அப்பா...போன்றோர் தான் போராட்டத்தின் அடித்தளமாக விளங்குவதையும், இயக்கத்தின் தார்மீகச் செல்வாக்கையும் புலப்படுத்துகின்றன. போராளிகளின் பலம் என்பது சாதாரண மனிதர்களின் அங்கீகரிப்பும் ஒத்துழைப்பும்தான் என்பதனைக் கதைகள் சூட்சுமமாக வெளிப்படுத்தியுள்ளன.

'மூன்றாவது உலகம்' கதையில் குண்டு வீச்சு காரணமாகப் பாதிப்பிற்குள்ளாகும் பசுவின் வேதனை, போர் என்பது பூமியில் சகல உயிரினங்களுக்கும் எதிரானது என்ற கருத்தினை அழுத்தமாகச் சொல்லியுள்ளது. குண்டு வெடிப்பு, அகதி வாழ்க்கைக்கு ஊடே, மாட்டின் நோயைக்குணப்படுத்துவதற்கான லோகேஷின் முயச்சிகள், முள் அடிப்பு, இறை வேண்டுதல்கள் எல்லாமே ஒரு நிலையில் வேடிக்கையாகவும், அபத்தமாகவும் உள்ளன. வாழ்க்கையின் எல்லை புரிந்தாலும் மனித முயற்சிகள்தான் மனிதனை பூமியில் இருத்துவதற்கான மையப் புள்ளியாக உள்ளன என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

'அறுபது கத்திகள்', 'சுமை தூக்கிகள்' தொழிலாளர் பிரச்சனையையும் 'சுமை' வரதட்சணைப் பிரச்னையையும் யதார்த்தத் தளத்தில் சித்தரிக்க முயலுகின்றன.

கோட்பாட்டுச் சிக்கலற்று எளிமையான முறையில் கதை சொல்லும் க. தணிகாசலத்தின் கதைகளில் உயரிய கலை நுணுக்கங்களோ, நவீன நடை நுட்பங்களோ, புதியதான இசங்களின் தாக்கமோ இல்லை. எனவே இவை சாதாரணக் கதைகள் என முத்திரையிடப் பட்டாலும் அதிகாரத்துவத்தின் நெருக்கடியினால் சிதைவடையும் மனித வாழ்க்கையின் கொடூர நிலைகளை / அவலநிலைகளை யதார்த்தத் தளத்தில் சித்தரிப்பதன் மூலம் தமிழுக்குப் புதிய வரவாகவே உள்ளன. போருக்கு இலக்கணம் வகுத்த தமிழிலக்கிய மரபில், போர் காரணமாகச் சிதைவடையும் மனித இருத்தலை அசலான குரலில் வெளிப்படையாகப் படைப்பாக்கியுள்ள க. தணிகாசலத்தின் முயற்சி, காலத்தின் குரலாக உள்ளது. தொகுப்பின் சிறப்பம்சமும் அதுவே.

நவீன அச்சுத் தொழில் நுட்பம் வளர்ந்துள்ள காலகட்டத்தில் பக்கந்தோறும் மலிந்துள்ள அச்சுப் பிழைகள், கதைகளை வாசிப்பதற்குத் தடையாக உள்ளன.

ந. முருகேசபாண்டியன்

**ஆணாதிக்கம் பற்றிய எதிர்ப்புச் சிந்தனைகள் ஈழத்துப் பெண்களிடம் எப்படி வேகமாக வளர்ந்து வருகின்றன!**

## ஒரு மண்ணின் கதை

(நாவல்)

ஆசிரியர்: **செ. கணேசலிங்கன்**

வெளியீடு :
குமரன் பப்ளிஷர்ஸ்,
வடபழனி, சென்னை-26.
விலை: 32-00

இலங்கையில் நடைபெறும் இனப் படுகொலை காரணமாக அங்கிருந்து அகதிகளாய் வெளியேறி உலகம்பூராவும் சிதறிக்கிடக்கும் ஈழத்தமிழர்களின் சோக வரலாறுகளை, செ. யோகநாதன், செ. கணேசலிங்கன், தேவகாந்தன், மாத்தளை சோமு போன்ற எழுத்தாளர்கள், நெஞ்சை உருக்கும் நாவல்களாக எழுதி இருக்கிறார்கள். அந்த வரிசையில், இன்னொரு படைப்பு இந்த நாவல். இந்த அகதிகளின் தனிமனித வாழ்வின் அற்ப சுகதுக்கங்கள்கூட எப்படிக் குரூரமாய் பாதிக்கப்படுகின்றன என்பதை செ. கணேசலிங்கன் அவர்கள் எடுத்துக்காட்டி இருக்கிறார்.

கனடாவில் புகலிடம் தேடி வாழும் குமரேசன் தனக்கு நிச்சயிக்கப்பட்ட மணப்பெண் சுசீலாவைச் சந்திக்க கொழும்பு வருகிறாள். யாழ். நகரிலிருந்து வரவேண்டிய சுசீலா திடீரென்று அங்கு ஏற்பட்ட போர்ப் பிரச்சினையால் பயணம் தடைப்பட்டு நிற்கிறாள். ரயிலடியில் காத்திருந்து அலுத்துப்போன குமரேசன் கனடாவுக்குத் திரும்பிச் செல்ல நாள் நெருங்கிவிட்டதால் தவிக்கிறான். சில நாட்களுக்குப் பிறகு சுசீலா தனியாகப் புறப்பட்டு, புலிகளிடம் செல்வாக்குள்ள விமலாவின் உதவியால் அனுமதி பெற்று கொழும்பு வருகிறாள். உடன் வந்த கமலா என்ற பெண்புலியால் இவளையும் சந்தேகத்தில் போலீஸ் பிடித்துச் செல்கிறது. அவளை மீட்கச் சென்ற குமரேசனும் போலீஸ் பிடியில் சிக்குகிறான். சுசீலாவை மீட்காமல் திரும்புவதில்லை என்று கனடா திரும்புவதை ஒத்திப்போட்டு, தீவிரமாக முயல்கிறான். பல மாதங்களுக்குப் பிறகே சுசீலா விடுதலை ஆகிறாள். இதுவரை அனுபவித்த கொடுமைகளால் மனம் மாறி, தாய் மண்ணை விட்டுச் செல்ல மனமின்றி, சுசீலாவுடன் யாழ்ப்பாணத்துக்கே திரும்புகிறான் குமரேசன். 'பாதிப்புகள்தான் பல வேளைகளில் மக்களைப் போராடத் தூண்டுகிறது; போராளிகளாக ஆக்கிவிடுகிறது' என்பதை குமரேசனும் சுசீலாவும் நிரூபிக்கிறார்கள்.

ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசீயப் போராட்டம், விடுதலை பெற்றபின் தேசீயபாசசிமாக மாறிப்போனது போலவே, தமிழ் தேசீய விடுதலைப் போரட்டமும், குட்டி பூர்ஷ்வா முதலாளிகளால் தேசீய பாசிசமாக மாறி வருகிற முரண்பாட்டையும் செ. கணேசலிங்கன் வேதனையோடு இந்நாவலில் காட்டுகிறார். சோஷலிசம் தேசீயம் ஆகிய இரண்டிற்குமுள்ள புதிய விளக்கத்தை

யும் தேசீயம் எப்படிப் பிற்போக்காக மாறி, பாட்டாளியின் சோஷலிசப் போராட்டத்தை மழுங்கடித்து விடலாம் என்பதையும் பார்த்திபன் என்கிற பாத்திரம் மூலம் ஆசிரியர் விளக்குகிறார்.

தாய்மண்ணை விட்டு புகலிடம் தேடி ஓடும் தமிழ் அகதிகள், கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் சொர்க்க போகம் அனுபவிப்பதாக எண்ணுகிற மற்ற அகதிகளின் அறியாமை பற்றி வேலாயுதம் என்கிற பாத்திரம் பேசுகிறது. ஒரு காலத்தில் இலங்கையில் பணம் காய்த்துத் தொங்குவதாகச் சொல்லி இந்தியத் தோட்டத் தொழிலாளிகளை அழைத்துச் சென்று அடிமைகளாக்கியது போலவே இப்போது வடஅமெரிக்கா போன்ற இடங்களுக்கு ஓடுகிற இலங்கைத் தமிழர்க்கும் நேருகிற யதார்த்தத்தை ஆசிரியர் காட்டுகிறார்.

ஆணாதிக்கம் பற்றிய எதிர்ப்புச் சிந்தனைகள் ஈழத்துப் பெண்களிடம் எப்படி வேகமாக வளர்ந்து வருகிறது என்பதையும் குமரேசனின் அக்காவின் குமுறலில் இருந்து அறிகிறோம். இந்நாவலின் கதாபாத்திரங்கள் அனைத்துமே, அசட்டுத்தனமான வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடும் சாதாரணப் பாத்திரங்களாக இல்லாமல் அறிவு பூர்வமாகச் சிந்தித்து செயல்படுபவர்களாக அமைக்கப்பட்டிருக்கிறார்கள். வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பாதிப்புகள் அவர்களை யதார்த்தமாகப் பேச வைக்கிறது.

தேசம் தீப்பற்றியெரியும் போது, வரட்டுத்தனமான, சொப்பனாவஸ்தைகளை எழுதுகிற இங்குள்ள எழுத்தாளர்கள் போலல்லாமல், அசலான வாழ்வின் பிரச்சினைகளை, சோகங்களை வெளிப்படுத்துகிற செ. கணேசலிங்கன் அவர்கள் தனது நேர்மையான, தெளிவான வாதங்களாலும் சிக்கலற்ற கதைப் பின்னலாலும், வட்டாரமொழி ஆதிக்கத்தால் அலுப்புத் தராத எளிய இனிய நடையாலும் ஒரு கைதேர்ந்த படைப்பாளியாக இந்நாவல் மூலம் அறியப்படுகிறார்.

இத்தகைய நாவல்களைப் படிக்கும்போது இங்கே தமிழகத்தில், எவ்வளவு பொறுப்பற்ற, சமூகப் பிரச்சினை இல்லாத, வரட்டு வேதாந்தங்களை எழுதிக்கொண்டிருக்கிறார்கள் என்று உறுத்துகிறது.

முன்னுரையில் தேசீயம் பற்றி ஆசிரியர் தந்திருக்கிற கருத்துக்கள் வாசகர்க்கு ஒரு போனஸ் ஆகும்.

**வே. சபாநாயகம்**

அடுத்த இதழ் ஜூன் 96 ல்

**கலாநிதி கைலாசபதி**

நினைவு மலராக வெளிவருகிறது

- கவிதையை இயக்கமாக
- ஆக்கியுள்ளார்

□ **மேலே சில பறவைகள்**

(கவிதைகள்)
கால சுப்பிரமணியன்

வெளியீடு : லயம்
பெரியூர் அஞ்சல்
சத்தியமங்கலம், 638405.

கால சுப்பிரமணியனின் முதல் கவிதை தொகுப்பு இந்தநூல். நீண்ட காலமாக லயம் இதழை வெளியிட்டு வருவதுடன், இதழ் களில் எழுதியும் வருபவர் கா.சு. படைப்புத்துறையிலும் (கவிதை, சிறுகதை) விமர்சனத்துறையிலும் ஒருசேர அழுத்தமாகத் தடம் பதித்துவருபவர். 'மேலே சில பறவைகள்' என்னும் முதல் கவிதை யிலே கவிஞரின் படைப்பாற்றலும் கூர்த்த பார்வையும் வெளிப் படுகின்றன.

சூரியன் கூட
மேற்கில் மறைந்தான்
நேரத்தோடு
கூடு நோக்கிப்
பறந்து சென்றன நாரைகள்

என்னும் வரிகளில் சூரியன் கூட, நேரத்தோடு என்ற சொற்கள் மிக அழுத்தமாக ஒரு காட்சி படிமத்தை நமமுள் உருவாக்கு கின்றன.

கீழே
இன்னும் வேலை முடியாத மனிதர்கள்

என்ற வரிகளில் உள்ள சோகம் தான் இந்தக் கவிதையின் மையம். மேலே எழுப்பிய படிமம் இவ்வரிகளில் முழுமைபெறு கிறது. அக்கம் பக்கம் பார்த்தாலும் மேலே பார்க்கும் அவகாச மற்று உழைக்கும் மனிதர்கள், பாறையைப் பிளக்க வெடிவைக் கின்றனர். ஓசை கேட்டு அதிர்ச்சியுற்று, ஒருகணம் தயங்கினா லும், பறவைகள் மீண்டும் பறக்கின்றன எனக் கவிதை முடிந் தாலும் அது எழுப்பும் சிந்தனை மிகக் கூர்மையானது. வாழ்க்கை பற்றியும் மனிதர்கள் பற்றியும் கவிஞர் எழுப் பும் சோக உணர்வு கவிதையாக நயத்துடன் வெளிப்

பட்டிருப்பது பாராட்டத்தக்க அம்சமாகும். எளிமையும் தெளிவும் கூர்மையான நோக்கும் அழகியல் தன்மை குன்றாமல் இக்கவிதையில் வெளிப்பட்டுள்ளன. திரிநிலை கவிதையை இதனுடன் வைத்து வாசிக்க வேண்டும். அக்கவிதையில் மனிதன், விலங்கு, பறவை இடம் பெறுகின்றன. மனிதன் மனிதத் தன்மையை இழந்து மிருகமாகிவிடும் அவலமும் அதைச் சாட்சிபூர்வமாகப் பார்க்கும் மரத்தின் மீதுள்ள பறவையின் நிலையும் மிக எளிமையாகவும் சாதுர்யமாகவும் வெளிப்பட்டுள்ளன.

'மனிதத்தைக் களைந்து மிருகமாகித்
தடியால் அடித்தான்
பறவை மரத்தின் மேல்
பார்த்திருந்தது'

இக்கவிதையில் 'மிருகமாகி' என்று சொல்லாமல் 'மனிதத்தைக் களைந்து தடியால் அடித்தான் என்றே சொல்லியிருந்தால் கவிதையின் தொனி இன்னும் கூடியிருக்கும். கொட்டும் தேனீக்கள், சுரணை கவிதைகளிலும் மனிதன்-பிற உயிரினங்கள் என்ற முரண் உறவு அழுத்தமாக இடம் பெற்றுள்ளன.

காலக்ஷேத்ரம். நிகும்பலை ஆகிய கவிதைகளில் வாழ்க்கைத் தத்துவமும், தீமையை எதிர்த்துப் போராட வேண்டும் மனிதன் என்ற செய்தியும் அழுத்தமாகக் கூறப்பட்டுள்ளன.

'எதிர்த்து அழிவதே
மனிதவாழ்க்கை
அர்ஜுனா' (கால க்ஷேத்ரம்)

'ராமனின் வெற்றிக்கு
நிகும்பலை தேவையில்லை' (நிகும்பலை)

என்ற வரிகள் கவிதையாகி எளிமையாகவும் அழுத்தமாகவும் செய்தியைச் சொல்லுகின்றன. வாழ்க்கை குறித்த நம்பிக்கையையும் மனிதன் செயற்பட—தீமையை எதிர்த்துப் போராட— வேண்டும் எனவும் வெற்றி மனிதனுக்கே எனவும் இவை கூறுகின்றன.

'மும்மூர்த்திகள்' கவிதை இன்றைய தமிழகக் கவிதைச் சூழலையும், கவிதை விமர்சனப் போக்குகளையும் அடையாளங் காட்டும் எள்ளல் கவிதையாக உள்ளது. ஆனால், எள்ளல் என்ற அம்சத்தை விடுத்துப் பார்த்தால் உரைநடைப் பண்பு மீதூர உள்ளது. முன்னே குறிப்பிட்டுள்ள மேலே சில பறவைகள், திரிநிலை போல நுட்பமாகவும் அழகியல்பூர்வமாகவும் சொல்லப்படாமல், கட்டுரைத் தன்மையுடன் நின்றுவிடுகிறது. முகமற்ற கபந்தம், அழிவின் முண்ட நர்த்தனம், விஷ்ணுகாரியம், வீட்டெருமை போன்ற நுட்பமான வார்த்தை சேர்க்கைகள் இருந்தும், எள்ளல், ஏசல் கலந்த பாங்கும் தொனிப்பொருள் பிறபட்டு

உரைப்பாங்கின் முதன்மையும் இக்கவிதையின் லயத்தைக் குறைத்துவிட்டன.

மீண்டும் முயற்சிக்கப்படும் என
உணராத குறியோ
திமிராய் நின்றது

என்னும் வரிகளைக் கொண்டுள்ள பிழை திருத்தம் கா. சு. தத்துள்ள அழகான கவிதைகளுள் ஒன்று. கவிதையை நன்கு அனுபவித்து உள்வாங்கி, எளிமையும் செறிவும் மிக்க மொழியில் படைத்துள்ளார் கால சுப்பிரமணியன். கவிதையை இயக்க, மாக ஆக்கியுள்ளார். சொல்லாற்றல், சொற்சேர்க்கை, படிமம் தொனி என்னும் கவித்துவ அடிப்படைகளுடன் நல்ல கட்டுக் கோப்பான வடிவமும் உணர்வு நுட்பமும் கொண்டு மனித வாழ்க்கை பற்றிய நம்பிக்கைக் குரலாக வெளியிட்டுள்ள இத் தொகுப்பு காலசுப்ரமணியனை நன்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

சு. வேங்கடராமன்

- பக்கங்கள் பூராவும்
- உணர்வுத் திட்டுக்கள்
- அப்பியமாதிரி ஓர் அனுபவம்

### ❑ காத்திருப்பு

(கவிதைத் தொகுப்பு)
ரவிசுப்பிரமணியன்

வெளியீடு :
அன்னம் (பி) லிட்
2, சிவன்கோயில் தெற்குத்தெரு,
சிவகங்கை.
விலை: ரூ. 20-00

முதலில் எனக்குப் பிடித்த ஆறுகவிதைகள். பிறகு தொகுப்பின் பிற அம்சங்கள்.

1. ''கர்வக் கும்மாளம்'' என்ற தலைப்பு கொண்ட கவிதை (பக்கங்கள் 46-47): ஒரு சைக்கிள் கடைக்காரனால் தன் மமதை கிழிபடுவதைக் காட்டும் கவிதை.

2. 53-ஆம் பக்கக் கவிதை:
''வா
காணாமல் போவோம்''
என்ற தோழமை கலந்த வரிகள்.

3. 55 ஆம் பக்கக் கவிதை:
''வாய்ப்பு நேர்ந்தால்
அடுத்த முறை சந்திக்கும் போது
நான் சிரிப்பேன்
முதலில்''
என்ற இனிமையான வரிகள்,

4. 57 ஆம் பக்கக் கவிதை :

''அவசரமாய் வரும்
ஒன்றுக்கிருக்க
நேற்று எட்டணா ஏத்திவிட்டார்கள்
பஸ்டாண்டில்''

என்ற நக்கல் நிறைந்த வரிகள்.

5. 63 ஆம் பக்கக் கவிதை :

முன் ஸ்கூட்டரில் போகும் ஒரு பெண்ணின் அழகில் ஆழ்ந்து மூழ்கிய நிலையில் ஸ்கூட்டரை ஓட்டிக்கொண்டு... அவஸ்தைதான் அது.

6. 37 ஆம் பக்கக் கவிதை :

''மனுஷன் முக்கியம்
அப்புறந்தான்
கவிதை கிவிதையெல்லாம்''

என்ற நேச உணர்வு தாங்கிய வரிகள்.

ஏழைக்கு இரங்கி ஒரு பிரமாதமான கவிதை எழுதுவதைவிட ஒரு பதினைந்து ரூபாய் அவனுக்குக் கொடுத்து ''ஒரு வேளையாவது நிம்மதியாகச் சாப்பிடு'' என்று சொல்வது தான் ஒரு மகத்தான கவித்துவ அனுபவம் என்பேன் நான்.

இனி தொகுப்பின் பிற அம்சங்கள்:

ஆண் பெண் உறவை வரையறுக்கவே முடியாது. Aldous Huxley சொல்வார்: Man falls in and out of love என்று. வாழ்நாள் முழுக்கப் பார்த்தால் மனசுக்குள் எத்தனையோ காதல் பூக்கள் மலர்ந்திருக்கும். இவையெல்லாம் அப்பாவித்தனமான காதல் உறவுகள். நான் எந்த உறவையும் தகாதது என்று சொல்ல மாட்டேன். மென் உணர்வுதான் எவ்வளவு அழகானது! ஆண் பெண் உறவுகளைப் பற்றிப் பேசும்போது நண்பர் ரமேஷ் சொல்வார்: பார் உற்று நோக்கு, ரசி, குற்ற உணர்வை உருவாக்கிக் கொள்ளாதே, புலன் உணர்வும் ஜீவ சக்திதான், தடை என்று எதையும் நினைக்காதே.

தொகுப்பை வாசித்து முடித்ததும் ஏற்படும் எண்ணங்கள்: அழகான கவிதைகள். ஆழ்ந்த உணர்வுகள். அருமையான வரிகள். தூக்கலாக இருக்கும் உணர்வு: ஒருவித இனிமை கலந்த ஏக்கம். பாசாங்கற்றவை. எளிமையான ஆளுமையின் தணிவான வெளிப்பாடுகள்

பக்கங்கள் பூராவும் உணர்வுத் திட்டுகள் அப்பிய மாதிரி ஓர் அனுபவம். இது எழுத்துக்கூட அல்ல. உணர்வுத் துகள்கள். உணர்வுத் தெறிப்புகள். நேர்மையானவை. ஒளிவுமறைவு அற்றவை. இதை desk work என்று சொல்ல மாட்டேன் நான்,

—கோபிகிருஷ்ணன்

வரும் இதழ்களில் விமர்சனம் ஆக...

★ விமோசனம் நாளை
—முல்லை அமுதன்

விற்பனை :
கனவு
3/707 C பாண்டியன் நகர்,
திருப்பூர் - 641602.

★ காத்திருப்பு
—ரவி சுப்பிரமணியம்

அன்னம் (பி) லிட்.
2, சிவன்கோயில் தெற்குதெரு,
சிவகங்கை.

★ அந்தரத்திலே ஒரு இருக்கை
—தேவதேவன்

★ என் சிறுகதைப் பாணி
—சி. சு. செல்லப்பா

விற்பனை :
திலீப் குமார்,
25, 3வது டிரஸ்ட் க்ராஸ் தெரு,
மந்தைவெளி, சென்னை-28.

★ முகம்தேடும் மனிதன்
—குமார் மூர்த்தி

,, ,,

★ மறுபக்கம்
—எஸ்ஸார்சி

பானுசந்திரன் பதிப்பகம்
அக்ரஹாரம் தர்மநல்லூர் (P.o.)
வள்ளலார் மாவட்டம்-606103.

★ தெலுங்கானா சொல்லும் கதைகள்
—மொழிபெயர்ப்பு : சாந்தாதத்

வெளியீடு/விற்பனை
உரிமை :
தாமரைச் செல்வி பதிப்பகம்
31/48, இராணி அண்ணா நகர்,
சென்னை - 600 078.

★ காடன் மலை
—மா. அரங்கநாதன்

,, ,,

★ மக்களுக்கான சினிமா
தொகுப்பு

,, ,,

★ குழந்தைக் குரல்
—க. ச. கந்தசாமி

விற்பனை :
தமிழ்ச் சோலை
47, துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5

★ ஒரு கணமேனும்...
—உதயசங்கர்

நிவேதா பதிப்பகம்
166, எட்டையபுரம் ரோடு,
கோவில்பட்டி - 628501.

★ உயர்த்திரு
—ஆர். கே.

சௌடாம்பிகை பதிப்பகம்
44-A, வைத்தி தெரு,
சேலம் - 636 002.

★ THE HILL COUNTRY IN
Srilankan Tamil Literature
—ANTHONY JEEVA

Hill Country
Publishing House
57, Mahinda Place,
Colombo - 6

- தன்வளமான மொழி மூலமும்,
- திறமையான விவரிப்பின் மூலமும்
- பியத் மோந்திரியனின் ஓவியங்களையே
- வாசகருக்குக் காட்டிவிடுகிறார் ஆசிரியர்.

□ **புதுச்சிற்பவியல் :** பியத் மோந்திரியானின் நியோபிளாஸ்டிசிசம்
தேனுகா
வெளியீடு :
அன்னம் (பி) லிட், சிவகங்கை
**விலை: ரூ. 30-0**

நவீன கவிதை, ஓவியம், சிற்பம் போன்ற வளர்கலைகளைப் பற்றிய சிந்தனைகளை 'வண்ணங்கள் வடிவங்கள்' என்ற நூலின் மூலம் வாசகர்களோடு பகிர்ந்து கொண்ட தேனுகாவின் சமீபத்திய வித்தியாசமான முயற்சி இந்தப் புத்தகம். 'நியோபிளாஸ்டிசிசம்' என்ற மேலை நாட்டு கலைச் சித்தாந்தத்தை எளிய தமிழில் விளக்கியிருக்கிறார் தேனுகா.

ஹாலந்துநாட்டு ஓவியக்கலைஞர் பியத் மோந்திரியான். இவர் வடிவமைத்த நியோபிளாஸ்டிசிசம் என்ற புதுச்சிற்பவியல் மரபு வழிச் சிந்தனையிலிருந்து பெரிதும் மாறுபட்ட ஒன்று. 'கலை ஒன்றும் புனிதமானதல்ல; உணர்வுபூர்வமானதும் அல்ல; அது அறிவுபூர்வமானதே' என்ற பியத் புதுமாதிரியான கட்டிடங்களை தன் ஓவியங்களில் வெளிப்படுத்தினார். அந்த ஓவியங்களில் 'கட்டப்பட்ட' அந்தக் கட்டிடங்கள் தம் முப்பரிமாணங்களையும் காட்டின. வெறும் கல்லால் உருவாக்கப்படும் கட்டிடங்களை ஓவியங்களாக பியத் தீட்டிய போது அந்த ஜடப்பொருட்களுக்கும் ஒரு ஜீவன் கிடைத்துவிட்டது போலவே இருந்தது. பியத் மோந்திரியானின் இப்புதிய முயற்சி 'நியோபிளாஸ்டிசிசம்' என்றே அழைக்கப்பட்டது. பியத்தோடு நெருங்கிப் பழகிய கலைஞர்கள், கைவினைஞர்களிடையே இது ஓர் இயக்கமாகவே வளர்ச்சியடைந்தது.

சிற்பக்கலையின் தன்மைகளையெல்லாம் பிற கலைகளும் பெற வேண்டும் என்றார் பியத். ஒருவகையில் எல்லாக் கலைகளும் சிற்பக்கலையின் பரிபூரணத்தை அடைவதையே தமது லட்சியமாகக் கொள்ளவேண்டும் என்றார் இவர். அதனால் கலைகளில் உன்னதமானது சிற்பமே என்றார். இந்தச் சிற்பங்களின் முப்பரிமாண தன்மைகளை சதுரங்கள், செவ்வகங்கள் கொண்ட தனது இரு பரிமாண ஓவியங்களிலேயே மிகச்சிக்கனமாக கொண்டு வந்தார். இவ்வோவியங்கள் ஒரு பார்வையில் கட்டிடங்களாகவும் தோன்றின. இதனால் இவரது ஓவியங்களை புதுவகையான சிற்பங்கள் என்றனர். அதுவே புதுச்சிற்பவியல் கலையாக உருவாயிற்று.

"கலை அறிவுபூர்வமானதே" என்று வாழ்நாள் முழுதும் சொல்லிக் கொண்டுதான் வந்தார் பியத். அமெரிக்காவின் விண்ணை முட்டும் கட்டிடங்களையும், இரவில் ஒளிப்பிழம்பான அவற்றின் பிரகாசத்தையும் பார்த்துவிட்டு தன் வாழ்நாளின் இறுதியில் 'கலை உணர்வு பூர்வமானதே' என்று தன் சித்தாந்தத்தை மாற்றிக் கொண்டுவிட்டார். அப்போதுதான் பூகிஊகி நியூயார்க் போன்ற அற்புதமான ஓவியங்களை இவரால் படைக்க முடிந்தது. ஆனால் இவ்வோவியங்களின் தொடர்ச்சியை நீட்டிக்க முடியாமல் மரணம் இவரது வழியில் குறுக்கிட்டது.

கலைஞர்களுக்கே உள்ள எல்லாச் சோகங்களும், வெறுமைகளும் பியத்தின் வாழ்விலும் இருந்ததை தேனுகா உருக்கமாக எழுதியிருக்கிறார்.

நியோபிளாஸ்டிசத்தைப் பின்பற்றிய இரண்டு முக்கிய கலைஞர்களைப் பற்றியும், அவர்களது பங்களிப்புகள் குறித்தும் இரண்டு சிறு கட்டுரைகள் நூலில் உள்ளன.

பியத்தின் கோட்பாட்டை விளக்க முற்படும்போது, இவரது ஓவியங்களையும் வாசகர்களுக்குக் காட்ட வேண்டியது அவசியம் தான். அதற்காக சில ஓவியங்களும் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் கட்டுரையில் தேனுகா தன் வளமான மொழியின் மூலமும், திறமையான விவரிப்பின் மூலமும் இந்த ஓவியங்களை வாசகர்களுக்கு 'காட்டி' விடுகிறார். இதை தேனுகாவின் வெற்றி என்றே சொல்லலாம்.

தமிழுக்கு முழுதும் புதிதான விஷயத்தை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கும் இந்தப்புத்தகம் அட்டை அமைப்பிலும், அச்சமைப்பிலும் கூட குறை வைக்கவில்லை.

சி. என். ராஜராஜன்

- வண்டல் வாசிகள் வட்டார வழக்கு
- சிலம்பாட்டத்தில் ஈடுபடாதது
- ஆறுதலான விஷயம்
- 

☐ ஓராண்காணி
(சிறுகதைகள்)
சோலை சுந்தரபெருமாள்

வெளியீடு :
கமலம் பதிப்பகம்,
காவனூர், அம்மையப்பன்
நாகை மாவட்டம்-613701.

168 பக்கங்கள் விலை : ரூபா 30-00

கரசில்காரர்தான் ஆரம்பித்து வைத்தார்கள்.

வட்டார வழக்கு அளவாகக் கலந்த கதைகளில் நல்ல மனசு சம்சாரிகளும், அப்புராணி நாயக்கர்களும், கிடைவைக்கும் கீதாரிகளும் வரிசையாக அறிமுகமாகிக், கரிசல் வாழ்க்கை ஜீவனோடு சித்தரிக்கப்பட, அபாரமான இலக்கிய விளைச்சல்.

சாதித்துக் காட்டிய கரிசலார்கள், கதைக்கு வளம் சேர்க்க வட்டார வழக்கு என்று இருந்ததை மாற்றி, வட்டார வழக்கைப் பதிவு செய்யவே கதை என்று தற்போது மும்முரமாகச் செயல்படுவதற்கு, எல்லா வட்டாரப் பேச்சு வழக்கையும் துடைத்தெறிந்துவிட்டு, "ஜொள்ளு, அல்வா கொடுப்பது, பீலா

விடுவது'' என்று கேபிள் டி வி மூலம் அடுத்த நூற்றாண்டுத் தமிழ்ப்பேச்சு உருவாகித் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் வேக மாகப் பரப்பப் படுவதும் காரணமாக இருக்கலாம்.

வண்டல்வாசிகள் கரிசல்காரர்களைப் போல அத்தனை தீவிர மான வட்டார வழக்குச் சிலம்பாட்டத்தில் ஈடுபடாமல், கதை சொல்வதற்கே முக்கியத்துவம் கொடுப்பது ஆறுதலான விஷயம்.

சோலை சுந்தரபெருமாள் தானும் அப்படியான ஒரு கதை சொல்லி என்று 'ஓராண்காணி' மூலம் நிரூபிக்கிறார்.

மகனிடம் தர்மாவேசத்தோடு சண்டை போட்டுக் கொண்டு போய்த் திரும்ப வருகிற செங்கம்மா கிழவியாகட்டும், ஆட்டை விற்ற பணத்தைக் குடித்துத் தீர்க்க எடுத்துப் போகும் மகனைத் தடுக்க முடியாது மறுகும் உம்பளச்சேரி கோனாராகட்டும், மரத்தைக் கொண்றைபோடும் போது (வெட்டும்போது) தவறி விழுந்த மகனை ஆஸ்பத்திரியில் சேர்த்து, ஆளாளுக்குப் பணம் பிடுங்க அவதிப்படும் சாமிக்கண்ணுவாகட்டும்... சுந்தரபெரு மாளின் கதாபாத்திரங்கள் எந்த விதமான செயற்கைத்தனமும் இல்லாமல் உலவுகிறவர்கள்.

வலுவான கதாபாத்திரங்களை வைத்துக் கொண்டு அழுத்த மான கதை நெய்யச் சில சமயம் தடுமாறினாலும், 'இறுக்கம்' 'பொறுத்திரு', 'பொலி' போன்ற கதைகளில் செய்நேர்த்தி காணக் கிடைக்கிறது.

புது மணப்பெண் தேனுவின் புகுந்த வீட்டு வாழ்க்கைத் தொடக்கத்தைச் சொல்கிற தலைப்புக் கதையில் கொஞ்சம் கவிதையும், கல்யாணம் கழிந்து மூன்று மாதத் தேனு வரும முந்தைய கதையில் எதிர்பாராத நகைச் சுவையும் தட்டுப்படு கின்றன.

'முடிச்சுப் போட்டு அடிமடியில சொருவியிருந்த வேட்டி மொனையை அவுத்து அதில்ருந்த பணத்தை எண்ணப் பார்த் தான், என்பதுபோல பேச்சு நடையில் தொடங்கி இலக்கணச் சுத்தமாக முடிக்கிற கலப்பு நடையை எல்லாக் கதையிலும் கை கொள்ளும் சோலை, வல்லடியாக வட்டார வழக்குகளைப் பயன் படுத்தாமல் எடுத்தாள வேண்டிய இடத்தில் அடிக்குறிப்பிட்டுப் பொருள் விளக்கமும் கொடுத்திருக்கிறார்.

வாய்க்கால் வரப்பில் கிடக்கும் தவளைகளின் 'டொட ளாளாய்ட்...ட்...ரு...ர்...டொடளா...ளாய...,சத்தம், பாலத்தை கடக்கும் நாகூர் பாசஞ்சரின் ''டடாஆ டடாஆ'' என்ற இரைச் சல்—சுந்தரபெருமாள் காட்டும் கிராமம் சப்தரூபமாகவும் எழுத் தில் விரிகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக காவேரிக்கரைக்காரனின் வாசால கம் இதுபோல பளிச்சிடுகிறது—

''தென்னல் வீசப் போறக் குறிப்பு தெரிஞ்சு நண்டுக வளைய வுட்டு வெளியே வந்து நட்டுக்கிட்டு நிக்குதுங்க...கவலைப்படாத, ஒனக்கு வெளச்சல் விட்டுக் கொடுத்துடாது...''

தமிழ் இலக்கிய உலகமும் சோலை சுந்தரபெருமாளைவிட்டுக் கொடுத்துவிடாது.

அசுவின்
(இரா. முருகன்)

- பலநூல்களில்
- தெரிந்துகொள்ள வேண்டியவை
- ஒரே நூலில் ஆய்வு நோக்குடன்
- தரப்பட்டுள்ளன.

☐ தமிழனா தமிங்கிலனா

(கட்டுரை)

காசி ஆனந்தன்

வெளியீடு:

மாணவர் புத்தகப் பண்ணை
26, ச. ப. சாலை
சென்னை—20
விலை : ரூபா. 35-00

சங்ககாலம் தமிழகத்தின் பொற்காலமாக விளங்கியது. சங்க காலம் பற்றி வெவ்வேறு கருத்துக்கள் இருப்பினும் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரை உள்ள கால கட்டத்தை பொதுவாக சங்ககாலமாக அறிஞர்கள் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அக்காலமக்கள் எல்லாத் துறைகளி லும் வளர்ச்சி பெற்று சிறப்புடன் விளங்கினர். சங்ககாலத்தில் தமிழ் மொழி உன்னதமான நிலையில் இருந்தது.

சங்ககாலத்துக்குப் பிறகு படிப்படியாக வடமொழியும் வடவர் ஆதிக்கமும் தமிழகத்தில் மறைமுகமான முறையில் ஏற் படத் தொடங்கியது. சங்ககாலத்துக்குப் பிறகு தமிழகப் பண் பாட்டின் மீது தொடர்ச்சியான தாக்குதல் தொடுக்கப்பட்டது.

கி. பி. 9 ஆம் நூற்றாண்டிலிருந்து 13ஆம் நூற்றாண்டுவரை சோழப் பேரரசின் கீழ் தமிழகம் மாட்சிமையுடன் விளங்கியது. இந்தியப் பெருங்கடலே சோழமண்டலக் கடற்கரையாக, சோழ ஏரியாகத் திகழ்ந்தது.

14 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழினம் அரசியல் முறை யிலும் பிற வழிகளிலும் வீழ்ச்சியடையத் தொடங்கியது. 16 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழின வீழ்ச்சியில் வேகம் தென் பட்டது.

''நமது நீர் நிலம் காற்று அனைத்திலும் ஏன் சிந்தனையிலும் கூட அயல் பதிவுகள் அழுந்தப் பதிந்திருக்கின்றன. அடிமை வாழ் வின் வேர்கள் நமது மூளை நரம்புகளாகப் படர்ந்து பழகி விட்டன'' என்று தமிழகத்தின் இன்றைய நிலையை, நா. அருணாசலம் அவர்கள் மிகத் தெளிவாக தமது பதிப்புரையிலே விளக்குகிறார்.

தமிழினம் இன்று திரிந்து, தேய்ந்து உருமாறிக் கொண்டிருக் கிறது. பல[illegible] உணர்ந்தும் உணராமலும் [illegible]ருக்கிறார்கள். சிலர் திட்டமிட்டு [illegible]மிழை ஒரு கலவை மொழியாக மாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். ''தமிழனா தமிங்கிலனா'' என்ற இந்த நூல் மூலம் பாவலர் [illegible]சி ஆனந்தன் அவர்கள், தமிழ் எப்படியெல்லாம்

திரிந்து உருமாறிக்கொண்டு இருக்கிறது; தமிழும் ஆங்கிலமும் கலந்து ஒரு கலப்பு மொழியாக அதாவது தமிங்கிலமாக மாறிக் கொண்டிருக்கிறது, என்பதை தெளிவாக விளக்குகிறார்.

இந்த நூல் மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டு மிகச்சிறப் பாக படைக்கப்பட்டுள்ளது. 'ஓர்வு' என்ற முதல் இயலில் தமி ழனால் தமிழும் தமிழனும் அழிந்த அவல நிலையை, வர லாற்றை எதிர்காலத்துக்கு ஒரு எச்சரிக்கையாக எடுத்தியம்பு கிறார்.

ஒரு தமிழ்ச் செய்தியேட்டில் 8 வரிகள் அடங்கிய ஒரு பத்திச் செய்தியில் எப்படி 17 மொழிகள் மிகச் சாதாரணமாகக் கலந்து எழுதப்பட்டுள்ளது என்பதைப் படித்தால் நமக்கு ஆச்சரியமாக வும அதிர்ச்சியாகவும் இருக்கும். இதை நூலாசிரியர் நன்றாக எடுத்துக்காட்டியுள்ளார்.

பேரறிஞரும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தையுமான முனைவர் அம்பேத்கர் அவர்கள், தனது ''தீண்டத்தகாதோர் யார்?'' என்ற நூலில் பின்வருமாறு எழுதுகிறார். ''ஆரியர் கள் வருமுன் தமிழ்மொழி இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பேசப்பட்ட மொழி. காசுமீரத்தில் இருந்து குமரிவரையில் பேசப் பட்ட மொழி. ...வடஇந்தியாவில் வாழ்ந்த நாகர்கள், தங்கள் தாய்மொழியான தமிழைவிட்டு அதற்குப் பதிலாக சமற்கிருதத் தோடு கலந்தனர்'' (பக்.15) எனவும், ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பேசப்பட்ட மொழி தமிழ் எனவும், இப்போது தென் கோடிப்பகுதியில் மட்டும் பேசப்படும் மொழியாக சுருங்கிவிட்ட நிலைக்கான காரணங்களையும் விவரிக்கிறார்.

மலையாள வரலாற்றாசிரியரும் பேரறிஞருமான திரு. வாலத்த அவர்கள் தமிழ் மொழி பற்றியும் தமிழ் எப்படி திரிந்து மலையாளம் ஆனது என்பது பற்றியும் தமது ''சரித்திர கவாடங் கள்'' என்ற நூலில் எழுதியுள்ளார். அந்தக் கேரள நாட்டவர் கூறுவது: ''தமிழை, என் பழைய தாய் மொழியை இழந்து வடமொழியை ஏற்று மாறிப் போனேனே'' என மிகவும் வருந்தி எழுதுகிறார் (பக். 18).

சங்க காலத்துக்குப் பிறகு தமிழன் ''மகிழ்ச்சி'' அடைய விரும்பவில்லை, வடநாட்டவருடன் தொடர்பு ஏற்பட்ட பிறகு அவன் ''சந்தோசம்'' அடையவே விரும்பினான்; ஆங்கில நாட்டவர் வருகைக்குப் பிறகு அவன் ''ஹேப்பி'' ஆக இருக் கவே விரும்புகிறான். இப்படித் தமிழரிடம் காணப்படும் போலித் தன்மையையும் தாழ்வு மனப்பான்மையையும் சாடுகிறார்.

மேலும், இரண்டாவது இயலில், தமிங்கிலம் என்ற திமிங் கிலம் தமிழை, எப்படி விழுங்கிக்கொண்டு இருக்கிறது என்பதை யும், படித்தவர்கள், புலவர்கள் எப்படித் தமிழுக்கு சமாதி கட்டிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதையும் விளக்குகிறார்.

''பண்ணித் தமிழ்'' பேசும் படிப்பாளிகளைப் பற்றியும் ஆசி ரியர் எடுத்துரைக்கிறார்: ''காலையில் மனைவியைப் பார்த்து

பல்லை Brush பண்ணு என்கிறான். பின்பு Body Wash பண்ணு என்கிறான், அப்புறம் Tiffin பண்ணு என்கிறான், பிறகு Dress பண்ணு.

இப்படி இவர்கள் வாயில் பண்ணுதல் என்ற தமிழ்ச்சொல்லை விட்டால் தமிழ் இல்லை; சங்கம் வைத்து தமிழ் வளர்த்த நாட்டில் இப்படி ஒரு நிலையா?

கையெழுத்துப் போடுவதில்கூட தமிழர்கள் எவ்வளவு கேவலமாக நடந்து கொள்கிறார்கள் என்பதை தமிழர் தலைவர் ஆதித்தனார் மூலம் நமக்கு காட்டுகிறார். ஆதித்தனார் கூறுவது: ''நான்கு தடவை உலகைச் சுற்றியிருக்கிறேன் தமிழ்நாட்டில் உள்ளதைப் போல் K. S. கண்ணன் P. V. முத்து என்ற இரண்டு மொழிகளில் கையெழுத்துப் போடுகிறவன் உலகில் எந்த நாட்டிலும் இல்லை'' (பக். 48).

நூலின் முடிவுப் பகுதியாக 'தீர்வு' என்ற இயல் அமைந்துள்ளது. நூலின் மிக முக்கிய நோக்கமும் மையக் கருத்தும் இந்தப் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது.

''தமிங்கிலர் எதிர்ப்பியக்கம்'' உடனடியாகத் தொடங்கப் பட வேண்டும் என்பதே இந்த நூலின் மிகமுக்கிய கருத்து. அப்படித் தொடங்கப்படாவிட்டால் என்ன நடக்கும் என்பதையும் கூறுகிறார்.

அமெரிக்காவில் இலாசு ஏஞ்சல்சு நகரில் இசுப்பானிய மொழியினர் ஆங்கில மொழியைக் கலந்து பேசி ''ஸ்பாங்லீஷ்'' (ஸ்பானிஷ் + இங்லீஷ் = ஸ்பாங்லீஷ்) என்ற புதிய மொழியை உருவாக்கி உள்ளனர். இச்செய்தி 'தினகரன்' நாளேட்டில் 2-11-1994 அன்று வெளிவந்துள்ளது (பக். 90).

இங்கும் அதே போல தமிழ்மொழியும் ஆங்கில மொழியும் கலந்து தமிங்கிலம் (தமிழ்+ஆங்கிலம் = தமிங்கிலம்) உருவாகி விட்டது. எனவே தமிழ் மொழியைப் பாதுகாக்க ஒவ்வொரு தமிழனும் உடனடியாகச் செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் அழிந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

நூல் முழுவதும் தமிழ் நாட்டைப் பற்றியும் தமிழீழத்தைப் பற்றியும் ஒப்பீடு செய்து நல்ல பல கருத்துக்களை வழங்கியுள்ளார். பல நுல்களைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளை இந்த ஒரே நூலில் தொகுத்து ஆய்வு நோக்குடன் தரப்பட்டுள்ளது.

கல்லூரி மாணவர்களும், பேராசிரியர்களும் படித்துப் பயன் பெற வேண்டிய ஒரு சிறப்பான நூலாக விளங்குகிறது.

—முனைவர். ச. பா. அருளானந்தம்

● இப்படி ஒரு பார்வை
● எவர் தூண்டிலிலாவது மாட்டியதா?
●

இன்னொருசுவடு
(கவிதைகள்)
நாசர்

கவிதாசரண் வெளியீடு:
கிடைக்குமிடம்:
தாமரைச்செல்வி பதிப்பகம்
31/48, இராணி அண்ணா நகர்,
சென்னை—600078.

'இன்னொரு சுவடு'
நாசரின்
இலக்கியப் படைப்பு.

உறைப்பான நறுக்குகள்.
நாசரின் எழுத்துக்களில்
தேடல் இருக்கிறது.

கொலம்பசின் கப்பலுக்கு
இருந்த தாகம்.

தேடுகிறார்—
மாந்தனின் கண்டுபிடிக்கப்படாத
பகுதிகளை.

கப்பல் புதிய கரைகளைத்
தொடுகிறது.

ஆற்றொழுக்கான நடை.
கட்டப்பட்ட இலக்கியம்
அல்ல-கொட்டப்பட்ட
இலக்கியம்.

பூச்சுக்கள் இல்லாத படைப்பு.
தமிழில் புதிய இலக்கியர்கள்
தோன்றிக்கொண்டே
இருப்பதை எண்ணி
மகிழாமல் இருக்க முடியவில்லை.

அதிலும்—
முகையாய் மலராய் வளராமல்
மரத்தில் திடீரென்று
கனியே தோன்றினால்
எப்படியோ நாசர் அப்படி.

ஆழமான அவர் எழுத்துக்களில்
நரை தெரிகிறது.
இளமையில் முதிர்ச்சி.

புதிய அணுகுமுறைகள்
நாசரின் எழுத்துக்களாய்
பூத்துள்ளன.

கொடுமைகள் மலிந்துவிட்ட
குமுகாயத்தில் முற்றுமுழுதாய்
காதலில் தோய்தலை அவரால்
கொஞ்சமும் விழுங்க
முடியவில்லை.

உலகத்தில் வாழ்ந்து கொண்டே
உலகத்தை மறந்துவிட்ட
மாந்தன் இருக்கிறான்.

காதலி என்ன உலகத்தை
விடவா பெரியவள்?

நாசர் கண்ணன் மீதே கை
வைக்கிறார்.

'என்னை
மன்னித்துவிடு காதலி
யமுனைக் கரையில்
ராதைக்காக கீதமிசைத்த
கண்ணனைப் போல்
என்னால் இயலாது.

அறியாமையிலிருந்து
அடிமைகளுக்கு
உயர்ந்தோரிடமிருந்து
உழைப்போருக்கு
மதங்களிலிருந்து
மனிதருக்கு

விளக்கிடமிருந்து
விட்டிலுக்கும்
மாமியாரிடமிருந்து
மருமகளுக்கு

மரபுகளிலிருந்து
நமக்கு

ஆரவாரங்களிலிருந்து
அமைதிக்கு
அடுப்படியிலிருந்து
உனக்கு
விடுதலை தேடும்
யாக நெருப்பிற்கு

விறகாகும் பெருமையை
எனது புல்லாங்குழல்
பெறப்போகிறது.
முடிந்தால் தொடர்ந்துவா.
இல்லை...
வாழ்த்தியனுப்பு'
என்கிறார் நாசர்.

காதலியின் மயக்கத்தில்
சாஜகான் ஒரு
கலைக்கோயிலை எழுப்பினான்—
நாசரோ சுற்றிலும்
துன்புறும் மாந்தரைக்
காண்கிறார்.

காதலியின் மயக்கம் தவிர்த்து
ஒரு கலைக்கருவியை
நெருப்பிலேயே போட
வருகிறார்.

என்ன இசை வேண்டிக்
கிடக்கிறது.

புல்லாங்குழல் விறகாகிப்
போகட்டும்.

'இன்னொரு சுவட்டில்'
'அடைமழை'
இன்னொரு நறுக்கு.

ஒரு மாந்தனின் உழைப்பு
வேறொரு மாந்தனுக்கு
உணவாகிக்கொண்டிருக்கிறது
என்பதை, புரட்சி
இலக்கியர்கள் ஓயாமல்
எழுதிப் போ[illegible]ருக்கிறார்கள்.

ஆனால்—

ஒருவனின் வறுமை
இன்னொருவனின்
உணவாக முடியுமா?
'ஆகிறதே' என்கிறார் நாசர்.

'இன்று என் வீட்டில்
மீன் குழம்பு.
நன்றி யாருக்கு?
அறிவிப்பை மீறி
கடல்சென்று வந்த
மீனவனுக்கா?
நிர்ப்பந்தித்த வறுமைக்கா?'

மீன் குழம்பு நாமும்தான்
சாப்பிடுகிறோம்.
இப்படி ஒரு 'பார்வை'
எவர் தூண்டிலிலாவது
மாட்டியதா?

அரசியல் பற்றி சுருக்கமாகச்
சொல்கிறார் நாசர்:-

'தோட்டத்தை
பாதுகாப்போம்'
சபதமெடுப்பதில்
சண்டையிடுகின்றன
அழுக்கு நீரும்
ஆர்ப்பரிக்கும் புயலும்
தண்டுப் பூச்சியும்
கோடாரிக்காம்பும்
பூக்கள் பரிதாபம்.'

இப்படித்தான் நாசரின்
நறுக்குகள் எல்லாம்.
மக்களோடு நாசர் நிற்கிறார்.
'இன்னொரு சுவட்டில்'
குறிப்பிட வேண்டிய
இன்னொன்று—
ஓவியர் மருதுவின் உயிர்க்
கோடுகள். ●

—காசி ஆனந்தன்

மனித வேதனையை நேர்மையான
உபதேசக்குரலுடன்
சுட்டிக்காட்டுகின்றன கவிதைகள்.

புதியதல்ல...புதுமையுமல்ல...
(கவிதைகள்)
எழிலன்

இளம்பிறை பதிப்பகம்,
375/8, ஆற்காடு சாலை,
சென்னை — 24.
விலை : ரூபா 50-00

1

''புதியதல்ல.. புதுமையுமல்ல'' திரு. எழிலனின் முதலாவது கவிதைத் தொகுப்பு என்று முன்னுரையில் தெரிவிக்கப்படுகிறது.

இன்று கவிதை எழுதத் தூண்ட வைக்கும் புறஉலகச் சூழ்நிலைகள், பழைய உலகத்திலிருந்து வெகுவாக மாறிவிட்டன. இன்றைய உலகத்தில் இயற்கையின் இனிய சௌந்தரியங்களும், குயிலும், கிளியும் கோலாகலமாக பாடித்திரியும் நிர்மல வானமும், நீரோடைகளும் நமக்குள் அநேகமாக மறைந்து போய் விட்டன. மனிதனை மனிதன் தின்னும் கொடூரமும், வறுமையும், அவலங்களும், தீர்வு காண முடியாத விரோதங்களுமே இன்றைய உலகத்தின் விஸ்வரூப தரிசனமாக நமக்குத்தெரிகிறது.

எழுதும் கவிதைகளும், இவைகளிலிருந்து தான் தூண்டப் பெற வேண்டியதாக உள்ளது. மனித மனசாட்சியின் பிரதிபலிப்பாக, தார்மீக கோபத்தின் வெளிப்பாடாக இன்றைய கவிதைகளின் தொனி ஒலிக்கின்றன.

இன்னொரு கோணத்தில் சிந்திக்கும் போது, இப்படிப்பட்ட மனிதப் பிரச்னைகளை வெறும் பட்டியலாக ஒரு அடுக்கு மொழி வடிவில் எழுதி விடும்போது மட்டும், அவைகள் கவிதைகள் என்ற அந்தஸ்தை பெறுவதில்லை எனத் தோன்றுகிறது

ஒரு பொருள் எப்படி கவிதை நிலைக்கு உயர்த்தப்படுகிறது என்று ஒவ்வொரு கவிஞனும், தனக்குள் ஆழ்ந்து சிந்தித்து ''உள்-தரிசனமாக'' உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இது ஒரு புறம் இருக்க, நமது ஆன்றோர்கள் மனித சமுதாய நெறிகளை, நல்வாழ்வுக்கு அவசியமான அடிப்படையான வாழ்வு உறவு முறைகளை, உன்னதமான தீர்க்க தரிசனத்துடன் கவிதை வடிவில் சொல்லி வைத்திருக்கிறார்கள். திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருமந்திரம் இப்படிப்பட்ட நிரந்தரமான நல்வாக்குகள், வாழ்வின் அகராதியாக எக்காலத்துக்கும் பொருள் நலியாத சிந்தனைகளாக இருக்கி[illegible]ன.

திரு. எழிலன் அவர்களின் கவிதைகளில் இத்[illegible]கைய பாராட்டரிய உபதேச தொனிகளை காணலாம். மனித[illegible], பொதுவாக

பலஹீனங்களோடு வாழ்க்கை முழுவதும் போராடிக் கொண்டிருக்கிற பிறவிதான். சமுதாய உறவுகளில் அவன் எதிர்ப்படும் ஒவ்வொரு நிலையிலும், அவன் தன் பலஹீனமான பேதமைகளால் வேதனைக்கு உள்ளாக வேண்டியுள்ளது.

'புதியதல்ல புதுமையுமல்ல' கவிதைகள் ஒவ்வொன்றும் இப்படிப்பட்ட மனித வேதனையை ஒரு நேர்மையான உபதேசக் குரலுடன் சுட்டிக் காட்டி, அவனை இந்த அவல வாழ்விலிருந்து விடுவிக்கும் ஆதங்கத்தை, தீவிர அக்கறையை கவிதை வடிவத்தில் சொல்லுகின்றன.

கவிதைகளை நேர்த்தியாக்கக்கூடிய, படிமங்கள்; சொல்லைக் குறைத்து, பொருளைத் தீவிரமாக்கும் மௌனங்கள், வெறும் கருத்துக் குவியல்களாக கவிதை செய்வதை தவிர்க்கும் தற்கால பார்வைகள் இவர் கவிதைகளில் காண முடியவில்லை.

கவிதைத் தொகுப்பின் பெயர் 'புதியதல்ல, புதுமையுமல்ல'. இவற்றை வாசிக்கும் ஒவ்வொருவர் மனதிலும் நல்ல பல வாழ்வு நீதிகள் அடங்கிய நமது பாரம்பரிய சிந்தனைகள், மீண்டும் நினைவுக்கு வரும், நிச்சயமாக.

—எஸ். வைதீஸ்வரன்

- கவிஞர் உள்ளத்தில் மாந்தநேயம்
- நந்தா விளக்கமாகச் சுடர்விடுகிறது

## 2

கனடா போன்ற நாடுகளில் இருந்து நூற்றுக்கணக்கான நூல்கள், திங்களிதழ்கள் போன்றவைகள் வெளியிடப் பெற்றிருந்தாலும் அவை பற்றித் தமிழ்நாட்டிலுள்ள ஒன்றிரண்டு அறிஞர்களைத் தவிர வேறு எவரும் அறியாத நிலைதான். அயலகத் தமிழர்கள் பால் தமிழகத் தமிழர்கள் கொண்டுள்ள அக்கறை தெள்ளிதின் புலப்பட்டு நிற்கின்றது.

இந்த நிலையில் பாவலர் எழிலன் அவர்கள் ''புதியதல்ல... புதுமையுமல்ல...'' என்ற நூலைத் தமிழுலகிற்குத் தந்துள்ளார்.

ஒரு நூலாசிரியர் 'தன்வரலாறு' கூறாவிட்டாலுங்கூட 'தன் முனைப்பு' என்ன என்பதை, அந்த நூலின் ஏதானுமொரு இடத்தில் தன்னையறியாமலேயே கூறிவருவதும் 'ஒரு மரபாக' இருந்து வருகின்றது.

'தமிழரென்று சொல்லிடவே தகுதியெமக் கில்லை'
தமிழருக்கு என்றுஎங்கும் எந்தநாடும் இல்லை!
த[illegible]தன்னை ஆண்ட அந்தத் தமிழரின்று இல்லை!
தமிழ[illegible]று அகதியாக வேறுநாடும் இல்லை!'

என்று குமுறுகின்றார்.

உலகில் நாடற்ற எத்தனையோ இனங்கள் தத்தமக்கென்று ஒருநாட்டை உருவாக்கிக் கொண்டு வருகின்ற இக்கால கட்டத்தில்—'ஏதிலியராகத் தமிழர் செல்லாத நாடே இல்லை' என்பது எத்துணை இரங்கத் தக்கது?

'சுதந்திரம் காணும் வேட்கையில் மாயும்
மாந்தரோ மரணிப்பதில்லை'
'ஏடேந்திப் பள்ளிக்குச் சென்றிடும் பிள்ளைகள்
காடேகித் துவக்கினைத் தோளேந்திச் செல்கிறோம்'

இந்த அவலக்குரல் நம்நெஞ்சை எரிப்பதாகவே இருக்கிறது.

இந்தப் பிள்ளைகள் எப்படி இருந்து இப்படியாயினர் என்பதைக் காணும்போது எரிகின்ற நெஞ்சம் இல்லாது போனால் நல்லதென்றே எண்ணத் தோன்றுகிறது.

பாவலர் எழிலன் உள்ளத்தில் மாந்த நேயம் நந்தா விளக்காகச் சுடர்விட்டுக் கொண்டிருப்பதால்தான்

'மனிதத் துவத்தினைக் காத்துநீ வாழ்ந்தால்
மனிதரில் இயற்கையோ டிறைவன் இருப்பான்'

என்றெல்லாம் பாடமுடிகின்றது.

மக்கள் விரும்ப வேண்டியதை உணர்தும், நல்ல பணிக்கு அடையாளமாகப் 'புதியது புதுமையாக மலர்ந்துள்ளது'!

ஏதோ ஒரு பேச்சு முறைக்காகத் தமிழீழம், மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் தமிழர்கள் இருக்கின்றனர்- என்பது பற்றி மட்டுமே இங்குள்ள தமிழறிஞர்கள் அறிந்துள்ளனர்; நாற்பதுக்கு மேற்பட்ட நாடுகளில்—மொழி மறந்தும், இனம் மறந்தும் வாழும் தமிழின மக்களை உள்ளடக்கி—வாழ்கின்றனர். உண்மையாகவே தாய்த் தமிழகத்திலும் அயல் நிலத்தமிழர்கள் கலை, இலக்கிய வளர்ச்சியிலும் மொழிபேணலிலும் இன ஒற்றுமையிலும் தமிழ்த் தேசத்திலும் கருத்துடையவர்களாக இருப்பதை அறிந்து கொள்ளும் முதல் களமாக இந்நூல் வரவுவந்துள்ளது. இது போன்ற வெளியீடுகளால் — எழுத்தாளருக்குச் சேரும் பயன்— தாய்த்தமிழகத்தினர் 'கண் திறப்பதாகும்!' 'புதிய வரவும் புதுமைமலர்வுமான' நூலை அளித்த பாவலர் புகழ் வளர்க!

—சிங்கை பாவாணர் முல்லைவாணன்

○ ஒளிபரவுகிறது

(நாவல்)

திக்குவல்லை கமால்

பதின்மூன்றாண்டுக் காலம்
வளராமலே இருந்த ஒரு மரம்போல்...

வெளியீடு :
தேசிய கலை இலக்கியப் பேரவை &
சவுத் ஏசியன் புக்ஸ்

'நந்தி'யின் முன்னுரையோடு கூடிய திக்குவல்லை கமால்'ன் நாவல் இது. 1982ல் பிரதேச அபிவிருத்தி இந்து சமய தமிழ் அலுவல்கள் அமைச்சு நடத்திய நாவல் போட்டியில் முதல் பரிசு பெற்றிருக்கிறது. பதின் மூன்றாண்டு கால இடைவெளியின் பின் இப்போது வெளிவந்திருக்கிறது. வெளிவந்த வகையில் நல்லது. பதின் மூன்றாண்டுக் காலமும் அஞ்ஞாத வாசம் புரிந்து வெளி வந்திருக்கும் இந்த நாவல், அத்தனை ஆண்டுக்கால வளர்ச்சியைக் கொள்ளாத ஒரு மரத்தைப் போலவே இருக்கிறது. எந்த நாவலும் அப்படித்தான் இருக்கும். பதின்மூன்றாண்டுக் கால தமிழ் நாவல் எங்கேயோ சென்றுவிட்டது. இவற்றையெல்லாம் இந்த நாவலில் துல்லியமாகவே காண முடிகிறது.

ஆயின், இது சாதாரணமான வெறும் நாவலும் அல்ல. தொழிலாளர் பிரச்னையை முன்னெடுத்த யதார்த்த நாவல் வரிசையில் இதற்கும் ஓரிடம் உண்டு. எப்படி?

பாத்திரங்கள் பெருமளவில் உரையாடலிலேயே தம்பண்பைக் காட்டிவிடுகின்றன. இந்தப் பண்பு தமிழ் நாவல்களில் மிகக் குறைவு

கதாபாத்திரங்களின் பண்பு வளர்ச்சி சம்பவங்கள், ஆசிரியர் கூற்று, மனவோட்டம் மூலமாக காட்டப்படுவதே தமிழ் நாவல்களில் பெருவழக்கு. அதை மீறி உரையாடல் வழியே பண்பு வளர்ச்சி காட்டப்படும் மிகக் குறைந்த நாவல்களில் இதுவும் ஒன்று என்பதே இதற்குப் பெருமை.

உரையாடல் இலங்கை முஸ்லீம்களின் பேச்சுத் தமிழில் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் சற்று சிரமமிருப்பினும், தொடர்ந்து சென்றுவிட்டால் இதுவும ரசனையாகவே இருக்கிறது. தமிழக வட்டாரங்களில் இல்லாத இந்தப் பேச்சு வழக்கை அறிந்து கொள்வதற்காகவே இந்த நூலைப் படிக்கலாம். கதைப் போக்கிலும் தளர்வில்லை. நாவல்நடையும் இதமாக இருக்கிறது,

திக்குவல்லை கமால்'ன் முதலாவது நாவல் இது. தொடர்ந்து வரும் நாவல்கள் தமிழ்நாவல் இலக்கியத்தை வளர்க்கவும் கூடும். திக்குவல்லை கமால் தொடர்ந்து எழுத வேண்டும்.

—தேவகாந்தன்

☐ இருள் என்பது குறைந்த ஒளி
(வசன கவிதைகள்)
பாரதி

புதுமையான ஒரு விளம்பரத்தோடும் முன்னுரையில் இதயம் தொடும் சில வரிகளோடும்

வெளியீடு: உயிர்
1/8, கொங்கன் குளம்,
ஆலங்குளம் சிமெண்ட்ஸ் அஞ்சல்,
காமராஜர் மாவட்டம் - 626127.
விலை: ரூபா 25-00

'இருளென்பது குறைந்த ஒளி' டிசம்பர் 11 முதல் தமிழகத்தின் அனைத்து தெருக்களிலும் கிடைக்கும் என்று விளம்பரப் படுத்தப்பட்ட பாரதியின் வசன கவிதைத் தொகுப்பு இப்போது கண்ணுக்கு அழகிய தொகுப்பாக வெளிவந்திருக்கிறது. ஆங்காங்கே கருத்துள்ள புகைப்பட இணைப்பு இதன் இன்னொரு சிறப்பு. முன் அட்டை உள் புறத்தில் தாடியுடன் கூடிய பாரதி—செல்லம்மாள் புகைப்படம் நூலை வாங்குபவர்களுக்கு ஒரு பரிசுபோல. 'பாரதியின் அந்தரங்க உலகிற்குச் சென்று அவனின் தாடியோடு எங்கள் முகத்தை உரசியிருக்கிறோம்' என பதிப்பாளர்கள் சீனியம்மாள், சி. செல்வம் எழுதியிருப்பது, இவ் வெளியீட்டின் அவர்களது ஆத்மார்த்த ஈடுபாட்டை வெளிப் படுத்துகிறது.

—துறவி

☐ வறுமையின் மெய்யறிவு — பகுதி 2
புரூதோன்

....திரு. புரூதோனின் வறுமையின் மெய்யறிவு எனும் நூலை எனது புத்தகக் கடைக்காரர் சென்ற வாரம்தான் எனக்கு அனுப்பிவைத்தார். அதைப் பற்றிய எனது கருத்தை தங்களுக்கு உடனே தெரிவிப்பதற்காக இரண்டே நாளில் படித்துமுடித்தேன். அந்நூலை மிக அவசரமாகப் படித்துள்ளதால் விபரங்களில் நான் இறங்க முடியாது. அதைப்பற்றி எனக்கு ஏற்பட்ட பொதுவான கருத்தை மட்டும்தான் சொல்ல முடியும்... மொத்தத்தில் அந்நூல் மோசமானது, மிக மோசமானது என்று நான் மனம் திறந்து சொல்லித் தீர வேண்டும்...

— கார்ல் மார்க்ஸ் (பா. வ ஆன்னென்கவுக்கு எழுதிய கடிதத்திலிருந்து)

□ பாரபாஸ்
(நோபல் பரிசு நாவல்)
பேர்லாகர் குவிஸ்ட்
தமிழில்-க.நா.சு.

வெளியீடு:
வேர்கள் இலக்கிய இயக்கம்,
நெய்வேலி,
விலை: ரூபா. 35 00

'இன்றைய ஸ்வீடிஸ் இலக்கியத்தின் கொழுந்தென்று பாரபாஸைச் சொல்ல வேண்டும். இருபது நூற்றாண்டுகளாக உலகத்தின் போக்கையே ஒரு குலுக்கு குலுக்கி ஆட்டி வைத்துள்ள கிறிஸ்தவ சகாப்தத்தினை, கிறிஸ்தவ மதத்தின் ஆரம்பத்தை ஒப்பாதவன் ஒருவனின் கண்களின் மூலம் நமக்கு மிகவும் அற்புதமாக அறிமுகம் செய்து வைக்கிறார் ஆசிரியர்.'

க. நா. சு.
(முதற்பதிப்பு முன்னுரையில்)

□ தமிழில் குழந்தைகள் நாடகம்
தொகுப்பு: ஜெ. ரெங்கராஜன்

வெளியீடு:
வெளி
சென்னை-78

'முதலில் மனித வளர்ச்சியின் பரிமாணமாகத் தோன்றிய நாடகம் பிறகு மனிதப் பிரச்சனைகளின் நடிப்பு வடிவங்களாக மாறியது. இங்கே சமூகப் பொறுப்புணர்ச்சிகளுக்கு இடமுண்டு. நடிக்கும் போது தனது திறமை, திறமை அல்லாத நிலைகளைக் கொண்டு ஆத்ம பரிசோதனை செய்துகொள்ள முடிகிறது. நடிக்கும் பாத்திரங்களின் அறிமுகமும, மற்ற பாத்திரங்களின் பரிச்சயமும் ஏற்படுகிறது. மனிதாபிமான வளர்ச்சி மற்றும் குழுபலத்தையும் அனுபவிக்க வாய்ப்புகள் உண்டு. நாடகக் கலையின் மூலமாக எல்லாவித மனித முயற்சிகளுக்கும் அனுபவ வாய்ப்புகள் நிச்சயமாக உண்டு.'

—எஸ். பி. சீனிவாசன்
(குழந்தைகள் நாடக இயக்கம் என்ற இந்நூலின் முதல் கட்டுரையிலிருந்து)

□ இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி
சுதந்திரத்திற்கு
முன்னும்--பின்னும்
கே. வி. இராமன்

வெளியீடு:
கே. வி. ஆர். நூலகம்,
19-336, சுபேதார் தோட்டம்,
சூளைமேடு, சென்னை-94.
பக்கம்: 40 விலை: ரூ. 2-00

இன்றைக்கு இந்திய மக்கள் 85 கோடி பேர்களில் 40 சதவிகிதத்தினர் வறுமையால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு ஒரு வேளை சோற்றுக்கே வக்கில்லை. வறுமைக்கோடு என்பதற்கு என்ன அர்த்தம் என்பதும் இந்த நாட்டின் சாமான்ய மக்களுக்குப் புரியவில்லை. கையில் காட்சியளிக்கிற திருவோடு தான் புரிகிறது.

இந்திய மக்களின் வயிற்றெரிச்சலைத் தூண்டச் செய்கிற ஒரு விவரம் படித்[தவ]ர்களுக்கு மட்டுமே விளங்குகிறது. இதுவும் சாமான்ய இந்தி[ய ம]க்களுக்கு விளங்கவில்லை. அதாவது, இந்த நாட்டில் தாயின் வ[யி]ற்றிலிருந்து தொப்புள் கொடியுடன் வெளிவருகிற ஒவ்வொரு [கு]ழந்தையும் 6750 ரூபாய் கடனாளியாக வெளிவருகிறது. (ப. 27)

□ **ஆண்மை**
(சிறுகதைகள்)
—எஸ். பொ.

மித்ர வெளியீடு,
375/10, ஆற்காடு சாலை,
சென்னை—24.
விலை: ரூ. 75-00

'ஆண்மை' எனும்போது பெண்ணியவாதிகள் சீறுவதற்கு இடமிருக்கிறது. இச் சூழ்நிலையில், 'ஆண்மை' என்ற தலைப்பில் ஒரு சிறுகதைத் தொகுதியைக் கொண்டு வருவதற்கு அசாத்திய துணிச்சல் வேண்டும்.

கொண்டுவந்திருக்கிறார் எஸ். பொ. இவர் எழுத்தின் முத்திரை, துணிச்சல்.

எழுதத் தொடங்கிய காலத்திலிருந்தே, இவர் எழுத்துப் போராளி. மனிதனுக்காக சித்தாந்தமேயன்றி, சித்தாந்தத்துக்காக மனிதன் என்று சொல்வது மதியீனமென்று போராடியவர். எழுத்தில் தீட்டு, தூய்மை என்று எதுவுமில்லை, சிந்தனையில் நேர்மையும், சொல்லில் கபடமின்மையுமிருந்தால் போதும், அதுவே உன்னத எழுத்து என்று போராடியவர்.

அதனால்தான் 'ஆண்மை' என்றால் பெண்ணியத்துக்கு முரணியதோ என்ற மனச்சலனம் ஏதுமில்லாது, 'ஆண்மை'யின் வெளிப்பாடுகளாகத் தாம் கருதுவனவற்றைச் சிறுகதைகளாக ஆக்கித் தந்திருக்கிறார் எஸ். பொ.

'ஆண்மை' என்பது 'ஆணை'ச் சார்ந்துதான் வழங்கவேண்டுமென்ற அவசியமில்லை. 'ஆள்' என்பது வேர்ச் சொல்லாயின், ஆள்பவர் யார் வேண்டுமானாலுமிருக்கலாம். ஆணாயிருக்கலாம், பெண்ணாகவிருக்கலாம். ஆளும் பண்பே ஆண்மை.

இத்தொகுதியிலுள்ள கதைகளைப் படிக்கும்போதுதான் இக்கருத்து விளங்கும்.

'தேவதைகள் செல்ல அஞ்சும்' இடங்களுக்கெல்லாம் உல்லாச யாத்திரை போக எஸ். பொ. தயங்குவதில்லை. இவர் எழுத்து ஆளுமைக்கு எல்லை, நிலம் கிடையாது. இலக்கியம் எனும்போது படைப்பாளி தளையிட்டுக் கொள்ளக்கூடாது என்பதுதான் இவர் அணுகுமுறை. அவ்வகையில் சமூகத்தில் நாம் காணும் எல்லா விதமான பிரச்னைகளும் இவர் கதைகளுக்குப் பொருளாயிருக்கின்றன. இதைச் சொல்லலாம், இதைச் சொல்லக்கூடாதென்று லட்சுமண ரேகை எதுவும் இவர் எழுத்துப் பயணத்தைத் தடை செய்யவில்லை. இதுவும் இவரை ஒரு சர்ச்சைக்குரிய படைப்பாளியாக இலக்கிய உலகுக்கு அடையாளப்படுத்திக்காட்டுகிறது. தம் எழுத்தின் பேரில் இவருக்கிருக்கும் அளவற்ற தன்னம்பிக்கையே இவர் படைப்பாற்றலின் அடிநாதம். இவர் எழுத்தில் அச்சம் இல்லை, தன்னுணர்வு (Self-Consciousness) இவர் எழுத்துக்கு வேலியிடவில்லை. இதுதான் இவர் இலக்கிய ஆண்மை.

ருமா
— இ[illegible]ளி.
(நூல் 'பா[illegible]'த்திலிருந்து)

□ நீ ஒரு பெண்

(நாவல்)
செ. கணேசலிங்கன்

வெளியீடு:
குமரன் பப்ளிஷர்ஸ்

விற்பனை:
பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை-108
விலை ரூபா : 35-00

உடலின் ஒரு பகுதியே முன்னேறிய பண்டமான மூளை. அதன் பிரதிபலிப்பாகவே அனைத்தையும் காண்கிறோம். தன் உடம்பை பிறருக்காகத் தயார்படுத்தும் பெண்ணினத்தின் ஆழ் மனதை அளக்கும் போது அவர்களது ஆன்மா உடலிலிருந்து அந்நியப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவே கூற நேரிடுகிறது. இவ்வாறு ஆன்மாவை இழக்கும் நிலையும் பெண்ணடிமைத்தனம் நீடிப்பதற்கு ஒரு முக்கிய காரணமாகிறது.

செ. க.

(நாவலின் முன்னுரையிலிருந்து)

□ நாவல்

(படைப்பு வடிவம் பற்றிய சிந்தனைகள்)
—ஜெயமோகன்

வெளியீடு: மடல்
விற்பனை: திலீப்குமார்,
சென்னை-28
விலை ரூபா : 35-00

'நாவல்' வாசிப்பு பெரும் திருப்தியைத் தந்துள்ளது. எல்லைப்புற எழுத்தாளர்கள் (மலையாள - தமிழக எல்லை) படைப்புலகிற்கு மட்டுமல்ல, ஆய்வுலகிற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை நல்குவர் என்பதற்கு இந்நூல் இன்னொரு சான்று.

— செ. யோகராசா
கிழக்கு பல்கலைக்கழகம்,
இலங்கை.

('இலக்கு'வுக்கான கடிதத்தில்)

# இலக்கு நோக்கி..

★ 'இலக்கு' தமிழக ஈழ படைப்பாளி வாசகர்களுக்கு பாலமாக இருக்கிறது வரவேற்கத் தக்கது. தொடர்ந்து தங்கள் பணி சிறக்க வேண்டும்.

—எம். எஸ்தர், திருச்சி.

★ இதழ்களை மிகவும் சிரத்தையுடன் நன்றாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள். என் வாழ்த்துக்கள்.

—நீல பத்மநாபன், திருவனந்த ரம்

★ சிறப்பு மலர் அருமையாக வந்திருக்கிறது. கடிதங்கள்... கவிதைகள்.... கட்டுரைகள்... கதை...நூல் விமர்சனங்கள் என அத்தனையும் இலக்கியச் செறிவுடன் வெளிப்பட்டுள்ளன. வாசகர் கடிதங்கள் இதழைப் படிப்பவர் இலக்கிய ஆர்வத்தை வெளிப்படுத்தும் கண்ணாடியாக அமைகிறது. ஒரு இதழின் வெற்றிக்கான அடையாளமும் அங்கீகாரமும் இக் கடிதங்கள் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

—சாந்தாதத், ஹைதராபாத்.

★ புதிய கண்ணோட்டத்தில் பிரச்னைகளை அணுகும் போக்கு 'இலக்கு' இதழில் கூடிவருவது மகிழ்ச்சிக்குரியது. தங்களுடைய முயற்சி தொடர வாழ்த்துக்கள்.

— சி. ஆர். ரவீந்திரன், கோவை.

★ இடையிடையே தங்கள் ஏட்டை நான் பார்த்துள்ளேன். தமிழ் நோக்கை இழக்காமல் நடத்தப்பெறும் சிற்றேடு என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். என் பாராட்டுக்கள்.

—க. ப. அறவாணன், பாண்டிச்சேரி.

★ 'இலக்கு' முதலாம் ஆண்டு நிறைவு சிறப்புமலர் அருமையான தயாரிப்பு. சிந்தனை கனமுள்ள, பயனுள்ள கட்டுரைகள். ரசிக்கப்பட வேண்டிய நல்ல கவிதைகள். 'நீரில் கரைந்த சீதை' நன்கு எழுதப்பட்ட ரசமான கதை.

—வல்லிக்கண்ணன், சென்னை.

★ சிறந்த படைப்பு வாசகனை வணங்கச் சொல்கிறது. இலக்கிய வாதியும் தான்.

—சு. வேணுகோபால், பி. அரும[illegible]பேட்டை.

★ திரு. கேசவன் எழுதிய 'பாரதியார் வாழ்க்கை வரலாற்று நூல்கள்: ஒரு மதிப்பீடு' படித்தேன். மிக ஆழ்ந்த சிந்தனையோடு வழி காட்டும் பல யோசனைகளோடு எழுதப்பட்ட கட்டுரை. இந்த அணுகுமுறையில் புதிய முயற்சிகள் தேவை. முதலில் பாரதி எழுத்துக்கள் - பாரதி பற்றிய எழுத்துக்கள்-நூல்கள் இன்னும் ஏதாவது இதுவரை கிடைக்காமல் இருக்கின்றனவா என்று தேடவேண்டும். மற்றொன்று, கேசவன் தனது கட்டுரையில் ஆதாரமில்லாத தகவல்களுக்கு உதாரணமாக இரண்டு நிகழ்ச்சிகளைக் காட்டுகிறார் (பக். 59-60, 61). அவற்றுள் ஒன்று பாரதி—நிவேதிதா சந்திப்பு. இந்த இடத்தில்,

1) ஸ்வதேச கீதங்கள் (முதற்பாகம்) 1908

2) ஜன்மபூமி (ஸ்வதேச கீதங்கள் இரண்டாம்பாகம்) 1909

இவை இரண்டுமே சகோதரி நிவேதிதைக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டதும், பாரதி அப்போது எழுதியுள்ளவற்றையும் பார்த்தால், அவர் சகோதரியை சந்தித்ததைப் பற்றி ஐயுற இடமில்லை என்றே தோன்றுகிறது.

பாரதி எழுதியவை:

ஸமர்ப்பணம்

(1) ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டி ஆத்ம நிலை விளக்கிய தொப்ப, எனக்குப் பாரத தேவியின் ஸம்பூர்ண ரூபத்தைக் காட்டி, ஸ்வதேச பக்தியுபதேசம் புரிந்தருளிய குருவின் சரண கமலங்களில் இச்சிறு நூலை ஸமர்ப்பிக்கின்றேன்.

(2) எனக்கு ஒரு கடிகையிலே மாதாவினது மெய்த் தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும் சொல்லாமலுணர்த்திய குரு மணியும், பகவான் விவேகானந்தருடைய தர்மபுத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு இந்நூலை ஸமர்ப்பிக்கின்றேன்.

பக்கம் 59-ல் "இவற்றை எழுதியவர் பாரதியா என்பதற்கு ஆதாரம் இல்லை" என்று கேசவன் எப்படி எழுதினார் என்பது புரியவில்லை. ஸ்வதேச கீதங்கள் (முதற் பாகம்) 1908, ஜன்மபூமி-1909 இரண்டு பதிப்புகளும் இப்போதும் இருக்கின்றன. பாரதியாரே 'எழுதி வெளியிட்ட' என்று கூறும் கேசவன், ஸமர்ப்பணம் மட்டும் வேறொருவர் எழுதியிருப்பார் என்று எப்படி நினைக்க முடியும்?

இது என்னுடைய கருத்து.
மு. ஸ்ரீனிவாசன், சென்னை.

★ ஆக்கபூர்வமாக நன்கு செயற்பட்டு வருகிறீர்கள். மிக்க தரமான பணி. என் பாராட்டுக்கள்.

—டாக்டர் சு. வேங்கடராமன், மதுரை.

★ தங்கள் இதழின் வட்டங்கள் விரிய வேண்டும் என்பது வாசகன் என்ற முறையில் என் அவா. தமிழ் சிற்றிதழ்களில் நான் நிரம்ப எதிர்பார்ப்பது 1) தமிழ்ப் படைப்பாளிகளைப் பற்றி ஒட்டுமொத்தமாக கணித்து எழுதும் கட்டுரைகள். டானியல் போல ஒரு மோஸ்தர் ஆகிவிட்டவர்களைப் பற்றி அதிகமாக எழுதப்படும்போது, பல முக்கியமான படைப்பாளிகள் பற்றி ஒரு கட்டுரைகூட வந்தது இல்லை. 2) எப்படி கூர்ந்து வாசிப்பது என்பது தமிழ் வாசகர்களுக்கு இன்னும் தெரியவில்லை. படைப்பை பல கோணங்களில் கூர்ந்து வாசிக்கும் சிறு கட்டுரைகள். 3) இலக்கிய உலகைப் பாதிக்கும் வரலாறு, தத்துவம் சார்ந்த விஷயங்கள்.

—ஜெயமோகன், தர்மபுரி.


# இலக்கு

காலாண்டிதழ்

இலக்கிய விமர்சன படைப்பிலக்கியத்துக்கான வெளியீடு

ஆண்டு சந்தா உள்நாடு ரூபா 30-00

வெளிநாடு UK £ 5-00

Cheque/DD in favour of
DEVI PRASURALAYAM Please.

முகவரி

இலக்கு
2/158, மூவரசம் பட்டு
மெயின் ரோடு,
சென்னை—600 091

★ தமிழ்ச் சூழலோடு மலையாக இலக்கியச் சூழல் ... மலேசிய இலக்கியச் சூழல் பற்றி கட்டுரை தந்து வாசகரை கிணற்றுத் தவளை நிலை மாற்றப் பிரயத்தனப்படும் 'இலக்கு'வின் பணி போற்றுதற்குரியது.

—பாட்டாளி, திருச்சி.

★ திரு. கோ. கேசவன் அவர்கள் பாரதியார் வாழ்க்கை வரலாறு பற்றிய நூல்களைப் பொறுப்புடனும் உழைப்புடனும் மதிப்பீடு செய்துள்ளார். காலத்தை விஞ்சிய இம் மாகவிஞனின் ஊற்றுக் கண்களை அறிவதும் ஆராய்வதும் நமக்கு நன்மை விளைக்கும். வெறும் துதிபாடிப் பயனில்லை,

—சு. கணபதி, சென்னை.

★ எந்த ஓர் எழுத்தும் படிக்கச் சுவையுள்ளதாக இருக்க வேண்டும். அதனாலேயே எழுத்தில் சிறிது பாசாங்கு தேவை என்கிறார் பேரெழுத்தாளர் வண்ணநிலவன். அத்தகைய கலைப் பாசாங்கு இல்லாததாலேயே மாமல்லன் போன்ற எழுத்தாளர்களின் எழுத்துக்கள் செய்தி/விவரணக கூற்றுகளாக அமைந்துள்ளன என்று கருத வேண்டியதிருக்கிறது. மேலும் 'அறியாத முகங்கள்' விமாலாதித்த மாமல்லனின் முதல் நூல் அன்று, ஏற்கனவே அவருடைய 'முடவன் வளர்த்த வெள்ளைப் புறாக்கள் மற்றும் பிற கதைகள்' (1985) என்னும் நூல் வெளிவந்திருக்கிறது.

—பா. அமிழ்தன், கள்ளிக்குளம்.

★ பாராட்டுதற்குரிய வகையில் 'இலக்கு' வடிவெடுத்து வருகிறது. படித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

—நெல்லை க. சுப்பிரமணியன்

★ 'இலக்கு' பற்றிய தங்கள் அனைத்து முயற்சிகளும் வெற்றிகளால் கனிய மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

—சூரியகாந்தன், கோவை.

★ தங்கள் சிறுகதை 'நீரில் கரைந்த சீதை' பற்றி. என்னளவில் சீதை கரையவில்லை. பலரோடும் தொடர்பு கொண்டு சீரழியாமல் ஒருவரோடு தன்னைப் பகிர்ந்து கொண்டதில் எந்தத் தப்பும் இல்லை.

—பொள்ளாச்சி நசன்

★ எனது 'செக்கு மாடு' குறுநாவல் புலம்பெயர்ந்த தமிழர் நல மாநாட்டு சிறப்பு மலரில் மட்டுமே முழுமையாக வெளியிடப்பட்டுள்ளது. 'பனியும் பனையும்'ல் முழுமையற்ற வடிவமே வெளிவந்துள்ளது. எனது கதையை வாசிக்க விரும்புவோர் பு. பெ. த. மாநாட்டு மலரில் அதை வாசிக்க வேண்டும் என விரும்புகிறேன்.

—வ. ஐ. ச. ஜெயபாலன், கொழும்பு-6.

# மறுபக்கம்-1

O

தேவகாந்தன்

தலைக்குள் அவளுக்கு வெள்ளிகள் வெடித்துச் சிதறின.

அவனுக்கோ, மயிர்த் தூவிகளைப் பிய்த்துவிடுமாப்போல் பிரவாஹித்த உணர்ச்சி வெள்ளம், எங்கோ ஒரு மையத்தில் முட்டி மோதி, விதைத் துளிகளை விசிறச் செய்தது.

உச்சஸ்தானத்திலிருந்து மெல்ல மெல்ல அவள் இறங்கி வந்து கொண்டிருந்தாள்.

அவளைவிடவும் சற்றுக் தூரம் முன்னர் இறங்கி விட்டான் அவன். பின்னர் அவளிலிருந்தும்.

அந்த அறையிருட்டுள் இன்னும் மின்னும் அவள் ஏரார்ந்த அழகையெல்லாம் ரசித்த அவனிடமிருந்து திருப்தியாக, சற்று ஆயாசத்துடனும், பெருமூச் சொன்று புறப்படுகிறது. தன் முப்பத்தைந்து வருஷ பிராயத்தில் முன்பின் அனுபவித்திராத அந்தச் சுகத்தின் பின்னால், ஏற்கனவே இல்வாழ்வின் சுகமுற்றிருந்தும் துவளாத அவள் ஆகிருதியும், லீலா ஞானங்களும் எண்ண, அவை அன்றுபோலவே முன்பும்முன்பும்பிரேமிக்கப்பட்டவைதானே என்கிற நிஜம் அவனில் ஒரு தவனமாய்ப் பரிணமிக்கிறது. தவனத்துடன் ஓர் உத்வேகமும்.

அவளைத் தழுவியிருந்தபடியே ''பிரியா.... ஓ... என் பிரியா... அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி நாம சந்திக்காமப் போனோமே! எனக்கு மட்டும் நீயின்னு ஆகியிருக்குமே!'' என அவன மிழற்றினான்.

அவனுக்கு அவளது வாழ்க்கை பற்றி எல்லாம் தெரியும். அவளே சொல்லியிருக்கிறாள். அது போலத்தான் அவனும் அவளுக்கு தன் கதைபற்றி.

அவளுக்கும் பாதிக் கிறக்கம். அந்த அழகை, தான் மட்டுமே அடைய முடியாமற்போனதில் அவன் மெல்லக் காட்டிய வருத்தத்தில், தன் மீதான அவனது அன்புக் கனதியும் தன் அழகின் மீதான மோகமும் அறிந்து மேலும் சற்றுக் கிறங்கினாள் அவள். ஆனால், உள்ளார எழுந்த ஒரு கேள்வியில், அவளுள் அவன பற்றி எழுந்திருந்த உன்னதங்களெல்லாம் சடசடவெனச் சரிந்தன. கூடவே அவள் கனவுகளும்.

அதுவரை புருஷோத்தமனாய் இருந்தவன் உத்தமம் இழந்து. பின் புருஷத்துவமும் இழந்து ஒரு புழுவாய் அருவருப்பானான்.

'ஏன், ஏன், ஏன்?

'அந்த மாதிரி ஒரு எண்ணம் ஏன் தோணணும்?

'கணவன் - மனைவி உறவில்லாமல், அதுமாதிரி ஆகப்போறோங்கற உரிமையில ஒரு ஆணாயும் ஒரு பெண்ணாயும் மட்டும நாம அனுபவிச்ச இந்தச் சுகம், அஞ்சு வருஷத்துக்கு முந்தி என்னைச் சந்திச்சிருந்தா வித்தியாசமாவா கிடைச்சிருக்கப் போகுது? அஞ்சு வருஷத்துக்கு முந்தின வேறொருவருடனான என் கல்யாணமும், அவரோடான ரெண்டு வருஷ தாம்பத்ய

வாழ்க்கையும் அவர் இல்லாமப் போய் மூணு வருஷத்துக்குப் பின்னாடி ஏற்பட்டிருக்கிற இந்த உறவை, இந்தச் சுகத்தை எந்த வகையில பாதிச்சிருக்க முடியும்? இந்த வருஷங்கள், வயசு தவிர்ந்த வேற என்ன மாற்றத்தை என்னில் ஏற்படுத்தியிருக்கக்கூடும்?

'ஆனால், இந்த மனுஷருக்கு எதையோ இழந்த சோகம் இருக்கு. இவரின் பிதற்றல் போகாலாபனை மட்டுமில்லை, இழப்பின் ஏக்கமும் கொண்டது தான்.

'நாம திட்டமிட்டபடி வர்ற தையில கல்யாணம் செய்ஞ்சதுக்கப்புறமும ஓ.... பிரியா....உன்னை அஞ்சு வருஷத்துக்கு முந்தி சந்திக்க முடியமப் போச்சேன்னு இவர் சொன்னா, அப ஒரு மனைவியா நான் அசிங்கப்படுத்தப்படுறேனா, இல்லையா?

'என்னை, தாம்பத்திய சுகம் அடைஞ்சிராத, வாழ்க்கை அனுபவமேதும் பெற்றிராத ஒருத்தியாவே அடைஞ்சிருக்கணும்னு நினைக்கிறது இவரோட ஆம்பிளைத் தனம் — ஆணாதிக்கத் தனம். இவரை எப்படி இவராக மட்டுமே நான்ஏத்துக்கிறேனோ, அதுபோல இவரும் என்னை ஏத்துக்கணும். இதில வருத்தப்படுறதுக்கு எதுவும் இருக்கக்கூடாது. அப்படி எதுவும் இல்லேங்கிற புரிதல் இங்க அவசியம்.

'ஏற்படப்போற இந்த உறவில நாம இரக்கப்படவோ வருத்தப்படவோ எதுவுமே இல்லேங்கிற ஒரு தளத்தில நின்ன பிறகுதான். நம்ம கல்யாணம் தீர்மானமாகணும்னு முன்னாடியே இவர் கிட்ட நான் சொல்லியிருக்கேன். எப்ப இவருக்கு இரக்கப்படும்படி ஒரு கோணம் என்கிட்டேல இருக்கு


## சென்னையில் 'இலக்கு' கிடைக்குமிடங்கள்

**முன்றில்**
சாந்தி காம்ப்ளெக்ஸ்
ரங்கநாதன் தெரு,
தி. நகர், சென்னை-17.

★

**திலீப் குமார்**
25, ட்ரஸ்ட் கிராஸ்
3 வது தெரு,
மந்தைவெளி, சென்னை-28.

★

**சவுத் ஏசியன் புக்ஸ்**
6, 2வது தாயார்சாகிப் தெரு
சென்னை-2.

★

**இளம்பிறை பதிப்பகம்**
375/8, ஆற்காடு சாலை,
சென்னை-24.

★

**அழகியசிங்கர்**
7, ராகவன் காலனி,
மே. மாம்பலம்,
சென்னை-33.

★

**கீழைக் காற்று**
ஔலியா தெரு,
எல்லீஸ் சாலை,
சென்னை-2.

துன்னு ஆகுதோ, இனி நமக்குள்ள அந்த உறவு சாத்தியமில்லே, ஏன்னா, அர்த்தமில்லே.

'என்னை இழந்து ஒரு ஐக்கியமில்லே. நான் நானாகவும், இவர் இவராகவுமான ஒரு ஐக்கியம்தான் கல்யாணம். அது இல்லேன்னா, கல்யாணம் எதுக்கு?

'இந்த ரெண்டு மாசமா நமக்குள்ள ஏற்பட்டிருக்கிற இந்தத் தொடர்பில், எனக்கு எதுவுமில்லேனு ஆகிடல. இவருக்கு இவர் வரைக்கும் எவ்வளவு இழப்பா இருக்குமோ, அந்தளவுக்கு என் வரையிலும் அது இழப்பாத்தான் இருக்கும். ஆனா, அதைச் சந்தோஷமாக ஏத்துக்க நான் தயார், மிஸ்டர். என் சுதந்திரத்துக்கான, மனிதத்துவத்துக்கான விலையா அது இருக்கட்டும்!'

இரு மேனிகளுக்கிடையிலும் ஊறி கலந்து கிடந்த ஈரம் காய்ந்து போயிருந்ததில், அவன் விலகி வெகு நேரம் என்பது தெரிந்து நைட்டியை எடுத்து அணிந்தாள் அவள்.

அவன் பாத்ரூமிலிருந்து வந்து உடையணிந்தான்.

சிறிது நேரத்தில் அவனே லைட்டைப் போட்டான். சீப்பை எடுத்து தலை வாரினான். பேக்கை எடுத்தான்.

அவள் வெளியே வந்து ஹால் சோபாவில் அமர்ந்தாள்.

அவன் வாசல் கதவை நோக்கி நடந்தான். மெல்லத் திறந்து வெளியேறி நின்று திரும்பிப் பார்த்தான்.

'அழகான புழு!' அவள் நினைத்தாள்.


வெளிவந்து விட்டது!

**தேவகாந்தன்'ன்**

**நெருப்பு**

(சிறுகதைகள்)

**விலை: ரூ. 30-00**

விற்பனை :

**பாரி நிலையம்**

183, பிராட்வே,

சென்னை—103.


வழக்கம் போல் கூடவே சென்று கேட் வரையுள்ள நடைபாதை நிழலில் அந்தக் கூடலின் திருப்தியது சாட்சியாய், அந்த உறவின் அவசியத்தை உறுதிப்படுத்துவதாய், அடுத்த சந்திப்பின் அன்றைக்கான அச்சாரமாய் ஆலிங்கனங்கள் கொஞ்சுதல்கள் செய்பவள், இருந்த இடத்தை விட்டு எழும்பவில்லை யென்பது தெரிந்தது.

''பிரியா....!''

''சரீ, போயிட்டு வாங்க.''

'இவள் எங்கோ உடைந்து போயிருக்கிறாள். எங்கே?'

யோசித்த வேளையில் தான் அந்த ஐந்து வருஷம் பற்றிப் பிரஸ்தாபித்து- பிதற்றி-இருக்கக் கூடாதென்பது தெரிந்தது. அது வார்த்தையல்ல, ஆயுதம்.

'ஓ.... நான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது தான். இட் இஸ் டு லேட் டு றியலைஸ் ஆர் டு பி சாரி.'

அவன் நடந்தான்.

சிறிது நேரத்தில் அவள் எழுந்து சென்று வாசல் கதவை ஓங்கிச் சாத்தினாள்.

ooo

# உரத்த கேள்விகள் உறைத்த பதில்கள்

கே : விபசாரிக்கு ஆண்பால் என்ன தலைவா?

ப : விபவேஷ்டி !

ஆ. வி.: ஹாய் மதன் 10-12-95

கே : 'அமைச்சர் பதவி போய்விட்டால் ஜெயலலிதா வீட்டு வாசலை கூட்டுவோம்' என்று அமைச்சர் லாரன்ஸ் பேசியுள்ளது பற்றி?

ப : சொன்னதை நிறைவேற்றும் காலம் நெருங்குகிறது. மக்களுக்கு அளிக்கப்படும் இந்த வாக்குறுதியையாவது நிறைவேற்று கிறார்களா பார்ப்போம்.

கல்கி—தராசு பதில்கள்

கே : பஞ்சாயத்து தேர்தல் அவ்வளவுதானா?

ப : அப்படியெல்லாம் சொல்லாதீர். 21ம் நூற்றாண்டு எதற்கு இருக்கிறது!

ராணி: அல்லி பதில்கள் 7-1-96

கே : தமிழகத்தில் நடைபெறும் குண்டுவெடிப்புகளுக்கு மூலக் காரணம்...?

ப : குண்டுதான்.

ஆ. வி.: ஹாய் மதன் 27-5-95

கே : நீங்கள் 'பலதாரக்' கொள்கையை ஆதரிப்பவரா?

ப : ஆமாம். முதல் தாரம் தவிர, வேறு இரண்டு தாரமும் வேண்டும். 1. பொருளாதாரம் 2. சுகாதாரம்

இதயம்: சிண்டுல்ஜி பதில்கள் 6-8-95

கே : நல்லவர்கள் எல்லாம் அரசியலுக்கு வர வேண்டும் என்கிறீர் களே! நீங்கள் அரசியலில் நுழைந்தால் நானும் ரெடி. உங்கள் பதில் என்ன?

ப : நான் சொன்னது நல்லவர்களைப்பற்றி. உங்களையும் என்னை யும்பற்றி அல்ல.

கே : உங்களை தனது நல்ல நண்பர் என்றும், சிறந்த அறிவாளி என்றும் ரஜினி கூறியுள்ளாரே! இதில் எது சரி?

ப : நல்ல நண்பர் என்பதுதான் சரி, அதனால்தான் அறிவாளி என்று சொல்லியிருக்கிறார்.

கே : ராமனுக்கு ஹனுமான் எப்படி உதவியாக இருந்தாரோ, அப்படி கட்சித் தலைவிக்கு மகளிர் அணி வானரப் படையாக இருக்க வேண்டும் என்று இந்திரகுமாரி கூறியுள்ளது பற்றி...?

ப : ஆளுங்கட்சியில் மகளிர் அணி வானரப்படை அல்ல என்று யாரும் சொல்லமாட்டார்கள், இந்திரகுமாரி பேச்சு சர்ச்சைக்குரியது அல்ல. துக்ளக்: சோ பதில்கள் 14-1-96

கே : 'அன்னை தெரசா போல் பொதுநலச் சேவை செய்யப் போகிறேன்' என்கிறாரே சில்க் ஸ்மிதா...?

ப : கவர்ச்சி நடிகைகள் பொதுநலச் சேவை செய்யக்கூடாதா என்ன...! கவர்ச்சியே பொதுச் சேவைதான் என்று சொல்லாத வரைக்கும் சரிதான். கல்கி: தராசு பதில்கள் 14-1-96

கே : கவிஞர்களுக்குக் கவிதைகள் எழுத பெரிதும் உறுதுணையாக இருப்பது காதலா, வறுமையா?

ப : வாழ்வின்மீது காதல் இல்லாதவர்களாலும் மனதில் வறுமை இருப்பவர்களாலும் ஒருபோதும் கவிதை எழுத முடியாது.
குமுதம். அரசு பதில்கள் 23-11-95

கே : மரியாதை - முகஸ்துதி என்ன வித்தியாசம்?

ப : நாம ஒருத்தரு மேல் வச்சிருக்கிற அபிமானத்தை உள்ளுக் குள்ளே மென்னு முழுங்கினா அதுக்குப் பேரு மரியாதை! அதையே அவரு மூஞ்சில காரித்துப்பினா அது முகஸ்துதி.
குங்குமம் : பார்த்திபன் பதில்கள்

கே : நீங்கள் ஓர் இதழ் ஆரம்பித்தால் என்ன?

ப : எனக்குப் பிடிக்காதவர்களிடம், நான்கூட இப்படி ஆலோசனை செய்வது வழக்கம்.

கே : அடிக்கடி குணங்களை மாற்றிக் கொண்டு வாழ்கிற சில 'ஓணான் மனிதர்'களைப் பற்றி..!

ப : நாய் வாலைஆட்டிப் பிழைக்கிறது! மனிதன் தலையை ஆட்டிப் பிழைக்கிறான்! மஞ்சரி: தென்கச்சி பதில்கள் செப். 1995

கே : ''இலக்கியம் என்றாலே முற்போக்குத்தான், அதில் பிற்போக்கெல்லாம் இல்லை'' என்று ஜெயகாந்தன் கூறியுள்ளதுபற்றி?

ப : பெரும்போக்கான மனதோடு கூறுகிற வார்த்தைகள் இல்லை. இலக்கியம் என்றாலே அது நல்லதாகத்தான் இருக்க வேண்டும் என்கிற அவரது ஆசையின் வெளிப்பாடு இது. மனிதன் என்றால் மனிதன்தான். அதில் நல்லவன் கெட்டவன் என்று பேதம் பிரிக்க முடியுமா என்று கேட்டால் எப்படியோ, அப்படித் தான் இதுவும். ஜெயகாந்தன் எழுதிய அனைத்தும் இலக்கியமே, எவரும் மறுக்க முடியாது. ஆனால், அவற்றுக்குள் முற்போக்கு, பிற்போக்கு என்று தரம் பிரிக்க முடியும். ஒரு மைனர் பேர்வழியால் கெடுக்கப்பட்ட அப்பாவிப் பெண்ணை சத்தம் போடாமல் ஏற்றுக்கொண்ட தாயை முன்னிறுத்தும் 'அக்கினிப் பிரவேசம்' என்கிற படைப்புக்கும், ஏ[illegible]னவே இரண்டு

மனைவிகள் இருக்க மூன்றாவதாக ஓர் இளம் பெண்ணை 'காதலிக்கத்' துவங்கும் கோடீஸ்வரருக்காக வரிந்து கட்டிக் கொண்டு வாதாடும் 'சமூகம் என்பது நாலுபேர்' என்கிற கதைக்கும் வேறுபாடு உண்டல்லவா.

செம்மலர்: இளமதி பதில்கள் அக். 95

கே : முத்தம் கசக்குமாமே... உண்மையா...?

ப : சேச்சே! அந்தச் சில நிமிடங்கள் மட்டும் உதடுகள் லேசாகக் கசங்கும். அவ்வளவே! ஆ. வி.: ஹாய் மதன் 29-10-95

கே : எந்தப் பட்டம் பெற்றாலும் உடனே வேலை கிடைப்பதில்லையே...?

ப : இதோ ஒரு படிப்பு வந்துவிட்டது...படித்த உடன் வேலையும் கிடைத்துவிடும்...அது மரம் ஏறும் படிப்பு! ஆம்...இதற்கென கேரளாவில் 'செல்ப் பைனான்ஸ்டு காலேஜ்' ஒன்றை ஆரம்பித்து இருக்கிறார் ராமதாஸ் வைத்தியர் என்பவர். இவர் ஒரு ஆயுர் வேத டாக்டர். இந்தக் கல்லூரியில் இடமில்லே இப்போ... 209 பேர் 'வெயிட்டிங்' லிட்ஸ்டில் உள்ளனர்.

தினமலர்: அந்துமணி பதில் 8-10-95

கே : ஆப்ரேஷன் தியேட்டர்—சினிமா தியேட்டர், ஒப்பிடுக?

ப : ஆரம்பத்தில் மயக்க முயற்சிப்பார்கள். ஆனால் அறுவை நிச்சயம். இரண்டு இடத்திலிருந்தும் வெளியே வந்தபின், அப்பா, தப்பித்தோம் என்று விடுகிற நிம்மதிப் பெருமூச்சு இருக்கிறதே, அதற்கு இணையே இல்லை.

கே ; ரஜினி - காமராஜர் ஒப்பிட முடியுமா?

ப ; ஆகட்டும் பார்க்கலாம். குமுதம்; அரசு பதில்கள்

கே : ஒரு பெண்டாட்டிக்கு ஆறு முறை முத்தங்களும் மூன்று முறை கட்டில் சுகமும் கொடுத்தால்தான் பெண்டாட்டி புருசன் காலைக் கட்டிக் கிடப்பாள் என்று வைரமுத்து கூறுகிறாரே?

ப : அவர் இப்போது வைரமுத்து இல்லை. வாத்சாயன முத்து, இதற்குமேல் சொன்னால் நடப்பதே வேறு.

குமுதம்: அரசு பதில்கள் 30-11-95

கே : காதலில் தோல்வியுற்றால் தற்கொலை செய்து கொள்ள வேண்டுமா?

ப : முட்டாள்கள் வாழ்ந்து தான் என்ன சாதிக்கப் போகிறார்கள்!

கே : உ.பி.யில் மாயாவதி கவிழ்ந்து விட்டாரே ?

ப : நல்லவேளை, கொஞ்சம் முன்பு கவிழ்ந்தார்! இப்போது கவிழ்ந்திருந்தால் சூரிய கிரகணத்தின் விளைவுதான் ! என்று நம்ம ஊர்ப் பண்டிதர்கள் துள்ளிக் குதிப்பார்கள் !!

கே : தமிழன் என்றைக்குத் தலை நிமிர்வான்?

ப : புலிகள் வெற்றி பெறும்பொழுது!

ராணி : அல்லி பதில்கள் 5-11-95

கே : எட்டு வருட பத்திரிகை துறையில் என்ன சாதித்துவிட்டீர்கள்?

ப : வேலாயுதம்பாளையம் கோபாலகிருஷ்ணனையெல்லம் தெரிஞ்சு வச்சிருக்கேன் பாருங்களேன்.

பாக்யா : பாக்கியராஜ் பதில்கள் 3-9-95

கே : கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போனதுண்டா?

ப : உண்டே, மூக்கு!

குமுதம் : அரசு பதில்கள் 7-12-85

## பகுதி - 2

கே : (யோகானந்தா) தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவோ அல்லது ஒரு குழந்தையைக் காப்பாற்றவோகூட ஒரு பாம்பைக் கொல்லக்கூடாதா?

ப : (காந்திஜி) பயமின்மை, அகிம்சை ஆகிய என் சத்தியப் பிரமாணங்களை மீறி நான் ஒரு பாம்பைக்கூட கொல்லலாகாது தான். மாறாக மனத்துள் ஸ்மரித்து அன்பு அலைகளை வீசி பாம்பை சாந்தப்படுத்த விழைவேன். சூழ்நிலைக்கேற்ப என் தரத்தைத் தாழ்த்திக்கொள்வது தகாது, இல்லையா? ஆனால் ஒன்றை மட்டும் உங்களிடம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும், இப்போது இங்கு நிஜமாகவே ஒரு பாம்பு தென்பட்டால் முன்னால் இப்படி வீறாப்பாகப் பேசிக்கொண்டு நிற்கஇயலாது.

(சுவாமி யோகானந்தாவின் 'ஒரு யோகியின் சுயசரிதை'யில்)

நன்றி : கணையாழி, அக். 95

கே : (நிருபர்) கலவரம் நிறைந்த பிரதேசத்தில் (நவகாளி யாத்திரையின் போது) உள்ள கிராமத்தில் தன்னந்தனியாக வசிக்கப் போவதாகச் சொல்கிறீர்களே, குண்டர்கள் நிரம்பியஇடமாச்சே?

ப : (காந்திஜி) நான் யாரையும் 'குண்டன்' என்று கருதுவதில்லை. நாம் எல்லோரும் குண்டர்கள்தாம். சிலரிடம் சிறிய அளவில் குண்டாத்தனம் உள்ளது; சிலர் பெரிய அளவு குண்டர்கள். தவிர, குண்டர்களை உருவாக்குவதும் நாம்தானே? நம்முள் சிலரின் அனுதாபமும் மறைமுக உதவியுமின்றி எந்தக் குண்டனும் காலூன்ற முடியாது.

(இந்துஸ்தான் ஸ்டாண்டர்டு 22-11-46)

நன்றி : கணையாழி, அக்.95

அச்சாக்கம் : K. K. S. பிரிண்டர்ஸ்
29, பாரதீஸ்வரர் காலனி 4-வது தெரு,
சென்னை - 600 024.

# தி. ஜா. வுக்காக ஒரு கதை

எம். வி. வெங்கட்ராம்

திசைகள் எல்லாம் இருளடைந்து, போக்குவரத்துப் பாதைகள் யாவும் அடைப்பட்டுவிட்டால், இரவில் பயணம் செய்யும் பாதசாரிக்கு எப்படி இருக்கும்? அம்மாதிரி ஒரு சூழ்நிலையில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நான் சிக்கியிருந்தேன். செல்வமும், செல்வாக்கும் ஒரு வார்த்தைகூட சொல்லிக்கொள்ளாமல் என்னை விட்டுக் கழன்று ஓடின; உடனே, உறவும் நட்பும் என்னிடம் முறைத்துக் கொண்டன. இது அதிசயமான செய்தி அல்ல; உலகம் தோன்றியது முதல் நடந்துவரும் சங்கதிதானே? ஆனால், என்னுடைய துன்பத்துக்கு விந்தையான ஒரு புதிய பரிமாணம் ஏற்பட்டது.

முருகன் என்னும் தெய்வத்தைக் குருவாக வரித்து, அவரைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்று எனக்குத் தெரிந்த வழிகளில் முயற்சி செய்துகொண்டிருந்தேன். அதனால் அவர் மகிழ்ச்சியுற்று, ஒரு கோஷ்டி பூதகணங்களை அனுப்பிவிட்டார் போல் இருக்கிறது. அவை என்னுடைய மூளையின் மரைகளை ஒவ்வொன்றாய்க் கழற்றத் தொடங்கிவிட்டன போலும்; வேறு யாருக்கும் கேளாத ஒலிகளை நான் கேட்க ஆரம்பித்தேன். வேறு யாராலும் கற்பனை செய்ய முடியாத காட்சிகள் எனக்குத் தெரிந்தன. எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, பிடிக்கிறதா, பிடிக்கப்போகிறதா என்று என்னாலேயே நிர்ணயிக்க முடியாத நிலைமை. ஆக, வறுமை காலைக் கவ்விக்கொண்டிருந்த அதே நேரத்தில் என் தலையை யாரோ திருகிக்கொண்டிருந்தார்கள்.

எனக்குப் பெரிய குடும்பம். உள்ளூரில் பிழைக்க முடியாது என்றாகிவிட்டது. மூலையில் முடங்கிக் கிடந்த என்னிடம் 'மதராஸ் போய்ப் பாருங்கள்' என்று மனைவி கெஞ்சிக்கொண்டிருந்தாள், மதராஸ் போனால், கதை எழுதியோ, வேலையில் அமர்ந்தோ குடும்பத்தைக் காப்பாற்றிவிடுவேன் என்று அவளுக்கு ஒரு நம்பிக்கை. அந்த நம்பிக்கை எனக்கு இல்லை; ஏனெனில், எனக்கு என்மீதே நம்பிக்கை இல்லை. சென்னைக்குப் போனால் எங்கே தங்குவது என்பதும் எனக்குப் பிரச்சினை. அதுவரையிலும் நான் எந்த நண்பரையும் நாடிப்போனதில்லை; ஏதாவது ஜோலியாக சென்னைக்குப் போனால் ஹோட்டலில் தங்கித் திரும்பிவிடுவேன். இப்போது நிலைமை மாறிவிட்டது. நான் என்னைத் தொலைத்துவிட்டேன் என்ற அவலட்சணக் களை என் முகத்தில் ஏறி உட்கார்ந்திருந்தது;

என் கண்ணாடியே எனக்கு அதைச் சொல்லியது. என்னைப் புரிந்து கொண்டு உதவி புரிய யாரால் முடியும்?

ஜானகிராமனின் ஞாபகம்தான் எனக்கு வந்தது. மயிலாப்பூரில் இருந்த அவருக்கு எழுதினேன். உடனே வருமாறு மறுதபாலில் பதில் வந்தது. மூட்டை கட்டிக்கொண்டு புறப்பட்டேன்.

ஜானகிராமன் வழக்கமான அன்போடு என்னை வரவேற்ற போது எனக்குக் கொஞ்சம் தெம்பு வந்தது. என் தோற்றத்தைக் கண்டதுமே நான் கண்காணிப்பில் இருக்கவேண்டியவன், சுயேச்சை யாக நடமாடத் தகுதி இல்லாதவன் என்பதை அவர் புரிந்துகொண் டார். மாடியில் அவர் படிப்பதற்கும், ஓய்வு எடுத்துக்கொள்வதற்கும் பயன்பட்ட அறையை என்னிடம் ஒப்படைத்தார். அங்கே ஒரு சிறிய லைப்ரரி இருந்தது

மாடியில் தனிமைப்பட்டு அமர்ந்ததும் ''என்ன நேர்ந்தது? ஏன் இப்படி ஆகிவிட்டீர்கள்?'' என்று கவலையோடு கேட்டார். என் கதை முழுவதும் சொன்னேன். ஆன்மீக முயற்சியில் எனக்கு அதிபயங்கரமான அயிட்டங்களைக் கேட்டு அவர் அஞ்சிவிடுவார் என்று எதிர்பார்த்தேன். மாறாக அவருக்கு என்னிடம் இருந்த அக்கறை அதிகமாயிற்று.

''உங்களுக்கு இத்தனை தெய்வ பக்தி இருப்பது எனக்குத் தெரியவில்லையே?''

''தெய்வத்துக்கு என்மேல் பக்தி இருப்பது போல் என் கதை இருக்கிறதே?''

''நீங்கள் இங்கேயே இருங்கள். நான் ரேடியோ ஸ்டேஷனுக் குப் போய் மாலையில் திரும்புவேன். ஏதாவது படித்துக்கொண்டு இருங்கள். கொஞ்ச நாள் ரெஸ்ட் எடுத்துக்கொள்ளுங்கள்; அப்புறம் என்ன செய்வது என்று யோசிப்போம். தனியாக வெளியில் போக வேண்டாம்; மாலையில் இரண்டு பேரும் சேர்ந்து போவோம்'' என்று பல தடவை எச்சரித்துவிட்டு அவர் ஆபீசுக்குப் புறப்பட்டார்.

எனக்கு நான் காணாமல்போனவன்; என்னைத் தேடி என்னிடம் ஒப்படைத்ததற்காக அவர் மேற்கொண்ட முயற்சி மிகவும் சுவாரசிய மானது.

❋ ❋ ❋

நாங்கள் இருவரும் கல்லூரி நண்பர்கள். 1936—37லிருந்து கும்பகோணம் அரசினர் கல்லூரியில் சக மாணவர்கள். முதல் ஆண்டிலேயே என் கதைகள் மணிக்கொடியில் வெளிவரத் தொடங்கி நான் எழுத்தாளன் ஆகிவிட்டேன். என் கதை வெளி வந்ததும் கல்லூரியில் என்னை மிகவும் சங்கோசத்துடன் அணுகிப் பாராட்டு வார். அவரைவிட அதி சங்கோசப்பட்டபடி அவருக்குப் பதில் கூறு வேன். இப்படி ஆரம்பித்தது எங்கள் தொடர்பு, நான் எழுதுவதைப் பார்க்க அவர் எங்கள் வீட்டிற்கு வருவதும், நான் அவர் இருப்பிடம் செல்வதுமாக எங்கள் நெருக்கம் அதிகரித்தது. அவருக்கு அப்போதே எழுத வேண்டும் என்ற ஆவல்; இரண்டொரு கதைகளை எழுதி என்னிடம் காட்டினார். எனக்குத் தோன்றிய குறைகளைச் சுட்டிக் காட்டியதும், அவர் அவற்றை பத்திரிகை எதற்கும் அனுப்பாமல் இருந்துவிட்டார்.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் அவரைப் போல் எனக்குக் கட்டுக் கோப்பான வாழ்க்கை அமையவில்லை. அவர் அய்யம்பேட்டையில் பள்ளி ஆசிரியரானார். நான் மிலிடரி அக்கவுண்ட்சில் சேர புனாவுக்குப் போய்விட்டேன். அங்கே இருப்புக்கொள்ளாமல் 1943இல் நான் திரும்பியபோது கும்பகோணம் ஓர் இலக்கிய க்ஷேத்திரமாகி இருந்தது. துறையூரிலிருந்து வெளிவந்த "கிராம ஊழியன்" ஆசிரியரான கு. ப. ரா. கும்பகோணத்தில் இருந்தார். அவரைச் சுற்றிலும் ஜானகிராமன், கரிச்சான்குஞ்சு, சாலிவாகனன், திருலோக சீதாராம், இன்னும் பல எழுத்தாளர்கள். என்னுடைய வருகையால் கு.ப.ரா. மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். தமது பத்திரிகையைப் பயன்படுத்திக் கொள்ளும்படி கூறினார். இந்த கால கட்டத்தில் ஜானகிராமனுக்கும் எனக்கும் இருந்த நெருக்கம் மிகுந்தது. கு.ப.ரா., ஜானகிராமன், கரிச்சான்குஞ்சு, நான் ஆகிய நால்வரும் கும்பகோணம் தொண்டர் ஷாப்பிலோ, கு.ப.ரா. வீட்டு மாடியிலோ, கணபதி விலாஸ் ஹோட்டலிலோ கூடிப் பேசிக் கழித்த மாலைகளும், இரவுகளும் எத்தனை!

கு.ப.ரா. மறைந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு என் வாழ்க்கையில் மற்றொரு திருப்பம். வியாபாரத்தில் இறங்கின எனக்குப் பெரிய வெற்றிகள் கிட்டின. ஜானகிராமன் அப்போதும் என்னை அடிக்கடி சந்திப்பது உண்டு. தீபாவளி, அமாவாசையன்று நான் செய்யும் 'குபேர பூசை'யிலும் அவர் கலந்து கொண்டது உண்டு. அந்தக் காலத்தில் நான் இருந்த சூழலை வைத்துத்தான் அவர் 'மோகமுள்'ளில் என்னை ஒரு கதாபாத்திரமாக்கிப் பார்த்தார். என்னுடைய சுபாவம் பற்றி அவர் இவ்வளவு சரியாகக் கணித்திருப்பதை இப்போதும் வியக்கிறேன்.

அப்போது 'மாதம் ஒரு புத்தகம்' வெளியீடுகள் பிரபலமாக இருந்தன. நான் அப்படி ஒரு வெளியீடு தொடங்க வேண்டும் என்று கரிச்சான்குஞ்சு சொல்லிக்கொண்டிருந்தார். ஜானகிராமனைக் கலந்தபோது மாதப் பத்திரிகையாக நடத்தலாம் என்று கூற அப்படியே முடிவு செய்தோம். 'தேனீ' இப்படித்தான் ஆரம்பமாயிற்று. கரிச்சான் குஞ்சு உள்ளூர்க்காரர்; எனக்குத் துணையாக இருந்தார். விடுமுறை நாளன்று எங்கள் வீட்டில்தான் இருப்பார். தேனீக்காக நான் போட்ட திட்டத்தைவிட, அவர் போட்ட திட்டம் மகாப் பெரிது.

தேனீக்காக விளம்பரம் சேகரிப்பதற்கென்று நான் ஜானகிராமனை அழைத்துக்கொண்டு பம்பாய்போனேன். வழியில், புனாவில் அவருடைய மாமனார்—ராணுவத்தில் காப்டன்—பங்களாவில் தங்கினோம். தேனீயில் மணிக்கொடி எழுத்தாளர்கள் பலரின் ஒத்துழைப்பு இருந்தது. புதுமைப்பித்தனையும் எழுத வைக்க வேண்டும் என்பது எங்கள் விருப்பம். அவர் தியாகராஜ பாகவதரின் 'ராஜ முக்தி' என்ற படத்திற்கு வசனம் எழுதப் புனாவுக்குப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தோம். ஆனால். அவருடைய முகவரி எங்களுக்குக் கிடைக்கவில்லை. நாங்கள் இருவரும் புனாவில் சுற்றி அலைந்து புதுமைப்பித்தன் தங்கியிருந்த இடத்தைக் கண்டுபிடித்தோம். எங்களுடைய துர்பாக்கியம். இரண்டு நாளைக்கு முந்தித்தான் அவர் முற்றிய நோயாளியாகத் திருவனந்தபுரம் சென்று விட்டதாகத் தெரிந்தது. பிறகு நாங்கள் பம்பாய்க்குச் சென்று சில நாட்கள் தங்கி விளம்பர

நிறுவனங்கள் சிலவற்றை அணுகினோம். நாங்கள் இருவருமே இத்துறைக்குப் புதியவர்கள்; யாருடைய ஆலோசனையும் கேளாமல் களத்தில் இறங்கியிருந்தோம். எங்களுக்கு விளம்பரம் கிடைக்க வில்லை; எங்களை விளம்பரம் செய்ய எங்களிடமே பணம் பறிக்க முயன்றார்கள். எல்லா வகையிலும் பம்பாய்ப் பயணம் படுதோல்வி. ஊருக்குத் திரும்பிவிட்டோம்.

தேனீ பன்னிரண்டு இதழ்களே வெளிவந்தன. ஒவ்வொரு இதழிலும் அவருடைய கதைகள் இருக்க வேண்டும் என்று விரும்பி னேன். அவ்வாறே எழுதிக் கொடுத்தார். தேனீயில் ஸீரியசாகவே வருகின்றன, லைட்டாக ஏதாவது எழுதுங்கள்' என்றேன். அவரால் முடியாது என்பது என் எண்ணம்; ஆனால், அழகான நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதிக் கொண்டு வந்து என்னை திகைக்க வைத்தார். தேனீயில் நான் எழுதியது கொஞ்சம்; ஜானகிராமனின் கைவண்ணம் தான் அதிகம்.

தேனீ ஓராண்டுதான் வாழ்ந்தது. ஏராளமான நஷ்டம் மட்டும் அல்ல, கூட்டாளி ஒருவரின் துரோகமும் சேர்ந்து பத்திரிகையை நிறுத்த வேண்டியதாயிற்று. அதற்காக என்னோடு துக்கம் கொண்டாடியவர்களில் ஜானகிராமன் முக்கியமானவர். தேனீ பற்றி என்னைவிட பெரிய கனவு கண்டவர் அவரே.

பிறகு அவர் ஆசிரியத் தொழிலை விடுத்து வானொலி நிலையத் தில் சேர்ந்தார். சேர்வதற்காக அவர் சென்னைக்குப் போகும்முன் கும்பகோணத்துக்கு என்னிடம் விடைபெற வந்தார். நான் மகிழ்ச்சி யோடு விடை கொடுத்தேன். சென்னைக்கு வரும்போது அவரைச் சந்திப்பதாய்க் கூறினேன்.

சில ஆண்டுகளில் என் வாழ்க்கையில் ஒரே அல்லோல கல்லோலம். நான் மிகவும் சாமர்த்தியமாகக் கட்டிய வியாபாரக் கோட்டை இடிந்து விழலாயிற்று. தெய்வத்தின்பால் எனக்கு இருந்த ஈடுபாடும், முயற்சியும் அதன் தொடர்பான நிகழ்ச்சிகளும் ஆழம் தெரியாத ஆழத்திற்கு என்னை இழுத்துச் சென்றுவிட்டன. தலைமை குலைந்ததால் என் குடும்பம் தத்தளிக்கலாயிற்று.

இந்த இக்கட்டான நேரத்தில்தான் நான் ஜானகிராமனைத் தேடிச் சென்றேன்.

❋ ❋ ❋

நான் சென்னைக்கு வந்த இரண்டொரு நாளில் ஜானகிராமன் ஒரு தேர்ந்த சைக்கியாட்ரிஸ்டு போல் தம் வேலையை ஆரம்பித்து விட்டார்.

அப்போது அவர் தம் 'நாலு வேலி நிலம்' படக்கதைக்கான வசனம் எழுதிக்கொண்டிருந்தார். ஆபீசிலிருந்து நடிகர் சகஸ்ர நாமத்தின் காரில் திரும்பினார். ஆபீஸ் உடைகளைக் களைந்து வேட்டி கட்டிக்கொண்டு, 'வாருங்கள், போவோம்' என்று என்னை யும் அழைத்தார்.

'நான் எதற்கு? நீங்கள் போய் வாருங்கள்' என்றேன். வெளியில்

அநாமதேயனாக அலைய எனக்கு ஆர்வம் இருந்ததே தவிர யாரை யும் சந்திக்க வேண்டும் என்ற விருப்பமே எனக்கு இல்லை.

'இல்லை, சகஸ்ரநாமம் கட்டாயம் நீங்கள் சந்திக்க வேண்டிய ஒருவர். A Perfect Gentleman. அவர் உங்கள் ரசிகர். உங்களைச் சந்தித்தால் சந்தோஷப்படுவார்' என்று வற்புறுத்தி ஜானகிராமன் என்னை அழைத்துப் போனார். சகஸ்ரநாமத்தின் இல்லத்துக்குப் போய்ச் சேர்ந்தோம்.

சகஸ்ரநாமம் நடிப்புப் பயிற்சி பள்ளி நடத்திக்கொண்டிருந்தார் என்று ஞாபகம். என்னை அறிமுகப்படுத்தியதும் மிகவும் மகிழ்ச்சி யுற்றார். தம்முடைய சட்டைப்பையில் வைத்திருந்த ஒரு கற்றைக் கடிதங்களை என்னிடம் கொடுத்து, 'இதைப் பாருங்கள்' என்றார். மாசு படிந்து கிழியத்|தொடங்கியிருந்த கடிதங்கள், சில ஆண்டுகளுக்கு முன் நான் எழுதிய 'கோடரி' என்ற கதை, 'கலைமகளி'லிருந்து கத்தரித்து எடுக்கப்பட்டது.

'இந்தக் கதை எப்போதும் என் பையில் இருக்கும். எனக்கு மனச் சோர்வு ஏற்படும்போது இந்தக் கதையை ஒருமுறை படிப்பது என் வழக்கம். உங்களைப் பார்க்க வேண்டும் என்று ரொம்ப நாளாக ஆசை' என்றார் சகஸ்ரநாமம்.

'உங்களுடைய அடுத்த டிராமா எம்.வி.வி.யை எழுதச் சொல்ல வேண்டும்' என்றார் ஜானகிராமன்.

'அதற்காகத்தானே அவரைப் பார்க்க விரும்பினேன்' என்றார் சகஸ்ரநாமம்.

இப்படி எல்லாம் அவர்கள் பேசிய உற்சாகத்தில், நான் எழுத் தாளன் என்ற பிரக்ஞை என்னுள் மூண்டது. நாடகம் எழுதுவதாய் அவர்களிடம் ஒப்புக்கொண்டேன்.

ஜானகிராமன் யாரையும் எதனையும் மிகைப்படுத்தி வருணிப்பார் போற்றுவதும் அப்படித்தான், தூற்றுவதும் அப்படித்தான். ஆனால் அவர் சகஸ்ரநாமத்தைப் பற்றிக் கூறியது சரியான உண்மை.

❊ ❊ ❊

அடைமழையாகப் பிடித்துக் கொண்டிருந்தது. தெருக்களில் அதிகப்படியாகவோ அநாவசியமாகவோ நடமாட்டம் இல்லை. ஆகை யால் நான் தனியாக வெளியே போய்விடுவேன் என்ற கவலை இல்லா மல் ஜானகிராமன் ஆபீசுக்குப் போகலானார். படிப்பதற்கு எனக்கு நிறைய நேரம் கிடைத்தது. எழுத வேண்டும் என்று தோன்றவில்லை.

'நீங்கள் ஏன் எழுத முயற்சி செய்யக் கூடாது? எழுத்தில் concentrate செய்தால் அது உங்களுக்கு ஒரு நல்ல distraction ஆக இருக்குமே' என்றார் ஒரு நாள்.

'நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. என் மனதில் நடப்பதை டயரி போல் எழுதி வை என்று பிச்சமூர்த்தியும் சொன்னார். அது பிரசுரம் ஆகாவிட்டாலும் யாருக்காவது பயன்படும் என்றார். ஆனால் எழுதுவதற்கான அமைதியை எனக்கு மனம் தரவில்லை'.

'மனக்குழப்பம் என்கிறீர்கள்; உங்கள் அனுபவங்களைக் கதை போல் தெளிவாய்ச் சொல்கிறீர்களே, சொல்வது போலவே நீங்கள் ஏன் எழுதக்கூடாது?'

'பேசுவது வேறு, எழுதுவது வேறு. எழுதுவதற்கு மிக அதிகமான concentration தேவைப்படுகிறது. எழுத உட்காராதபடி மனசில் குளறுபடி நடந்தபடி இருக்கிறதே!'

'concentration ஆல் அந்தக் குளறுபடியை அடக்க முயலுங்கள் என்றுதான் நான் சொல்கிறேன்.'

என்னுடைய சங்கடத்தை அவருக்குப் புரியும்படி சொல்ல என்னால் முடியவில்லை என்று தோன்றியது. 'என் நிலைமை எனக்கே வினோதமாக இருக்கிறது. மனசுக்குள் நான் பைத்தியம்; வெளியே சித்த சுவாதீனம் உள்ளவன் போல் நிர்வாகம் செய்கிறேன். இது எப்படிச் சாத்தியம் ஆகிறது என்று எனக்கே ஆச்சரியமாய் இருக்கிறது. எழுத்து மனத்தைப் பொறுத்த விஷயம் ஆயிற்றே!'

'இவ்வளவு தெளிவாய்ப் பேசுகிறீர்கள்; இந்த உறுதியோடு ஏன் எழுதக்கூடாது? நீங்களும், நானும் clarityயோடு எழுதக்கூடியவர்கள். communication கலையின் முதல் தேவை என்பதை தெரிந்து எழுதுகிறவர்கள். நாம் இருவரும் சேர்ந்து எத்தனையோ திட்டம் போட்டோம். இப்போதும் நாம் அதைச் செய்ய முடியும்'.

பல ஆண்டுகளுக்கு முன் நாங்கள் கண்ட கனவுகளின் எதிரொலியாக அவர் பேசினார்- கு.ப.ரா.வைப் போல் ஜானகிராமனுக்கும் சன்னக் குரல். இருவருமே சற்றே நாசி வழியாகப் பேசுவது போல் இருக்கும். இருவருமே குரலைத் தூக்கிப் பேசியதை நான் கேட்டதில்லை. ஆனால், இருவருடைய பேச்சிலும் மென்மை இருந்தாலும் அழுத்தம் இருக்கும்.

எனக்குத் தூக்கம் கலைவதுபோல் இருந்தது. அவர் ஆபீசுக்குப் போன பிறகு, கடிதம் எடுத்துக்கொண்டு எழுத முயலுவேன். கிறுக்குக் கிறுக்கிக் கிழித்துப் போட்டதுதான் மிச்சம். கொஞ்ச தூரம் மனம் என்னோடு வரும்; திடீரென்று தலையில் கை வைத்துக்கொண்டு ஒப்பாரி வைக்கும். ஆபாசமான காட்சிகளைக் காட்டி ஆனந்தப்படும். கையில் பேனாவும், எதிரில் கடிதமும் இருப்பதை மறந்து போனேன்.

நாளாக ஆக, இது பெரிய தொல்லை ஆகிவிட்டது. மாலையில் திரும்பியதும் ஜானகிராமன், 'ஏதாவது எழுதினீர்களா?' என்று கேட்டால் என்ன சொல்வது என்று தப்பு செய்த மாணவன் போல் எனக்குச் சங்கோசமாக இருந்தது.

கிழித்துப்போட்ட கடிதங்களை ஜானகிராமனிடம் காட்டி, 'நான் எழுத முயற்சி செய்து குப்பைதான் சேர்த்திருக்கிறேன்' என்றேன்.

'அதனால் என்ன? உங்களால் முடியும், முடியும் என்ற நம்பிக்கையால் எழுதுங்கள். இது உங்களுடைய வளர்ச்சியில் முக்கியமான கட்டம். கட்டாயம் வெற்றி கிட்டும். பிச்சமூர்த்தி சொன்னபடியாவது, உங்கள் மனப் போக்குகளை எழுதலாமே.'

'எழுதி என்ன செய்வது? புராணக் கதை, புரியாத கதை என்பார்கள், அச்சேறாது'.

'வெளியாவதைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? அது வேண்டாம், உங்களுக்குச் சுலபமாக சிறுகதை, கட்டுரை எழுதுங்களேன்.'

மறுநாளே அவர் என்னைத் தம்மோடு ரேடியோ ஸ்டேஷனுக்கு அழைத்துப் போனார். அங்கே மீ. ப. சோமு முதலிய நண்பர்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். ஷேக்ஸ்பியரின் வெனீஸ் வர்த்தகன் கோர்ட் ஸீன் மொழிபெயர்ப்பு அவசரமாக மறுநாளே தேவை என்று என்னைச் செய்து தருமாறு கேட்டார்கள்.

அன்று இரவு வெகு நேரம் கண் விழித்திருந்து தமிழாக்கம் செய்து கொடுத்தேன். அவசரம் எழுதியாக வேண்டிய நிர்ப்பந்தம். மனம் ஒன்றி மூன்று மணி நேரம் எழுதிக் கொடுத்தேன். அடுத்த நாளே அது ஒலி பரப்பாயிற்று.

முயன்றால் என்னால் எழுத முடியும் என்ற நம்பிக்கை என்னுள் தழைத்தது.

❋ ❋ ❋

மழை கொட்டிக் கொண்டே இருந்தது. வெட்டவெளி தண்ணீரைக் கொட்டி பூமியைக் குட்டை ஆக்கிவிடும் போலிருந்தது. எனக்கு மழை எப்போதும் வசீகரம். அதனுடைய மெல்லிசை எனக்குப் பிடிக்கும் வல்லிசையும் பிடிக்கும். அதற்குப் பயந்து கூரையடியிலும், மரத்தடியிலும் பதுங்கியவர்கள் பரிகசிக்கும்படி கொட்டு மழையில் சொட்டச் சொட்ட நனைந்தபடி மெல்ல நடந்து போவதென்றால் மிகவும் பிடிக்கும். இன்று ஜானகிராமனின் வீட்டு மாடியிலிருந்தபடி மழையின் ஆர்ப்பாட்டத்தோடு ஒன்றிப் போகிறேன். கீழே இறங்கி ரயில்வே ஸ்டேஷனுக்கு நடக்கலாமா என்றோர் எண்ணம் வருகிறது.

ஒரு காரணமும் இல்லாமல் எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணியின் நினைவு வந்தது. கணவனை இழந்து வேறொருவனை ஏற்றவள்; பல ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டு குழந்தைகளுடன், இப்படி ஓர் அடைமழையில் மின்சாரம் செத்த நள்ளிரவில், கதவைத் தட்டி என்னை எழுப்பி உதவி கேட்டாள். இயன்றதைச் செய்தேன். மடியும் ஆசாரமுமாக அவள் நடந்துகொண்டதால் எனக்கு அவளிடம் அப்போது கோபம் உண்டாயிற்று,

அந்த நள்ளிரவு நாடகம் இப்போது தரிசனம் ஆயிற்று. அப்படியே கதைக் கருவாய் உருவாயிற்று; உடனே பிறப்பதற்காக வழி தேடி உதைத்தது. ரிஷிகர்ப்பம்!

கடிதத்தை எடுத்துக் கதையைக் கிறுக்கத் தொடங்கினேன்.

ஜானகிராமன் எதையும் ஒரே முறை எழுதுவார்; எழுதியதைப் படித்தும் பார்க்கமாட்டார். Processing பூராவையும் மனதிலே செய்து கொண்ட பிறகே எழுத உட்காருவார். எனக்கு அப்படி அல்ல. எதையும் 2, 3, 10, 20 தடவை எழுதியாக வேண்டும். படித்துப் படித்துச் செதுக்கியபடி இருப்பேன். அவருடைய கைப் பிரதியைப்

பார்த்தால் ஆயிரக்கணக்கான எட்டுக்கால் பூச்சிகள் ஒன்றின்மீது ஒன்று விழுந்தடித்துக்கொண்டு ஓடுவதுபோல் இருக்கும். எனக்கு கைப்பிரதி பார்க்க அழகாக இருக்க வேண்டும்.

அப்பாடா, நான் ஒரு சிறுகதை எழுதிவிட்டேன்! உலகத்துக்கு விமோசனம் பிறந்துவிட்டது!

அவருக்கு கதை மிகவும் திருப்தியாக இருந்தது. 'இந்த talentஐ வீணாக்குகிறீர்களே?' என்று வழக்கம்போல் வருந்திவிட்டு,' யாருக்கு அனுப்பலாம்?' என்று கேட்டார்.

'கல்கிக்கு'

கதையை அவர் எடுத்து வைத்துக்கொண்டார்.

'காலையில் நான் போஸ்ட் செய்கிறேனே?' என்றேன்.

'ஆபீஸ் போகும்போது நான் செய்கிறேன்' நான் தபாலில் சேர்க்கமாட்டேனோ என்ற சந்தேகம் அவருக்கு.

கல்கியில் 'மழை' என்ற பெயரோடு அந்தக் கதை வெளிவந்தது

ஜானகிராமன் வீட்டில் சுமார் இருபது நாள்கள் தங்கியாகிவிட்டது. இப்படித் தங்குவது என் இயற்கைக்கு ஒவ்வாத காரியம். இப்படித் தங்க முடிந்தது என்றால் அவர்மட்டும் அல்ல, குடும்பத்தினர் எல்லோருமே அவ்வளவு அன்போடு பழகினார்கள். ஆனால், தீபாவளி நெருங்க, நெருங்க, 'இவர்களை அளவு மீறி தொல்லைபடுத்து கிறோம்' என்ற எண்ணம் வலுத்து வந்தது. தீபாவளிக்கு ஒரு வாரம் தான் இருக்கிறது என்றதும், ஜானகிராமனிடம், 'நாளைக்கு ஜனதாவில் ஊருக்குப் புறப்படுகிறேன்' என்றேன்.

திகைத்துப் போனவர், 'என்னது, ஊருக்குப் போய் என்ன செய்யப் போகிறீர்கள்? இங்கே மித்திரனில் சொல்லி இருக்கிறேன், எங்காவது வேலையில் சேர்ந்துவிடலாம்', என்று அப்போதும் கட்டாயப்படுத்தினார்.

நான் இணங்கவில்லை. 'தீபாவளிக்கு நான் இல்லாமல் குழந்தைகள் தவித்துப் போவார்கள்'' என்று நான் சொன்னது ஓர் உண்மை. ஊரில் புதுமையான அல்லல்களும் என்னை எதிர்பார்த்துத் தவிக்கின்றன என்ற மற்றோர் உண்மையை நான் அவரிடம் சொல்லவில்லை. மறுநாள் ஊருக்குப் புறப்பட்டேன்.

இந்த நண்பர் இப்போது எனக்கு இல்லை என்றாகிவிட்டார். என்னைப் பற்றி அவர் எழுதுவார் என்று நான் எண்ணியிருந்தேன். கெட்டிக்காரர், என்னைவிட இளையவர், என்னை முந்திக்கொண்டு விட்டார்.

(யாத்ரா தி ஜானகிராமன் நினைவுமலர்-1983ல் இருந்து சில பகுதிகள். யாத்ராவின் இக்கட்டுரை எம்.வி.வி.யின் இலக்கிய நண்பர்கள் என்ற நூலிலும் இடம் பெற்றுள்ளது.) OO

திரப் போராட்டம் உச்சகட்டத்தை எய்திய காலம்; 1940 ஆம் ஆண்டு மே—ஜுன் மாதம்; இச்சமயத்தில் பு. பி.யின் குழந்தை (தினகரிக்கு முந்திய பெண் மகவு) இறந்துவிடுகிறது; சகிக்க முடியாத துன்பத்தில் மனம் வெறுத்து எழுதிய மனைவியின் கடிதத்திற்கு தமது 3-6-40 பதிலில் பு.பி. இவ்வாறு எழுதுகிறார்:

> என் ஏமாற்றம் எவ்வளவு இருக்கும் என்று கவனித்துப்பார்; இப்படியிருந்தும் தற்கொலை பற்றிப் பேசுகிறேனா? அது கோழைத்தனமான செய்கை; தவிரவும் உடம்பை வேண்டுமானால் போக்கடித்து விடலாம், மனசைக் கொன்றுவிட முடியுமா? உடம்பின் மூலம்தான் மனம் இயங்குகிறது; அந்த இயக்கத்தினாலும், காலம் என்ற மருந்தினாலுமே கவலைகள் சாகும்.

**இந்த வார்த்தைகளை முன்பே படிக்கும் வாய்ப்பு நமது 'ஆத்மாநாம்'களுக்குக் கிட்டியிருந்தால் பு. பி.யின் கருத்துப்படி அவர்கள் நடந்திருந்தால்....? இவ்வாறு என் எண்ணங்கள் ஓடுகின்றன.**

★

அடிமைத்தனத்தின் எதிரியான புதுமைப்பித்தன் நாட்டு விடுதலைப் போரில் பங்கேற்றுச் சிறை செல்லவும், சிறை வாழ்க்கையின் துன்பங்களை அனுபவிக்கவும் தயாராக இருந்தார்; மாபெரும் எழுத்தாளராக மட்டுமன்றி, மகத்தான தேசபக்தராகவும் திகழ்ந்தார் என்பதை அவரது 11-9-40 கடிதம் காட்டுகிறது.

> இனி கூடிய சீக்கிரத்தில் சத்தியாக்கிரகம் ஆரம்பம் ஆனாலும் ஆகலாம். ஆரம்பிப்பது நிச்சயம். சத்தியாக்கிரகம் ஆரம்பமானால், முன்னையோ பின்னையோ, நான் அதில் கலந்து கொள்வது நிச்சயம். உன்னை யாரிடம் கொண்டு விட்டுச் செல்வேன் என்பதுதான் என் கவலையாக இருக்கிறது. நீயும் அதில் ஈடுபட ஆசைப்படலாம். அப்படி படுவாய் என்பதும் நான் எதிர்பார்க்கும் விஷயமே.

'செய் அல்லது செத்துமடி' என்பதை முழக்கமாகக் கொண்ட சத்தியாக்கிரகப் போரில் பங்கேற்க பு.பி. தயாராக இருந்தார், ஆனால், நமது மதிப்புக்குரிய ஒரு சில மணிக்கொடி எழுத்தாளர்கள் மேலைய கலாசாரச் சிந்தனைகளில் ஊறிப்போனவர்கள்—டி. எஸ். எலியட், W.H. ஆடன், ஜேம்ஸ் ஜாய்ஸ் பாதையைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றியவர்கள்— 'சிறையில் நல்ல டிபன் கிடைக்குமா? ஸ்வீட், காரம், காபி கிடைக்குமா? அப்படியானால் சத்தியாக்கிரகம் செய்யத் தயார்' என்று தேசவிடுதலை போராட்டத்தை எள்ளி நகையாடியது உண்டு. இதை சத்தியாக்கிரகப் போரில் சிறை சென்ற மணிக்கொடி எழுத்தாளர் சி. சு. செல்லப்பா அவர்கள் மிகுந்த வேதனையுடன் என்னிடம் ஒரு முறை கூறியிருக்கிறார்.

★

1946 முதல் பு. பி. சினிமா கதை வசனகர்த்தா ஆனார். கையில் கொஞ்சம் தாரா்ளமாகப் பணம் புரண்டது; கடன்கள் அடைக்கப்பட்டன; இச்சமயத்தில் தினகரி பிறந்தாள்; குடும்பத்

தில் மகிழ்ச்சி துளிர்விடத் தொடங்கியது. ஆனால், அதேவேளை பு.பி.யின் உடல்நலம் கெடத் துவங்கியது; திரைப்படத் துறையில் பி. எஸ். ராமையா போன்ற நண்பர்களும் இவருக்குப் போட்டியாகச் செயல்பட்டனர். எனினும் பு.பி. மனம் தளரவில்லை. காமவல்லி என்ற படத்திற்கு கதை வசனம் எழுதியதுடன், சென்னையில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டிலும் இயக்கத்திலும் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்கேற்றார். 31-8-46 கடிதத்தில் பு.பி. இவ்வாறு கூறுகிறார்:

> எழுத்தாளர் மாநாடு ஒன்று பட்டணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து, காரியக் கமிட்டியில் என்னையும் ஒரு மெம்பராகச் சேர்த்திருப்பதாகக் கடிதம் எழுதியிருந்தார்கள். நான் போயிருந்தேன்.

இந்தப் பதினைந்து கடிதங்களில் இது ஒரு முக்கியமான அம்சம். எழுத்தாளர்களின் நல உரிமைகளிலும், இயக்கத்திலும், பு. பி. அக்கறை கொண்டிருந்தார். அமைப்பு ரீதியில் இணைந்து பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதை இன்றைய படைப்பாளிகள் கருத்தில் கொள்ள வேண்டும்.

★

(இந்த இதழில் இடம்பெறும் தி. க. சி. பக்கம் இப்பகுதிக்காகவே எழுதப்பட்டதல்ல, அவரது உடல்நலக் குறைவு காரணமாக ஏற்கனவே எழுதப்பட்ட சிறிய விமர்சனப்பாணி கட்டுரையொன்று அவரின் அனுமதியுடன் சுருக்கமாக இங்கே தரப்பட்டுள்ளது. ஆர்.)

---

ஏன் எழுதுகிறேன்?...

(42-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கலைவடிவம்தான் வடிவம். இதை ஒரு மரச்சட்டமாகச் செய்து இறுகச் செய்து விடுகிறார்கள் இலக்கியச் சட்டம் சேர்க்கிற தச்சர்கள். அதை வைத்துக்கொண்டு பிறகு வரும் கலை வடிவங்களையும் பிறருடையவற்றையும் அதிலே பொருத்தப் பார்க்கிறார்கள். தானே வடிந்த வடிவத்தை, சட்டத்தில், திருவாசியில் அடைக்க முடியாது. இப்படி அடைத்து, சமஸ்கிருத நாடகத்தை வளரவிடாமல் அடித்த ஒரே பெருமை தச்சர்களுக்கு உண்டு. சமஸ்கிருத நாடகம் சூம்பிப்போனதற்கு, பல காரணங்களில் இதுவும் ஒன்று.

அதற்காகத்தான் மீண்டும் சொல்கிறேன்; கலை வடிவம் என்னுடையது; என் தவத்தின் பெருமையைப் பொறுத்தது; மூளியும் அதன் பெருமை; சட்டம் போட்டு என்னை பயமுறுத்காதீர்கள் என்று. நான் உங்களுக்காக எழுதுகிறதைப் பற்றி நீங்கள் அந்த தீர்ப்பெல்லாம் சொல்லலாம். நான் கவலைப்படவில்லை, வாலைப் போட்டு விட்டு பல்லியைப்போல் தப்பி விடுவேன்.

நன்றி : எழுத்து

○○○

## இருட்டு ராணிகள்

கம்பத்தில் தொங்கும்
குழல் விளக்குகளுக்கு
இருட்ட இருட்ட,
அப்படி என்ன ஒரு இறுமாப்பு?
அரிதாரம் பூசிய முகத்துடன்
தனக்கடியில் அரசாள
ஒரு சின்ன ஒளிவட்டம்,
நடப்பவரின் காதுகளில்
நறநறவென ரீங்காரமிடும்.
ஈரடி உடம்பை ஒளிநடுக்கத்தில்
மறைத்துக் கொள்ளும், உயரத்தில்.
இருள் மடிந்து விடிந்தவுடன்
கடல் விட்டு, தலைவிரித்து
ஈரத்தோடு எழுந்த சூரியப்பெருந்தகை,
ஊரெங்கும் வாரி வழங்கும்
பொன்னொளிப் புதையலை
வெளிச்ச விரிப்பின்
சத்திய நெருப்பில்
குழல்கள் முகம் செத்து, வெளிறி
தன் சுய உருவச் சிறுமையை
ஒப்புக் கொண்ட குற்றவாளியாய்
உம்மெனத் தொங்கும், ஒளி வறண்டு.
அதன் உள்ளத்தில் மட்டும்
ஒரு வெறிக் கனல்,
காத்திருக்கும்
உலகம் இருட்டுவதற்காக.

*- எஸ். வைதீஸ்வரன்*

For Private Circulation

# ELAKKU Quarterly Magazine

## 'இலக்கு' கா. லா. ண். டி. த. ழ். பற்றி பிற இதழ்களில்...

'இலக்கு' ஒரு காத்திரமான இலக்கிய சஞ்சிகை. இதற்கு முன்னர் நான்கு இதழ்களை வெளியிட்டுள்ளது... 'இலக்கு' குறிப்பிட்ட இதழ்களே இலங்கைக்கு வருவதால் ஆர்வமுள்ளோர் தேடியெடுத்துப் படிக்க வேண்டும்.

**- தினகரன் (இலங்கை) 17-12-1995**

'இலக்கு' என்றொரு காலாண்டிதழ் முதலாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டிருக்கிறது, **'மார்க்சியமும் தலித் இயக்கமும்'** என்ற ஞானியின் கட்டுரையோடு. இதற்கு முன் புதுமைப் பித்தன் நினைவு மலர், பாரதி நினைவு மலர், நா.பா. நினைவு மலர், டானியல் நினைவு மலர் என்று ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு ஒவ்வொரு இதழும் வந்திருப்பது நிறைவைத் தருகிறது.

**- சுபமங்களா, டிச. 1995**

சென்ற மாதம் தன்னுடைய முதலாம் ஆண்டு நிறைவை சிறப்புமலராக 'இலக்கு' வெளியிட்டிருந்தது... நடுநிலையான நூல் விமர்சனங்கள், இலக்கியச் சந்திப்புக்கள், ஆய்வுக் கட்டுரைகள் அனைத்துமே இலக்கியம் பொக்கிஷங்கள் தான்!

**- பூங்குயில், ஜன. 1996**

கடந்துபோன காலங்களில் நம் கண்ணுக்குத் தெரிந்த அற்புதமான சிற்றிதழ் 'இலக்கு'... நூல் விமர்சனங்கள் இதில் எவ்வித பாரபட்சமுமின்றி முகத்துக்கு முன்னே சொல்வது போல் எழுதியிருக்கிறார்கள். ஒரு முழுமையான கருத்துக்கணிப்பில் 'இலக்கு' இலக்கிய பசியில் தவித்திருப்பவர்களுக்கு நல்ல விருந்து.

**- மன்னுயிர், பெப். 1996**

Wrapper printed at AR prints
375-8 Arcot Road, MADRAS - 600 024.